தினபூமி
thinaboomi.com
பூமி: 32 சுற்று: 68 மாசி 03
Regd. No.TRY/050/2023-2025 RNI Regn. No.61511/94
திருச்சி, ஞாயிறு, பிப்ரவரி 15, 2026
▸ சென்னை ▸ மதுரை ▸ திருச்சி ▸ கோவை ▸ நெல்லை ▸ சேலம் ▸ வேலூர் ▸ புதுச்சேரி
பக்கம் 8 ₹ 3.00



**வட கொரியாவின் அடுத்த அதிபராக தனது மகளை தேர்வு செய்த கிம் ஜாங் உன்?**

....2-ம் பக்கம்

**புல்வாமா தாக்குதல் 7-ம் ஆண்டு நினைவுதினத்தில் வீரர்களின் தியாகத்தை நினைவுகூர்ந்த பிரதமர்**

...3-ம் பக்கம்

**டி-20 உலகக்கோப்பை லீக்: இந்தியா-பாகிஸ்தான் இன்று கொழும்புவில் பலப்பரீட்சை**

....6-ம் பக்கம்





● முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று, ஜோலார்பேட்டையிலிருந்து திருப்பத்தூர் செல்லும் வழியில், பெருந்திரளான பெண்கள் சந்தித்து, கலைஞர் மகளிர் உரிமைத்தொகை பெறும் மகளிருக்கு 5 ஆயிரம் ரூபாய் வங்கிக்கணக்கில் வரவு வைக்கப்பட்டதற்காகவும், திராவிட மாடல் 2.0 ஆட்சிக் காலத்தில், கலைஞர் மகளிர் உரிமைத்தொகை 2 ஆயிரம் ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும் என்று அறிவித்தமைக்காகவும் இனிப்புகளை வழங்கி நன்றி தெரிவித்துக் கொண்டனர்.

## வரும் தமிழ்நாடு சட்டப்பேரவை தேர்தலில்

# 200 தொகுதிகளில் தி.மு.க. நிச்சயம் வெற்றி பெறும்

### திருப்பத்தூரில் நடந்த தி.மு.க. வாக்குச்சாவடி குழு பயிற்சி கூட்டத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பேச்சு

திருப்பத்தூர், பிப். 15-

**நடைபெறவுள்ள சட்டப்பேரவை தேர்தலில் 200 தொகுதிகளில் தி.மு.க. நிச்சயம் வெற்றி பெறும் என்றும் 7-வது முறையாக தமிழ்நாட்டில் தி.மு.க. ஆட்சி அமைக்கும் என்றும் திருப்பத்தூரில் நடந்த தி.மு.க. வாக்குச்சாவடி குழு பயிற்சி கூட்டத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.**



நாம் போராடுவது தமிழ்நாட்டின் வெற்றிக்காகத்தான். மக்களுக்கு சர்ப்ரைஸ் கொடுத்து துரோகிகளுக்கு ஷாக் கொடுத்துள்ளோம். இதுதான் என ஸ்டைல். புறவாசல் வழி தமிழகத்திற்குள் வர நினைக்கும் பா.ஜ.க.வை தடுத்து நிறுத்த வேண்டும். தமிழ்நாட்டு அணியா? டெல்லி அணியா? எனும் போரில் விருப்பு வெறுபின்றி கூட்டணியை ஆதரிக்க வேண்டும்.

- முதல்வர் மு.க.ஸ்டாலின்

**ஏப்ரல் மாதம் தேர்தல்...**

தமிழக சட்டசபை தேர்தல் ஏப்ரல் மாதம் நடைபெற வாய்ப்பு உள்ளது. தேர்தலுக்கு இன்னும் ஓரிரு மாதங்களே உள்ள நிலையில் அரசியல் கட்சிகள் தேர்தல் நடவடிக்கைகளை தீவிரப்படுத்தி வருகின்றன. பிரச்சாரம், பொதுக்கூட்டம், கூட்டணி, தொகுதி பங்கீடு, நலத்திட்டப்பணிகள், கட்சி நிர்வாகிகளுடன் ஆலோசனை என பல்வேறு நடவடிக்கைகளை அரசியல் கட்சிகள் மேற்கொண்டு வருகின்றன.

**பயிற்சி மாநாடு....**

தமிழக சட்டசபை தேர்தலில் தி.மு.க. கூட்டணியில் காங்கிரஸ், ம.தி.மு.க., விடுதலை சிறுத்தைகள், இந்திய கம்யூனிஸ்டு, மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு உள்பட பல்வேறு கட்சிகள் இடம்பெற்றுள்ளன. இந்நிலையில், திருப்பத்தூர் மாவட்டம் ஜோலார்பேட்டை பொன்னேரியில் தி.மு.க. வடக்கு மண்டல 47 தொகுதி வாக்குச்சாவடி குழு பயிற்சி மாநாடு நேற்று நடைபெற்றது. இதில் தி.மு.க. தலைவரும், முதல்வருமான மு.க.ஸ்டாலின் கலந்து கொண்டார்.

**அடுத்தும் தி.மு.க. ஆட்சி....**

இந்நிகழ்ச்சியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பேசியதாவது, கருப்பு சிவப்பு துண்டுடன் தேர்தல் களத்திற்கு தயாராக இருக்கும்போது உற்சாகம் டபுள் ஆகிறது. அடுத்து அறிவிக்கும் திட்டங்கள், கோவை, மதுரை பயிற்சி கூட்டங்களிலும் இந்த எனர்ஜி கூடிக்கொண்டு போகும். தமிழகத்தின் நிரந்தர டிரெண்ட் கருப்பு, சிவப்புதான். உங்கள் நம்பிக்கையை பார்க்கும் போது அடுத்தும் தி.மு.க. ஆட்சிதான் என மக்கள் சொல்வது தெரிகிறது.

**வரலாற்று வெற்றியாக.**

சட்டசபை தேர்தலில் வெற்றிபெற்று 7வது

(கடைசி பக்கம் பார்க்க)

# திருப்பத்தூரில் முதல்வர் ஸ்டாலினுக்கு பொதுமக்கள் உற்சாகமாக வரவேற்பு

திருப்பத்தூர், பிப். 14-

**திருப்பத்தூர் மாவட்டம் சென்ற முதல்வர் ஸ்டாலினுக்கு ஜோலார்பேட்டையில் சாலையில் தன்னை வரவேற்கக் காத்திருந்த மக்களை நேரில் சந்தித்துப் பேசினார். அப்போது வழிநெடுக பொதுமக்கள், பெண்கள் முதல்வருக்கு உற்சாக வரவேற்பு அளித்தனர்.**

திருப்பத்தூர் மாவட்டம் ஜோலார்பேட்டை அருகே தி.மு.க. வடக்கு மண்டல வாக்குச்சாவடி முகவர்கள் பயிற்சி மாநாடு நேற்று நடைபெற்றது. இதில் முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆலோசனை வழங்கினார். முன்னதாக சென்னை சென்ட்ரல் ரயில் நிலையத்தில் இருந்து ரயில் மூலம் முதல்வர் மு.க.ஸ்டாலினை திருப்பத்தூருக்கு வழி அனுப்பி வைத்தனர்.

முன்னதாக, சென்னை சென்டிரல் ரயில் நிலையம் வரும் வழியில் மக்கள் பெரும் திரளாக வந்து மகளிர் உரிமைத்தொகையை முன் கூட்டியே வழங்கியதற்கு நன்றி தெரிவித்து அவருக்கு உற்சாக வரவேற்பு அளித்தனர். பின்னர், சென்னையில் இருந்து நேற்று காலை ரயில் மூலம் திருப்பத்தூர் புறப்பட்டார் தமிழக முதல்வர் ஸ்டாலின். அவருக்கு அரக்கோணம் ரயில் நிலையத்திலும் ஏராளமான தி.மு.க. தொண்டர்கள் காத்திருந்து உற்சாக வரவேற்பு அளித்தனர்.

திருப்பத்தூர் மாவட்டம் சென்ற முதல்வர் ஸ்டாலின், ஜோலார்பேட்டையில் சாலையில் தன்னை வரவேற்கக் காத்திருந்த மக்களை நேரில் சந்தித்துப் பேசினார். வழிநெடுக, மகளிர் உரிமைத் தொகையாக ரூ.5000 வரவு வைக்கப்பட்டதற்கு, ஏராளமான பெண்கள் முதல்வருக்கு நன்றியை தெரிவித்துக் கொண்டனர்.

## இலங்கை நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்ட

# 9 தமிழக மீனவர்கள் தாயகம் திரும்ப நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்

### மத்திய அரசுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம்

கொழும்பு, பிப். 15-

**இலங்கை கடற்படையினரால் சிறைப்பிடிக்கப்பட்ட 12 தமிழக மீனவர்களில், 9 மீனவர்கள் யாழ்ப்பாணம் நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்ட நிலையில் மூன்று மீனவர்களுக்கு ஆறு மாத கடுங்காவல் சிறைத்தண்டனையும், இலங்கை ரூபாய் மதிப்பில் தலா 11.60 லட்சம் அபராதமும் விதிக்கப்பட்டுள்ளதை சுட்டிக்காட்டி, விடுவிக்கப்பட்ட மீனவர்கள் உடனடியாக தாயகம் திரும்ப உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வலியுறுத்தி முதல்வர் மு.க.ஸ்டாலின் மத்திய ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கர் கடிதம் எழுதியுள்ளார்.**

அக்கடிதத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் கூறியிருப்பதாவது:- இலங்கை கடற்படையினரால் சிறைப்பிடிக்கப்பட்ட ராமநாதபுரம் மாவட்டம், மண்டபத்தைச் சேர்ந்த 3 மீனவர்கள் மற்றும் 28.12.2025 அன்று மயிலாடுதுறை மாவட்டத்தைச் சேர்ந்த 9 மீனவர்கள் என மொத்தம் 12 தமிழக மீனவர்களில், 9 மீனவர்கள் விடுவிக்கப்பட்டுள்ளனர். மூன்று மீனவ படகு ஓட்டுநர்களுக்கு ஆறு மாத கடுங்காவல் தண்டனையும், இலங்கை ரூபாய் மதிப்பில் தலா 11.60 லட்சம் அபராதமும், அபராதத்தை செலுத்தத் தவறும் பட்சத்தில் கூடுதலாக மூன்று மாத சிறைத்தண்டனையும் விதித்து தீர்ப்பு அளித்துள்ளது.

இலங்கை நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்ட 9 மீனவர்களும் 05.02.2026 அன்று மிரிஹானா தடுப்பு மையத்திற்கு மாற்றப்பட்டுள்ளனர். தாயகம் திரும்புவதில் உள்ள நடைமுறை தாமதம் காரணமாக அவர்கள் தொடர்ந்து காவலில் வைக்கப்பட்டுள்ளனர். இலங்கை நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்ட நம் நாட்டு மீனவர்கள் அங்கு சந்திக்கும் கடினமான சூழ்நிலையையும், மீனவர்களின் குடும்பங்கள் இங்கு எதிர்கொள்ளும் துயரங்களையும் கருத்தில் கொண்டு, விடுவிக்கப்பட்ட மீனவர்களை விரைவில் தாயகம் திரும்ப தேவையான உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ள கேட்டுக் கொள்கிறேன். இவ்வாறு அந்த கடிதத்தில் மு.க. ஸ்டாலின் குறிப்பிட்டுள்ளார்.

## திருவள்ளூர், செங்கல்பட்டு மாவட்டங்களில்

# பிப்ரவரி 21 முதல் 26-ம் தேதி வரை இ.பி.எஸ். தேர்தல் சுற்றுப்பயணம்

சென்னை, பிப். 15

**திருவள்ளூர், செங்கல்பட்டு மாவட்டங்களில் எடப்பாடி பழனிசாமி வருகிற 21-ம் தேதி முதல் 26-ம் தேதி வரை மீண்டும் பிரச்சாரம் மேற்கொள்ள இருக்கிறார்.**



தமிழக சட்டசபை தேர்தலை முன்னிட்டு, அ.தி.மு.க. பொதுச்செயலாளரும், சட்டமன்ற எதிர்க்கட்சி தலைவருமான எடப்பாடி பழனிசாமி தமிழகம் முழுவதும் பயணம் செய்து, மக்களை காப்போம், தமிழகத்தை மீட்போம் என்ற முழக்கத்துடன் சுற்றுப்பயணம் மேற்கொண்டு வருகிறார். அடுத்தகட்டமாக, வருகிற 21-ம் தேதி முதல் 26-ம் தேதி வரை 6 நாட்கள் மீண்டும் பிரச்சாரம் மேற்கொள்ள இருக்கிறார்.

இது தொடர்பாக, அ.தி.மு.க. தலைமைக் கழகம் சார்பில் வெளியிடப்பட்டுள்ள அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:- . தி.மு.க. பொதுச்செயலாளரும், சட்டமன்ற எதிர்க்கட்சி தலைவரும், முன்னாள் முதல்வருமான எடப்பாடி பழனிசாமி, மக்களை காப்போம், தமிழகத்தை மீட்போம் என்ற உன்னத நோக்கத்தை லட்சியமாகக் கொண்டு, தமிழகம் முழுவதும் சட்டமன்றத் தொகுதி வாரியாக புரட்சித் தமிழரின் எழுச்சிப் பயணம் என்ற பிரச்சார சூறாவளி சுற்றுப்பயணம் மேற்கொண்டு வருகிறார்.

அதன் தொடர்ச்சியாக, 21-2-2026 முதல் 26-2-2026 வரை பிரச்சார சூறாவளி சுற்றுப்பயணம் மேற்கொள்ள உள்ளார். அதன்படி, 21-ம் தேதி (சனிக்கிழமை) மாலை 5 மணிக்கு ஆவடி, அம்பத்தூர் தொகுதிகளுக்கு அம்பத்தூரில் பிரச்சாரம் நடைபெறுகிறது. 22-ம் தேதி (ஞாயிற்றுக்கிழமை) மாலை 4 மணிக்கு மாதவரத்திலும், மாலை 5 மணிக்கு பொன்னேரியிலும் பிரச்சாரம் நடக்கிறது.

25-ம் தேதி (புதன்கிழமை) மதுரவாயல், பூந்தமல்லி தொகுதிகளுக்கு மாலை 5 மணிக்கு வானகரத்தில் உள்ள ஸ்ரீ வாரு வெங்கடாசலபதி பேலஸ் மண்டப வளாகத்தில் பிரச்சாரம் நடக்கிறது. 26-ம் தேதி (வியாழக்கிழமை) தாம்பரம், பல்லாவரம் தொகுதிகளுக்கு மாலை 4.30 மணிக்கு பல்லாவரம் - துரைப்பாக்கம் ரேடியல் சாலையில் பிரச்சாரம் நடக்கிறது.


இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அசாமில் ரூ.100 கோடியில் 4.2 கி.மீ தூரம் அமைக்கப்பட்ட

# அவசர கால தரையிறங்கும் சாலை: பிரதமர் மோடி திறந்து வைத்தார்

திப்ருகர், பிப். 15-

**அசாம், திப்ருகர் மாவட்டத்தில் உள்ள மோரான் புறவழிச் சாலையில் ரூ.100 கோடி மதிப்பிலான 4.2 கி.மீ கொண்ட அவசரக்கால தரையிறங்கும் சாலையைப் பிரதமர் தொடங்கி வைத்தார்.**



சபுவா விமான நிலையத்தில் பிரதமரை ஆளுநர் லட்சுமண பிரசாத் ஆச்சார்யா, முதல்வர் ஹிமந்தா பிஸ்வா சர்மா, மத்திய அமைச்சர் சர்பானந்த சோனோவால் மற்றும் மாநில அரசின் மூத்த அதிகாரிகள் வரவேற்றனர். திப்ருகரில் உள்ள மோரான் புறவழிச் சாலையில் உள்ள அவசர தரையிறங்கும் சாலையில் பிரதமர் நரேந்திர மோடி சி-130 விமானத்தில் தரையிறங்கியதால், அசாமில் இது ஒரு வரலாற்று தருணமாக மாறியது.

(கடைசி பக்கம் பார்க்க)

# அடுத்த 48 மணி நேரத்தில் வங்கக்கடலில் புதிய புயல் சின்னம் உருவாக வாய்ப்பு

சென்னை, பிப். 15-

**அடுத்த 48 மணி நேரத்தில் வங்கக்கடலில் புதிய காற்றழுத்த தாழ்வுப் பகுதி உருவாக வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.**


பூமத்தியரேகைக்கு அருகிலுள்ள இந்தியப் பெருங்கடலின் கிழக்கு பகுதிகள் மற்றும் அதனை ஒட்டிய தென்கிழக்கு வங்கக்கடல் பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல மேலடுக்கு சுழற்சி நிலவுகிறது. இதன் காரணமாக, காற்றழுத்த தாழ்வுப்பகுதி தெற்கு வங்கக்கடல் மற்றும் அதனை ஒட்டிய இந்தியப் பெருங்கடல் பகுதிகளில் அடுத்த 48 மணிநேரத்தில் உருவாகக்கூடும்.

கிழக்கு திசை காற்றின் வேக மாறுபாடு காரணமாக, வரும் 18-ம் தேதி வரை தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் வறண்ட வானிலை நிலவக்கூடும். வருகிற 19-ம் தேதி தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் லேசான மழை பெய்யக்கூடும். வருகிற 20-ம் தேதி தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.



குறிப்பாக சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம் மற்றும் செங்கல்பட்டு மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இன்று அதிகாலை வேளையில் மிதமான பனிமூட்டம் காணப்படும். சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு, விழுப்புரம், கடலூர் மாவட்டங்கள் மற்றும் புதுவையில் ஓரிரு இடங்களில் நாளை அதிகாலை வேளையில் மிதமான பனிமூட்டம் காணப்படும்.

திருவள்ளூர், சேலம், தர்மபுரி மற்றும் நாமக்கல் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் வரும் 17-ம் தேதி அதிகாலை வேளையில் மிதமான பனிமூட்டம் காணப்படும்.

## மார்க்கெட் விலை நிலவரம்



| BSE | NSE | தங்கம் | வெள்ளி | டாலர் | பெட்ரோல் |
|---|---|---|---|---|---|
| -1,048.16 | -336.10 | 1 சவரன் ₹1,17,200 | 1 கிலோ ₹280,000 | ₹90.56 | ₹100.75 |
| பாயின்ட் 82,626.76 | பாயின்ட் 25,471.10 | 1 கிராம் ₹14,650 | 1 கிராம் ₹280.00 | | டீசல் ₹92.34 |


# வட கொரியாவின் அடுத்த அதிபராக மகளை தேர்வு செய்த கிம் ஜாங் உன்?

**பியாங்யாங், பிப். 15-**



வடகொரிய அதிபர் கிம் ஜோங் உன், தனது 13 வயது மகள் கிம் ஜு யே-வை தனது அரசியல் வாரிசாக அறிவித்துள்ளதாக தென் கொரியா தெரிவித்துள்ளது.

அடுத்த அதிபராக நியமிக்கப்பட வேண்டியவர் என்ற நிலையை கிம் ஜு யே எட்டியுள்ளதாகத் தென்கொரியாவின் தேசிய உளவு அமைப்பான என்.ஐ.எஸ். தெரிவித்துள்ளது. 2012 ஆம் ஆண்டு பிறந்த ஜு யே, 2022 நவம்பரில் கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணை சோதனையின்போது முதன் முதலில் பொதுவெளியில் தோன்றினார். அதைத்தொடர்ந்து கிம் ஜு யே இப்போது பொது நிகழ்ச்சிகளில் பங்கேற்பது மட்டுமின்றி, அரசாங்கத்தின் கொள்கை முடிவுகளிலும் தனது கருத்துகளைத் தெரிவித்து வருகிறார்.

சமீபத்திய ராணுவ அணி வகுப்புகள் மற்றும் அரசு கூட்டங்களில், தனது தந்தை கிம் ஜோங் உன்னுக்கு அடுத்தபடியாக அவருக்கு மிக உயரிய மரியாதை வழங்கப்படுவதை என்.ஐ.எஸ். சுட்டிக் காட்டியுள்ளது. இந்த மாத இறுதியில் நடைபெறவுள்ள ஆளும் தொழிலாளர் கட்சியின் 9-வது மாநாட்டில், அவருக்கு அதிகாரப்பூர்வமான பதவி அல்லது பட்டம் வழங்கப்பட வாய்ப்புள்ளதாகக் கருதப்படுகிறது.

இது நடந்தால், 1948 இல் வடகொரியா உருவானது முதல் ஆண்கள் மட்டுமே ஆட்சி செய்து வந்த கிம் வம்சத்தில், முதல்முறையாக கிம் ஜு யே பெண் அதிபராக பொறுப்பேற்பார். தென்கொரிய உளவு அமைப்பின் இந்த அறிக்கை சர்வதேச அளவில் பெரும் விவாதத்தை ஏற்படுத்தி வரும் சூழலில் இது குறித்து வடகொரியா இதுவரை எந்த அதிகாரப்பூர்வ அறிவிப்பையும் வெளியிடவில்லை. தற்போது 42 வயதாகும் கிம் ஜாங் உன் கடந்த 2011 டிசம்பரில் தனது தந்தை கிம் ஜோங் இல் மறைவுக்கு பின் வட கொரிய அதிபராக பொறுப்பேற்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

### நயினார் எல்லாம் ஒரு ஆளா:
# விஜய் குறித்த விமர்சனத்திற்கு செங்கோட்டையன் காட்டம்

**சேலம், பிப். 15-**



த.வெ.க. தலைவர் விஜய் குறித்த நயினாரின் விமர்சனத்திற்கு பதிலளித்த செங்கோட்டையன் பா.ஜ.க. ஒரு கட்சியா? நயினார் நாகேந்திரன் எல்லாம் ஒரு ஆளா?'' என்று காட்டமாக தெரிவித்துள்ளார்.

சேலம் மாவட்ட த.வெ.க. நிர்வாகிகள் சந்திப்பு கூட்டம் சீலநாயக்கன் பட்டி பைபாஸ் சாலையில் உள்ள தாளமுத்து நடராஜன் திடலில் நடைபெற்றது. அண்ணா தொடங்கிய கட்சியை மு.க. ஸ்டாலின் வைத்துள்ளார். அ.தி.மு.க. தொடங்கிய கட்சியை எடப்பாடி பழனிசாமி வைத்துள்ளார் என விஜய் கூறியுள்ளது தொடர்பாக தமிழக பா.ஜ.க. தலைவர் நயினார் நாகேந்திரனிடம் கேள்வி கேட்கப்பட்டது. அதற்கு பதிலளித்த நயினார் நாகேந்திரன்,''பாவம், அவர் அனுபவமே இல்லாதவர். முதலில் வீட்டில் இருந்து வெளியே வர வேண்டும். திரிஷாவிடம் இருந்து வெளியே வரணும். வெளியில் வந்தால்தான் எல்லாமே நடத்த முடியும்'' என்றார்.

நயினார் நாகேந்திரனின் இந்த கருத்துக்கு த.வெ.க. தரப்பில் கடும் கண்டனங்கள் எழுந்து வருகிறது. இது குறித்து செய்தியாளர்கள் த.வெ.க. நிர்வாகக் குழு தலைமை ஒருங்கிணைப்பாளர் செங்கோட்டையன் செங்கோட்டையனிடம் கேள்வி எழுப்பினர். இந்த கேள்வியால் கடுப்பான செங்கோட்டையன், ''பா.ஜ.க. ஒரு கட்சியா? நயினார் நாகேந்திரன் எல்லாம் ஒரு ஆளா?'' என்று காட்டமாக தெரிவித்தார்.

# 1998 கோவை குண்டுவெடிப்பில் நூலிழையில் உயிர் தப்பினேன்
## துணை ஜனாதிபதி சி.பி.ராதாகிருஷ்ணன் பேச்சு

**டெல்லி, பிப். 15-**



1998 கோவை குண்டுவெடிப்பில் நூலிழையில் தான் உயிர் தப்பியதாக குடியரசு துணைத் தலைவர் சி.பி. ராதாகிருஷ்ணன் கூறியுள்ளார்.

கோவையில் கடந்த 1998-ம் ஆண்டு பிப்ரவரி 14-ம் தேதி தேர்தல் பிரசாரத்துக்கு வந்த பாஜக தலைவர் எல்.கே. அத்வானியைக் கொலை செய்யும் முயற்சியாக அல் உம்மா பயங்கரவாத அமைப்பினர் ஆர்எஸ்.புரத்தில் 14 இடங்களில் தொடர் குண்டு வெடிப்புகளை நிகழ்த்தி தாக்குதல் நடத்தினர். இதில் 58 பேர் கொல்லப்பட்டனர், 230-க்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்தனர். விமானம் தாமதமானதால் அத்வானி உயிர் தப்பினார்

இந்த தொடர் குண்டுவெடிப்பு சம்பவத்தில் அல்-உம்மா இயக்க நிறுவனர் பாஷா உள்பட 156 பேர் கைது செய்யப்பட்ட நிலையில், 16 பேர் கோவை மத்திய சிறையில் உயர் பாதுகாப்புப் பிரிவில் தண்டனை அனுபவித்து வருகின்றனர். 2024 டிசம்பரில் பாஷா உயிரிழந்தார். இந்த சம்பவம் குறித்து கோவையைச் சேர்ந்த குடியரசு துணைத்தலைவர் சி.பி. ராதாகிருஷ்ணன், 14 பிப்ரவரி. 1998 அன்று கோயம்புத்தூரில் நடைபெற்ற தொடர் குண்டு வெடிப்புகளில் உயிரிழந்த அப்பாவி மக்களை இந்நாளில் கனத்த மனதுடன் நினைவுகூர்ந்து எனது ஆழ்ந்த அஞ்சலியை செலுத்துகிறேன்.

அது நம் தேசத்தின் வரலாற்றில் மறக்க முடியாத, இருண்ட பக்கமாகும். அன்று, எல்.கே.அத்வானி வந்திருந்த வேளையில் நிகழ்ந்த இந்த கொடூர குண்டுவெடிப்புகள், பல குடும்பங்களின் வாழ்வில் ஆறாத காயங்களை ஏற்படுத்தி, நம் நாட்டின் மனச்சாட்சியையே உலுக்கியது. அந்த நாளின் பயமும் பதற்றமும் நிறைந்த சூழ்நிலை இன்றும் என் நினைவில் ஆறாத வடுவாகப் பதிந்துள்ளது.

அந்த குண்டு வெடிப்புகளில் ஒன்றில் அன்று நான் மயிரிழையில் உயிர் தப்பினேன். குற்றுயிரும் குலையுயிருமாய் கிடந்தவர்களை மருத்துவமனைகளில் சேர்த்து காக்க போராடிய அந்த கொடிய நிமிடங்கள் என் வாழ்வின் துயரம் மிகுந்த காலங்கள். இந்நாளில் உயிரிழந்த ஒவ்வொரு ஆன்மாவையும் பணிவுடன் நினைவுகூர்ந்து, துயரத்தில் வாழும் குடும்பங்களுடன் ஒருமித்த உணர்வில் நின்று அவர்களது துயரங்களில் பங்கெடுத்துக் கொள்கிறேன். இந்நாளில், அனைவரும் பயங்கரவாதத்திற்கு எதிரான போரில் ஒன்றுபட்டு நின்று, அமைதி, ஒற்றுமை மற்றும் தேசிய ஒருமைப்பாட்டை காக்கும் வகையில் உறுதி எடுத்துக் கொள்வோம்.'' என்று பதிவிட்டுள்ளார்.

# வங்கதேசத்தில் தேர்வு செய்யப்பட்ட புதிய அரசுக்கு அமெரிக்கா வாழ்த்து

**வாஷிங்டன், பிப். 15-**



வங்கதேசத்தில் கடந்த 2024 ஆகஸ்டில் மாணவர் போராட்டத்தால் ஷேக் ஹசீனா ஆட்சி கவிழ்ந்தது. தொடர்ந்து அமைதிக்கான நோபல் பரிசு பெற்ற முகமது யூனுஸ் தலைமையில் இடைக்கால அரசு அமைந்தது. ஆட்சி கவிழ்ந்தபின் 18 மாதங்கள் கழித்து முதல் முறையாக புதிய அரசை தேர்ந்தெடுக்க நேற்று முன்தினம் அங்கு பொதுத் தேர்தல் நடந்தது. இது வங்கதேசத்தின் 13-வது பொதுத்தேர்தல் தேர்தல் ஆகும்.

இதில், வங்கதேச முன்னாள் பிரதமர் கலீதா ஜியாவின் மகன் தாரிக் ரஹ்மான் தலைமையிலான பிஎன்பி கூட்டணி, அதன் முன்னாள் கூட்டாளியான ஜமாத்-இ-இஸ்லாமி ஆகிய கட்சிகளுக்கு இடையே நேரடி போட்டி நடந்தது. 300 இடங்களைக் கொண்ட நாடாளுமன்றத்தில் 200-க்கும் மேற்பட்ட இடங்களை தாரிக் ரஹ்மான் தலைமையிலான பிஎன்பி கூட்டணி கைப்பற்றி அறுதிப் பெரும்பான்மையுடன் வெற்றி பெற்றது. இதையடுத்து தாரிக் ரஹ்மான் வங்கதேச பிரதமர் ஆவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிலையில், வங்கதேசத்தில் புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கத்துடன் இணைந்து பணியாற்ற அமெரிக்கா ஆவலுடன் காத்திருக்கிறது என அந்நாட்டு வெளியுறவுத்துறை செயலாளர் மார்கோ ரூபியோ தெரிவித்துள்ளார். மேலும், தேர்தலில் வெற்றி பெற்ற பிஎன்பி கட்சிக்கும், அக்கட்சி தலைவர் தாரிக் ரஹ்மானுக்கு வாழ்த்துக்கள் என குறிப்பிட்டுள்ளார்.

# பரஸ்பர டிரோன் தாக்குதல்: ரஷ்யா, உக்ரைனில் இருவர் பலி

**கீவ், பிப். 15-**

உக்ரைன்- ரஷ்யா இடையிலான போரை நிறுத்துவதற்கான புதிய அமைதி பேச்சுவார்த்தை ஜெனீவாவில் அடுத்த வாரம் நடைபெற திட்டமிட்டுள்ள நிலையில் இரு நாடுகளும் மாறி மாறி டிரோன் தாக்குதல் நடத்தியதில் இருவர் உயிரிழந்துள்ளனர்.


உக்ரைனில் உள்ள கருங்கடல் துறைமுக நகரான ஒடேசாவில் உள்ள குடியிருப்பு கட்டிடம் மீது ரஷ்யா டிரோன் தாக்குதல் நடத்தியது. இதில் வயதான பெண் ஒருவர் பரிதாபமாக உயிரிழந்தார். இருநாட்டு எல்லையில் உள்ள பிரியான்ஸ்க் பிராந்தியத்தில் உக்ரைன் டிரோன் தாக்குதல் நடத்தியது. இதில் ரஷ்யாவைச் சேர்ந்த ஒருவர் உயிரிழந்தார்.

ரஷ்யாவின் எல்லையில் அமைந்துள்ள பெல்கொரோட் நகர் மீது உக்ரைன் நேற்று ஏவுகணை தாக்குதல் நடத்தியது. இதில் இருவர் கொல்லப்பட்டனர். 5 பேர் காயம் அடைந்தனர். அதனைத்தொடர்ந்து இன்று மாறிமாறி டிரோன் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. அடுத்த வாரம் ஜானீவாவில் ரஷ்யா மற்றும் உக்ரைன் தூதர்களுடன் அமெரிக்கா போர் நிறுத்தத்திற்கான பேச்சுவார்த்தை நடத்த இருக்கிறது. செவ்வாய் மற்றும் புதன் கிழமை இந்த பேச்சுவார்த்தை நடைபெற இருப்பதாக ரஷ்ய அதிபர் மாளிகை செய்தி தொடர்பாளர் தெரிவித்துள்ளார். உக்ரைன் அதிபரின் தகவல் தொடர்பு ஆலோசகரும் இந்த பேச்சுவார்த்தை நடைபெற இருப்பதை உறுதிப்படுத்தியுள்ளார்.

வாக்களிப்பது நமது கடமை

# தே.ஜ. கூட்டணிக்கு புதுச்சேரி மக்கள் தொடர்ந்து ஆதரவு அளிக்க வேண்டும்
## காரைக்காலில் அமித்ஷா பேச்சு

**புதுச்சேரி, பிப். 15-**



புதுச்சேரி மக்கள் தேசிய ஜனநாயகக் கூட்டணிக்குத் தொடர்ந்து ஆதரவு அளிக்க வேண்டும் என்று மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா கேட்டுக் கொண்டார்.

காரைக்காலில் நேற்று நடைபெற்ற பா.ஜ.க. பொதுக் கூட்டத்தில் மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா பங்கேற்று உரையாற்றினார் அப்போது பேசிய அவர், திருநள்ளாறு சனீஸ்வரர் பகவானையும், பத்ரகாளி அம்மனையும் தலைவணங்கி உரையை தொடங்குகிறேன் என்று கூறினார். உலகத்தின் மிகவும் தொன்மையான தமிழ் மொழியில் உரையாற்ற முடியவில்லை என்பதற்கு மன்னிப்பு கேட்கிறேன். இங்கு நான் வந்ததற்கு இரண்டு நோக்கங்கள் உள்ளது. மோடி - ரங்கசாமி ஆகியோர் தலைமையில் உள்ள புதுச்சேரியில் ஆட்சியில் என்ன நடந்துள்ளது என்பதே விவரிக்க வந்துள்ளேன். இரண்டாவது நோக்கம், முந்தைய ஆட்சியாளர்களின் முகத்திரையை கிழிக்க வந்துள்ளேன்.

புதுச்சேரியில் கடந்த 5 ஆண்டுகளில் சட்டம் - ஒழுங்கை சீர் செய்துள்ளோம், வளர்ச்சிப் பயணத்தைத் தொடங்கியிருக்கிறோம். மத்தியில் காங்கிரஸ் ஆட்சிக்காலத்தில் நாள்தோறும் பாகிஸ்தானிலிருந்து பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்துவார்கள். அன்றாட தாக்குதலை காங்கிரஸ் வாடிக்கையாக மாற்றியிருந்தது. இது குறித்து அவர்கள் வாய்திறக்க மாட்டார்கள்.

2019-ஆம் ஆண்டு புல்வாமாவில் பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலில் 40 சிஆர்பிஎஃப் வீரர்கள் பலியாகினர். நாட்டுக்காக இன்னுயிரை தியாகம் செய்த வீரர்களுக்கு அஞ்சலி செலுத்துகிறேன். ஆனால், மோடி வந்த பிறகு முதன்முறையாக பாகிஸ்தான் மீது வான் வழித் தாக்குதல் நடத்தப்பட்டது. தற்போது ஆப்ரேஷன் சிந்தூர் நடவடிக்கையை எடுத்து அவர்களுக்கு ஒரு முற்றுப் புள்ளி வைத்துள்ளோம் என்று கூறினார்.

தொடர்ந்து புதுச்சேரி பற்றி பேசிய அமித்ஷா, புதுச்சேரியில் அரசியல் நிலைத்தன்மை, நிலையான ஆட்சியை உருவாக்கியிருக்கிறோம். ஊழலை முடிவுக்குக் கொண்டு வந்து சுயமாக செயல்படும் அரசை உருவாக்கியிருக்கிறோம். புதுவையின் ஜவுளித் துறை புத்துயிர் பெற்று வருகிறது. முன்னாள் முதல்வர் நாராயணசாமி ஆட்சியில் புதிதாக ஒரு தொழில்கூட தொடங்கப்படவில்லை என்றார். மேலும், புதுச்சேரி மக்கள் தேசிய ஜனநாயகக் கூட்டணிக்குத் தொடர்ந்து ஆதரவு அளிக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

### காதலர் தினத்தை முன்னிட்டு
# சிறப்பு டூடுல் வெளியிட்ட கூகுள்

**நியூயார்க், பிப். 15-**



காதலர் தினத்தை முன்னிட்டு கவன ஈர்ப்புச் சித்திரம் வெளியிட்டுச் சிறப்பித்துள்ளது கூகுள் நிறுவனம்.

உலகம் முழுவதும் காதலர் தினம் நேற்று கொண்டாடப்பட்டது. காதலை ஒருவருக்கொருவர் பரிமாறிக் கொள்ளக் காதலர் தினத்தைச் சிறப்பாகக் கருதுகிறார்கள் காதலர்கள். காதலர் தினத்தில் கடற்கரை, மால்கள், பூங்கா உள்ளிட்ட இடங்களில் அதிகளவிலான மக்கள் கூடுவது வழக்கம்.

உலகின் பிரபல தேடுபொறி தளமான கூகுள் நிறுவனம் முக்கியஸ்தர்களின் பிறந்தநாள், விடுமுறை நாள்கள், முக்கிய தேதிகள் உள்பட சிறப்புத் தினங்களை அனிமேஷன்கள், ஸ்லைடு ஷோக்கள், விடியோக்கள் மற்றும் கேம்கள் உள்பட பல்வேறு வடிவங்களில் வழங்கி மக்களின் கவனத்தை ஈர்த்து வருகின்றது.

இந்த நிலையில், காதலர் தினத்தை முன்னிட்டு கூகுள் நிறுவனம் சிறப்புக் கவன ஈர்ப்புச் சித்திரம் (டூடுல்) வெளியிட்டுச் சிறப்பித்துள்ளது. இந் த டூடுல் காதல் தினத்தைக் கொண்டாடியது. கைகளால் செய்யப்பட்ட பரிசுகளின் சிறப்பை எடுத்துக் காட்டுகிறது.

நீங்கள் இதயப்பூர்வமான குறிப்பை எழுதினாலும், சுவையான விருந்தை தயார் செய்தாலும், நாம் அக்கறை கொண்டவர்களைக் கொண்டாட இது ஒரு அற்புதமான வாய்ப்பு. காதலர் தின வாழ்த்துகள். இவ்வாறு தெரிவித்துள்ளது.

### இந்தியாவுக்கு எதிரான பயங்கரவாதத்தில்
# குற்றம்சாட்டப்பட்ட 2 தலைவர்கள் வங்கதேச பொதுத்தேர்தலில் வெற்றி

**டாக்கா, பிப். 15-**



வங்கதேசத்தில் கடந்த 2024 ஷேக் ஹசீனாவின் ஆட்சி வீழ்ந்த பிறகு முகமது யூனுஸ் தலைமையில் இடைக்கால அரசு நடந்து வந்தது. இதற்கிடையே கடந்த வியாழக்கிழமை நடந்த பாராளுமன்ற தேர்தலில் தாரிக் ரஹ்மான் தலைமையிலான பிஎன்பி கூட்டணி மொத்தம் உள்ள 300 இடங்களில் 200க்கு மேல் வெற்றி பெற்று ஆட்சியை பிடித்தது. எதிர்த்து போட்டியிட்ட மற்றொரு பிரதான கட்சியான ஜமாத்-இ-இஸ்லாமி தலைமையலான கூட்டணி 71 இடங்களில் வென்று எதிர்க்கட்சி அந்தஸ்து பெற்றது.

இந்த தேர்தலில், ஒரு காலத்தில் மரண தண்டனை விதிக்கப்பட்ட மூன்று முக்கியத் தலைவர்கள் வெற்றி பெற்று நாடாளுமன்றம் செல்கின்றனர். இவர்களில் இருவர் தாரிக் ரஹ்மானின் பிஎன்பிகட்சியைச் சேர்ந்தவர்கள், ஒருவர் ஜமாத்-இ-இஸ்லாமி கட்சியைச் சேர்ந்தவர். பிஎன்பியை சேர்ந்த தலைவர் லுட்போஸ் மேன் பாபர். 2004-இல் ஷேக் ஹசீனா மீது நடத்தப்பட்ட கிரானைட் தாக்குதல் வழக்கில் இவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டிருந்தது.

மேலும், 2004 ஆம் ஆண்டு இந்தியாவின் பிரிவினைவாதக் குழுவான உல்பாவுக்கு சிட்டகாங் வழியாக கப்பல் நிறைய ஆயுதங்களை அனுப்பி வைத்த வழக்கில்ஈடுபட்டதற்காக அவருக்கு 2015 ஆம் ஆண்டு இரண்டாவது மரண தண்டனை விதிக்கப்பட்டது. ஆனால், டிசம்பர் 2024-இல் வங்கதேச உயர் நீதிமன்றம் இவரை விடுவித்தது. தற்போது நடந்த தேர்தலில் 1.6 லட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் இவர் வெற்றி பெற்றுள்ளார்.

பிஎன்பியை சேர்ந்த மற்றொரு தலைவர் அப்துஸ் சலாம் பின்டு. இவரும் கிரானைட் தாக்குதல் வழக்கில் தண்டனை பெற்று பின்னர் விடுவிக்கப்பட்டவர். இந்தியாவில் நடந்த சில குண்டு வெடிப்பு சம்பவங்களுடன் தொடர்புடைய பாகிஸ்தானைத் தளமாகக் கொண்ட ஹூஜி தீவிரவாத அமைப்பிற்கு ஆதரவளித்ததாக இவர் மீது குற்றச்சாட்டுகள் இருந்தன. இவர் தற்போது 2 லட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளார். ஜமாத் இ இஸ்லாமி கட்சியை அசாருல் இஸ்லாம், ற்போது நாடாளுமன்ற உறுப்பினராகத் தேர்வாகியுள்ளார்.

1971 வங்கதேச விடுதலைப் போரின் போது 1,200 பேரைக் கொன்றது மற்றும் பாலியல் வன்கொடுமை செய்த குற்றச்சாட்டுகளுக்காக 2014-இல் இவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. ஷேக் ஹசீனா ஆட்சி கவிழ்ந்த பிறகு இவர் விடுவிக்கப்பட்டார்.

இந்த பயங்கரவாத அமைப்புகளுடன் தொடர்புடையதாகக் கருதப்பட்ட தலைவர்களின் தற்போதைய வெற்றி இந்தியாவுக்கு கவலையளிக்கும் விஷயமாக பார்க்கப்படுகிறது.

இதற்கிடையே 2004 அதிகாரத்தில் இருந்தபோது, இந்தியாவின் பிரிவினைவாதக் குழுவான உல்பாவுக்கு சிட்டகாங் வழியாக கப்பல் நிறைய ஆயுதங்களை அனுப்பி வைத்த வழக்கில் தற்போது பிரதமர் ஆக உள்ள தாரிக் ரஹ்மானுக்குத் தொடர்பு இருப்பதாக அப்போது இந்தியா குற்றம் சாட்டியிருந்தது குறிப்பிடத்தக்கது.

# ஈரானில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்த ட்ரம்ப் திட்டம்

**வாஷிங்டன், பிப். 15-**

ஈரானில் ஆட்சியை அகற்ற அதிபர் ட்ரம்ப் வலியுறுத்தி வருவதாக தகவல் வெளியாகி உள்ளது.

அணுசக்தி ஒப்பந்தம் தொடர்பாக அமெரிக்கா-ஈரான் இடையே மோதல் இருந்து வருகிறது. ஒப்பந்தத்தில் ஈரான் கையெழுத்திட வேண்டும் என்று அமெரிக்க அதிபர் ட்ரம்ப் வலியுறுத்தி வருகிறார். மேலும் ஈரானுக்கு எச்சரிக்கை விடுக்கும் வகையில் அந்நாட்டு அருகே அமெரிக்காவின் மிகப்பெரிய கடற்படை அனுப்பப்பட்டு யு.எஸ்.எஸ் ஆபிரகாம் லிங்கன் போர்க்கப்பல் நிறுத்தப்பட்டுள்ளது.

இதற்கிடையே அணுசக்தி தொடர்பாக இரு நாடுகள் இடையே பேச்சுவார்த்தை நடத்தி வரும் நிலையில் இன்னும் உடன்பாடு எட்டப்படவில்லை. இதைத் தொடர்ந்து ஈரானை நோக்கி மேலும் ஒரு அமெரிக்க போர்க்கப்பலை (யு.எஸ்.எஸ் ஜெரால்ட் ஆர் போர்டு) அனுப்ப ட்ரம்ப் உத்தரவிட்டு உள்ளார். இந்த நிலையில் அமெரிக்க அதிபர் ட்ரம்ப் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார்.

அப்போது ஈரானின் உச்ச தலைவர் அயதுல்லா அலி கமெனி ஆட்சியை அகற்ற அழுத்தம் கொடுப்பது தொடர்பாக நிருபர்கள் கேள்வி கேட்டனர். அதற்கு ட்ரம்ப் பதில் அளித்து கூறியதாவது:-

ஈரானுக்கு எதிராக அமெரிக்கா ராணுவ நடவடிக்கை எடுக்கலாமா வேண்டாமா என்பதை முடிவு செய்யும் போது, ஈரானில் அதிகார-ஆட்சி மாற்றம் ஒரு சிறந்த விஷயமாக இருக்கும். அது நடக்கக்கூடிய சிறந்த விஷயமாகத் தெரிகிறது. அவர்கள் 47 ஆண்டுகளாக பேசிக் கொண்டு மட்டுமே இருக்கிறார்கள். நாங்கள் ஒரு ஒப்பந்தத்தை எட்டவில்லை என்றால் அது எங்களுக்கு தேவைப்படும் என்பதால் அதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.

மிக விரைவில் அமெரிக்காவின் 2-வது போர்க்கப்பல் ஈரானை நோக்கி புறப்படும் என்றார். இதன்மூலம் ஈரான் ஆட்சியாளர்களுக்கு ட்ரம்ப் மறைமுகமாக எச்சரிக்கை விடுத்துள்ளார்.

மரம் மனிதனின் உரம்

# அமெரிக்காவில் இந்திய மாணவர் மாயம்

**நியூயார்க், பிப். 15-**

கர்நாடகத்தைச் சேர்ந்தவர் சாகேத் ஸ்ரீனிவாசையா(22). சென்னை ஐஐடியில் பட்டம் முடித்த இவர் மேற்படிப்புக்காக அமெரிக்கா சென்றுள்ளார். கலிபோர்னியாவின் பெர்க்லே பல்கலையில் அவர் வேதியியல் மற்றும் பயோ மாலிகுலர் பொறியியல் பிரிவில் மேற்படிப்பு படித்தார். அத்துடன் தொழில்நுட்பம் மற்றும் ஆராய்ச்சியிலும் ஈடுபட்டு வந்தார்.

இந்த நிலையில் கடந்த நான்கு நாள்களாக அவரை காணவில்லை. குடும்பத்தினர் மற்றும் நண்பர்களால் அவரை தொடர்புகொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இதுதொடர்பாக போலீஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். மாணவரை கண்டுபிடிக்க சான்பிரான்சிஸ்கோ நகரில் உள்ள இந்திய துணைத்தூதரகம் முயற்சிகள் மேற்கொண்டு வருகின்றன.

# தங்கம் விலை சவரனுக்கு 1,280 ரூபாய் அதிகரிப்பு

**சென்னை, பிப். 15-**

சென்னையில் ஆபரண தங்கத்தின் விலை நேற்று சவரனுக்கு ரூ.1,280 உயர்ந்து விற்பனையானது.

சமீபத்திய காலமாகவே தங்கம் மற்றும் வெள்ளியின் விலை ஏற்ற இறக்கமாகவே அதிகரித்தும் குறைந்தும் வருகிறது. அதன்படி, வாரத்தின் கடைசி நாளான நேற்று ஒரு கிராம் ரூ. 160 உயர்ந்து ரூ. 14,560-க்கும், ஒரு சவரன் ரூ. 1,280 உயர்ந்து ரூ. 1,16,480-க்கும் விற்பனையானது.

நேற்று முன்தினம் சவரனுக்கு ரூ. 1,600 குறைந்திருந்த நிலையில் நேற்று ரூ. 1,280 அதிகரித்து விற்பனையானது. ஆனால், வெள்ளி விலையில் நேற்று மாற்றமில்லை. சென்னையில் ஒரு கிராம் வெள்ளி ரூ. 280 -ஆக தொடர்ந்து விற்பனையானது. ஒரு கிலோ ரூ. 2,80,000-க்கு விற்பனையானது.

# தமிழகத்தில் ஒவ்வொரு வீட்டிலும் தி.மு.க. அரசின் திட்டங்கள் உள்ளன

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமிதம்



**சென்னை, பிப். 15-**
ஒவ்வொரு வீட்டிலும் அரசின் திட்டங்கள் சென்று சேர்ந்துள்ளதாக முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார். திருப்பத்தூர் சென்றுள்ள தமிழக முதல்வரும், தி.மு.க. தலைவருமான மு.க.ஸ்டாலின் மகளிர் உரிமைத் தொகை பெறும் பயனாளியிடம் கலந்துரையாடினார். இந்நிலையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் தனது எக்ஸ் வலைதளத்தில் கூறியிருப்பதாவது:- ஒவ்வொரு வீட்டிலும் சென்று சேர்ந்துள்ள நமது அரசின் திட்டங்கள். இந்த மகிழ்ச்சிதான் திராவிட மாடல். வெல்வோம் ஒன்றாக. இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பறவை காய்ச்சல் குறித்து வதந்தி:

# பொதுமக்களுக்கு அரசு அறிவுறுத்தல்

**சென்னை, பிப். 15-**
பறவை காய்ச்சல் குறித்து வதந்தி பரவி வரும் நிலையில் அதை நம்ப வேண்டாம் என்று பொதுமக்களுக்கு தமிழக அரசு அறிவுறுத்தியுள்ளது. மேலும் பறவை காய்ச்சல் தொடர்பான சந்தேகங்களுக்கு 104 என்ற தொலைபேசி எண்ணை 24 மணி நேரமும் தொடர்பு கொள்ளலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் சமீபத்தில் சில மாவட்டங்களிலும், குறிப்பாக சென்னையின் ஒரு சில பகுதிகளில் காகங்கள் உயிரிழந்த நிலையில் காணப்பட்டது. மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அதிகாரிகள் இதுகுறித்து ஆய்வு நடத்தினார்கள். அதில், ஒரு காகத்தில் பறவை காய்ச்சல் பாதிப்பு கண்டறியப்பட்டது.

இந்த நிலையில், சென்னை தலைமை செயலகத்தில் நேற்று முன்தினம், பறவை காய்ச்சல் பரவலை தடுப்பதற்கான நடவடிக்கைகளை துரிதப்படுத்த அனைத்து துறை அலுவலர்களுக்கான ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு, தலைமை செயலாளர் முருகானந்தம் தலைமை தாங்கினார். அப்போது, பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து துறை சார்பில் பறவை காய்ச்சல் பரவும் முறை பற்றியும், தமிழ்நாட்டில் யாருக்கும் பறவை காய்ச்சல் பாதிப்பு ஏற்படவில்லை எனவும் விளக்கப்பட்டது.

மேலும், பறவை காய்ச்சல் பரவலை தடுக்க பொது சுகாதாரத்துறை எடுத்து வரும் நடவடிக்கைகள் குறித்தும் தெரிவிக்கப்பட்டது.

ஆய்வுக் கூட்டத்தை தொடர்ந்து பொதுமக்களுக்கு தமிழக அரசு வெளியிட்டுள்ள முக்கிய அறிவுரைகள் பின்வருமாறு:-
பறவை காய்ச்சல் குறித்து மக்கள் அச்சப்பட வேண்டியதில்லை. எங்கேனும் காகம் மற்றும் பறவை இறந்த விவரம் அறியப்பட்டால் உடனடியாக கால்நடை துறைக்கும், உள்ளாட்சி அமைப்புகளுக்கும் தெரிவிக்க வேண்டும். யாருக்கேனும் காய்ச்சல், சளி மற்றும் மூச்சு விடுவதில் சிரமம் இருந்தால் அருகில் உள்ள அரசு மருத்துவமனை அல்லது ஆரம்ப சுகாதார நிலையத்தை அணுகி சிகிச்சை மேற்கொள்ள வேண்டும். கோழி இறைச்சி மற்றும் முட்டை போன்ற அசைவ உணவுகளை நன்றாக சமைத்த பின்னரே சாப்பிட வேண்டும். பறவை காய்ச்சல் பற்றிய வதந்திகளை நம்ப வேண்டாம். பறவை காய்ச்சல் பற்றிய சந்தேகங்களுக்கு 104 என்ற தொலைபேசி எண்ணை 24 மணி நேரமும் தொடர்பு கொள்ளலாம். எனவே, பொதுமக்கள் அச்சப்பட தேவையில்லை என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## புல்வாமா தாக்குதலின் 7-ம் ஆண்டு நினைவுதினம்:

# வீரர்களின் தியாகத்தை நினைவுகூர்ந்த பிரதமர்

**புல்வாமா, பிப். 15-**
புல்வாமா தாக்குதலின் 7-ம் ஆண்டு நினைவு தினத்தையொட்டி வீரர்களின் தியாகத்தை பிரதமர் மோடி நினைவுகூர்ந்துள்ளார்.

புல்வாமா தாக்குதலின் 7-ஆம் ஆண்டு நினைவு நாள் நேற்று பிப்ரவரி 14 அனுசரிக்கப்பட்டது. கடந்த 2019-ம் ஆண்டு இதே நாளில் ஜம்மு-காஷ்மீரின் புல்வாமா பகுதியில் ஜம்முவில் இருந்து ஸ்ரீநகருக்கு வீரர்களை ஏற்றிக் கொண்டு சென்ற ராணுவ வாகனங்கள் மீது பயங்கரவாதிகள் தற்கொலைப்படை தாக்குதல் நடத்தினர்.

இந்த துயர சம்பவத்தில் 40 சி.ஆர்.பி.எப் வீரர்கள் உயிரிழந்தனர்.

இதுதொடர்பாக பிரதமர் மோடி வெளியிட்ட சமூக வலைத்தளப் பதிவில், 2019-ம் ஆண்டு இந்த நாளில் புல்வாமாவில் தங்கள் உயிரைத் தியாகம் செய்த துணிச்சலான வீரர்களை நினைவு கூர்கிறேன். அவர்களது தேசத்திற்கான சேவை நம் உணர்வில் என்றும் பதிந்திருக்கும். ஒவ்வொரு இந்தியரும் அவர்களின் துணிச்சலைக் கண்டு உத்வேகம் பெறுகின்றனர். இவ்வாறு பிரதமர் மோடி பதிவிட்டுள்ளார்.

# புதுச்சேரியில் தே.ஜ.க. கூட்டணி 24 தொகுதிகளை வெல்லும்

## காரைக்கால் பிரச்சார கூட்டத்தில் அமித்ஷா பேச்சு




**புதுச்சேரி, பிரி. 15-**
புதுச்சேரியில் பாரதிய ஜனதா கட்சி, என்.ஆர். காங்கிரஸ், அ.தி.மு.க. கட்சிகளோடு இணைந்து 64 சதவீத வாக்குகள் பெற்று 24 தொகுதிகளை வெல்லும் என்று மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா தெரிவித்துள்ளார்.

காரைக்காலில் நடைபெற்ற பா.ஜ.க. பொதுக் கூட்டத்தில் பங்கேற்றுப் பேசிய மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா, பிரதமர் நரேந்திர மோடி, ஐரோப்பிய நாடுகள் மற்றும் அமெரிக்காவுடன் செய்துள்ள வர்த்தக ஒப்பந்தம் காரணமாக மீனவர்கள் மற்றும் விவசாயிகளுக்கு ஆதாயம் மட்டுமே கிடைக்கும், தீங்கு ஏற்படாது. மோடி இன்னும் சில காலத்தில் புதுச்சேரிக்கு அறிவிப்புகள் மற்றும் திறப்பு விழாக்களை நடத்த உள்ளார். ஆகையால் மோடி மற்றும் ரங்கசாமிக்கு நீங்கள் ஆதரவு அளிக்க வேண்டும். பயோ பார்மா துறையை விரிவாக்க புதுச்சேரி மாநிலத்திற்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. புதுச்சேரி மாநிலத்தில் பழைய ஜவுளி துறை ஆலைகளை புத்துயிர் அளித்து அவைகளை புத்துயிர் ஆக்க நடவடிக்கை எடுத்து வருகிறோம். தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஒதுக்கப்பட்ட தொகுதிகளை விற்பனைக்கு விட்ட மோசமான செயலையும் நாராயணசாமி செய்துள்ளார். அவருடைய காலத்தில் புதுச்சேரி மாநிலத்தில் ஒரு தொழில் கூட தொடங்கவில்லை. இங்கு ஐந்து ஆண்டுகளில் ஸோஹோ நிறுவனம் மூலம், மென்பொருள் நிறுவனத்தை தொடங்கியுள்ளது தற்போதைய புதுச்சேரி அரசு. மேலும், புதுச்சேரியில் லேப்டாப் தயாரிக்கும் நிறுவனமும் உருவாக்கப்பட்டுள்ளது.

புதுச்சேரி வளர்ச்சித் திட்டத்திற்கு வழங்கப்பட்ட 15 ஆயிரம் கோடி ரூபாய் வரவு செலவு திட்டத்தில் நடந்த முறைகேடுகள் குறித்து சிஏஜி அறிக்கையின் மூலம் தெரிந்துள்ளது. தாழ்த்தப்பட்ட மக்களை அவமானப்படுத்தும் மோசமான செயல்களை நாராயணசாமி செய்துள்ளார். அண்மையில் பிரதமர் நரேந்தமோடி மலேசியா சென்றபோது திருவள்ளுவருக்கான இருக்கை ஒன்றை ஏற்படுத்துவதாக உறுதியளித்தார். அங்கே மலேசியா வாழ் தமிழ் மாணவர்களுக்கு திருவள்ளுவர் பெயரில் ஊக்கத்தொகை அளிப்பதாக மோடி உறுதி அளித்துள்ளார்.

மலேஷியா நாட்டில் தமிழ் மொழிக்கு சிறுபான்மை மொழி என்ற அந்தஸ்து கிடைத்துள்ளது. நாராயணசாமி புதுச்சேரி மாநிலத்தை காந்தி குடும்பத்து ஏ.டி.எம். இயந்திரம் போல பயன்படுத்தி வந்தார். தில்லி கஜானாவை நிரப்பும் வேலையை மட்டுமே செய்து வந்தார். பல பதவிகளை அவர் ஏலம் விடும் செயலில் ஈடுபட்டார். தாழ்த்தப்பட்ட, பழங்குடியின மக்களுக்கு ஒதுக்கப்பட்ட இட ஒதுக்கீட்டை ஏலத்தில் விட்டார். போக்குவரத்து துறையை என்ன வேண்டுமானாலும் செய்துகொள்ளுங்கள் என நாராயணசாமி லைசன்ஸ் கொடுத்து இருந்தார். அடுத்த ஐந்தாண்டுகளில் நாம் மூன்று துறைகளில் நம்முடைய கவனத்தை செலுத்தி ஆட்சி அமைக்க உள்ளோம்.

புதுச்சேரி மீனவர்களின் பொருள்களை உலக சந்தைகளில் கொண்டு சேர்க்க நமது இலக்கு இருக்க வேண்டும். தகவல் தொழில் நுட்பம், தரவுகள் மையம், செய்யறிவு உள்ளிட்ட துறைகளில் புதுச்சேரி மாநில இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பை பா.ஜ.க. ஏற்படுத்தி கொடுக்கும். கடந்த 5 ஆண்டுகளில் சட்டம் - ஒழுங்கு மற்றும் வளர்ச்சிகளை சீர் செய்துள்ளோம். அடுத்த ஐந்து ஆண்டுகளில் புதுச்சேரியை வளர்ச்சி அடைந்த மாநிலமாக மாற்ற வேண்டும். இன்று நம்முடைய மோடியின் அரசைப் பார்த்து எந்தவொரு தீய சக்தியும் கண்ணெடுத்து பார்க்க முடியாத அளவிற்கு உள்ளது. புதுச்சேரி மக்கள் தேசிய ஜனநாயகக் கூட்டணி மீதும் பா.ஜ.க. மீதும், ரங்கசாமி மற்றும் மோடி மீதும் நம்பிக்கை வைத்துள்ளனர். கடந்த 2021 சட்டமன்ற தேர்தலில் 44 சதவீத வாக்குகள் அளித்து ஆதரவு அளித்தார்கள். இந்த முறை பாரதிய ஜனதா கட்சி, என்.ஆர். காங்கிரஸ், அ.தி.மு.க. கட்சிகளோடு இணைந்து புதுச்சேரியில் 64 சதவீத வாக்குகள் பெற்று 24 தொகுதிகளை வெல்லும் என்று கூறினார்.

# அ.தி.மு.க.வில் இருந்து முன்னாள் அமைச்சர் நிலோபர் கபீல் விலகல்

**சென்னை, பிப். 15-**
அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் அக்கட்சியில் இருந்து விலகி தி.மு.க.வில் இணைய உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.



அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் நிலோபர் கபீல் அக்கட்சியில் இருந்து விலகுவதாக அறிவித்துள்ளார். வாணியம்பாடி தொகுதி எம் எல்ஏவும் அ.தி.மு.க. ஆட்சியில் தொழிலாளர் துறை அமைச்சராகவும் இருந்த நிலோபர் கபீல் அ.தி.மு.க.வில் இருந்து விலகுவதாக பொதுச் செயலர் எடப்பாடி பழனிசாமிக்கு கடிதம் எழுதியுள்ளார். அதில் கூறியிருப்பதாவது:-

நான் நீண்ட காலமாக கழகத்தில் பயணித்து வந்தேன். தற்சமயம் எனது சொந்த சூழ்நிலை காரணமாக கழகத்தில் தொடர்ந்து பணிபுரிய இயலவில்லை. எனவே, நான் எனது அடிப்படை உறுப்பினர் பொறுப்பில் இருந்து விலகுகிறேன். எனது விலகல் கடிதத்தை தாங்கள் ஏற்றுக் கொள்ள வேண்டுமாய் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இதுவரை தாங்கள் எனக்கு அளித்த மரியாதைக்கு நன்றி மற்றும் கழக நிர்வாகிகளுக்கும். குறிப்பாக திருப்பத்தூர் மாவட்ட நிர்வாகிகளுக்கும் நன்றி'' என்று குறிப்பிட்டுள்ளார். திருப்பத்தூர் மாவட்டம் ஜோலார்பேட்டையில் நடைபெறும் மாநாட்டில் முதல்வர் மு.க. ஸ்டாலின் முன்னிலையில் நிலோபர் கபீல் தி.மு.க.வில் இணையவுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# திருச்சி அரசு மருத்துவமனையில் நடந்த குழந்தை கடத்தல் சம்பவம்

## த.வெ.க. தலைவர் விஜய் கண்டனம்

**சென்னை, பிப். 15-**
அரசு மருத்துவமனையில் குழந்தை கடத்தல் சம்பவத்துக்கு த.வெ.க. தலைவர் விஜய் கண்டனம் தெரிவித்துள்ளது.

அரசுப் பொது மருத்துவமனையில் நடந்த குழந்தைக் கடத்தல் சம்பவத்துக்கு தமிழக வெற்றிக்கழக தலைவர் விஜய் கண்டனம் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக த.வெ.க. தலைவர் விஜய் தன்னுடைய எக்ஸ் தளப் பதிவில் தெரிவித்திருப்பதாவது:-

திருச்சியில் அரசுப் பொது மருத்துவமனையில், பிறந்து மூன்று நாள்களே ஆன ஆண் குழந்தையை, மர்ம நபர் ஒருவர் தடுப்பூசி போடுவதாக ஆசைவார்த்தை கூறிக் கடத்திச் சென்றிருப்பதாகச் செய்திகள் வந்திருப்பது, மிகுந்த அதிர்ச்சியையும் வேதனையையும் அளிக்கிறது. மக்களுக்கான அரசு என்று மார்தட்டிக்கொள்ளும்



இந்த ஆட்சியில், அரசு மருத்துவமனையிலேயே ஒரு தாயின் மடியிலிருந்து குழந்தை பறி போகும் அவல நிலை என்பது ஏற்றுக் கொள்ள முடியாதது. இது ஏழை எளிய மக்களுக்குப் பாதுகாப்பற்ற சூழல் ஆகும்.

தமிழ்நாடு முதல்வர் ஸ்டாலின், இந்த விவகாரத்தில் உடனடியாகத் தலையிட வேண்டும். குழந்தையை விரைவாக மீட்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். அந்தப் பிஞ்சுக் குழந்தையைப் பிரிந்து தவிக்கும் பெற்றோருக்கு நீதி கிடைக்கச் செய்ய வேண்டும். மேலும், இந்தக் குழந்தைக் கடத்தல் சம்பவத்தில் தொடர்புடைய குற்றவாளிகள் யாராக இருந்தாலும் அவர்கள் மீது தயவு தாட்சண்யமின்றி மிகக் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அத்தோடு உடனடியாகத் தமிழகத்தில் உள்ள அனைத்து அரசு மருத்துவமனைகளிலும், குறிப்பாகப் பிரசவ வார்டுகளில், எவராலும் ஊடுருவ முடியாத அளவிற்குப் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். இதை உறுதி செய்ய, பயோ-மெட்ரிக் முறை அல்லது அடையாள அட்டை சரிபார்ப்பு போன்ற நவீன தொழில்நுட்பங்களை உடனடியாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்று விஜய் குறிப்பிட்டுள்ளார்.

# இறுதி வாக்காளர் பட்டியல் வெளியீடு:

## புதுச்சேரியில் புதிதாக 41,492 பேர் சேர்ப்பு



**புதுச்சேரி, பிப். 15-**
புதுச்சேரியில் இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்டது.

இதில் புதிதாக 41,492 பேர் சேர்க்கப்பட்டுள்ளது.

தமிழகம், புதுச்சேரி உள்ளிட்ட 9 மாநிலங்களில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிரத் திருத்தப் (எஸ்.ஐ.ஆர்) பணிகள் நடைபெற்றன. வரைவு வாக்காளர் பட்டியல் கடந்த டிசம்பரில் வெளியான நிலையில் இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்டு வருகின்றன.

அந்தவகையில் புதுச்சேரியில் கடந்த டிச. 16 ஆம் தேதி வரைவு வாக்காளர் பட்டியல் வெளியானது. பின்னர் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க கால அவகாசம் வழங்கப்பட்டு பணிகள் அனைத்தும் முடிந்த நிலையில் நேற்று (பிப். 14) இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்டது.

அதன்படி, புதுச்சேரி, காரைக்கால் என மொத்தமுள்ள 30 தொகுதிகளில் தற்போது 9,44,211 வாக்காளர்கள் உள்ளனர். இவர்களில் 4,43 ,595 ஆண்கள், 5,00,477 பெண்கள், 139 பேர் மூன்றாம் பாலினத்தவர்கள். புதிதாக 41,492 பேர் சேர்க்கப்பட்டுள்ளனர். தமிழகத்தில் கட நந்த வருகிற 19-ம் தேதி வ ரைவு வாக்காளர் பட்டியல் வெளியான நிலையில் வருகிற பிப். 17-ம் தேதி இறுதி வாக்காளர் பட்டியல் வெளியாகும் என்று கூறப்பட்டுள்ளது.

# த.வெ.க.வில் விருப்ப மனு வழங்க கால அவகாசம் பிப். 20 வரை நீட்டிப்பு

**சென்னை, பிப். 15-**
தமிழகத்தில் விரைவில் சட்டப்பேரவைத் தேர்தல் அறிவிக்கப்பட உள்ளது. இதையடுத்து கட்சிகள் சார்பில் விருப்ப மனு விநியோகம் நடைபெறுகிறது. த.வெ.க. சார்பில் வரும் தேர்தலில் போட்டியிட கடந்த பிப். 6 ஆம் தேதி முதல் விருப்ப மனு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. விருப்ப மனு வழங்க நேற்றுடன் (பிப். 14) கடைசி நாள் என்று அறிவிக்கப்பட்ட நிலையில் வருகிற பிப். 20 ஆம் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து த.வெ.க. பொதுச் செயலாளர் என். ஆனந்த் தனது எக்ஸ் பக்கத்தில், வரும் சட்டமன்றத் தேர்தலில் தமிழக வெற்றிக் கழகம் சார்பில் 234 சட்டமன்றத் தொகுதிகளிலும் வேட்பாளராகப் போட்டியிட விரும்பும் கழகத் தோழர்கள் தங்களுக்கான விருப்ப மனுவைப் பெறுவதற்கும் அதனைச் சமர்ப்பிப்பதற்குமான கடைசித் தேதி நேற்று (14.02.2026) என ஏற்கெனவே அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், கழகத்தின் பல்வேறு நிகழ்ச்சிகள் காரணமாக, வழங்கப்பட்ட கால அவகாசத்திற்குள் பெரும்பாலான கழகத் தோழர்களால் விருப்ப மனுவைச் சமர்ப்பிக்க முடியாமல் போனதாகத் தெரிவித்து வருகின்றனர். எனவே, தோழர்களின் வேண்டுகோளுக்கு இணங்க, விருப்ப மனுவைப் பூர்த்தி செய்து அளிப்பதற்கான கால அவகாசம் நீட்டிக்கப்படுகிறது என்று குறிப்பிட்டுள்ளார்.

# திருச்சி அரசு மருத்துவமனையில் குழந்தையை கடத்திய பெண் கைது

**திருச்சி, பிப். 15-**
திருச்சி அரசு மருத்துவமனையில் காணாமல்போன குழந்தை மீட்டு பெண்ணை போலீசார் கைது செய்தனர்.

திருச்சி அரசு மருத்துவமனையில் கடந்த பிப். 11-ம் தேதி விக்னேஷ்- சுகன்யா தம்பதிக்கு ஆண் குழந்தை பிறந்தது. இந்நிலையில் குழந்தைக்கு தடுப்பூசி போடுவதாகக் கூறி பெண் ஒருவர் குழந்தையைக் கடத்திச் சென்றுள்ளார். குழந்தை காணாமல் போனதையடுத்து காவல்துறையினர் தீவிரமாக விசாரணை மேற்கொண்டு தேடி வந்த நிலையில், குழந்தை நேற்று பத்திரமாக மீட்கப்பட்டு பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. குழந்தையைக் கடத்திய பெண்ணை துறையூர் அருகே காவல்துறையினர் கைது செய்துள்ளனர். குழந்தை இல்லாத ஏக்கத்தில் எடுத்துச் சென்றதாக கைதான மீனாட்சி என்பவர் வாக்குமூலம் அளித்துள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## விஜய்- திரிஷா குறித்த விமர்சனம்:

# நயினாருக்கு த.வெ.க. கடும் கண்டனம்

**சென்னை, பிப். 15-**
விஜய்- திரிஷா குறித்து நயினார் நாகேந்திரன் விமர்சனம் செய்த நிலையில் முதலில் உங்கள் முதுகில் படிந்துள்ள கறைகளைக் கங்கை நீரால் கழுவுங்கள் என்று த.வெ.க. கண்டனம் தெரிவித்துள்ளது.

சேலம் மாவட்ட த.வெ.க. நிர்வாகிகள் சந்திப்பு கூட்டம் சீலநாயக்கன் பட்டி பைபாஸ் சாலையில் உள்ள தாளமுத்து நடராஜன் திடலில் நடைபெற்றது. அண்ணா தொடங்கிய கட்சியை மு.க. ஸ்டாலின் வைத்துள்ளார். அ.தி.மு.க. தொடங்கிய கட்சியை எடப்பாடி பழனிசாமி வைத்துள்ளார் என விஜய் கூறியுள்ளது தொடர்பாக தமிழக பா.ஜ.க. தலைவர் நயினார் நாகேந்திரனிடம் கேள்வி கேட்கப்பட்டது. அதற்கு பதிலளித்த நயினார் நாகேந்திரன்,''பாவம், அவர் அனுபவமே இல்லாதவர். முதலில் வீட்டில் இருந்து வெளியே வர வேண்டும். திரிஷாவிடம் இருந்து வெளியே வரணும். வெளியில் வந்தால்தான் எல்லாமே நடத்த முடியும் என்றார்.

நயினார் நாகேந்திரனின் இந்த கருத்துக்கு த.வெ.க. தரப்பில் கடும் கண்டனங்கள் எழுந்து வருகிறது. அந்த வகையில், த.வெ.க. பரப்புரை செயலாளர் நாஞ்சில் சம்பத் தனது எக்ஸ் தள பக்கத்தில் கண்டன பதிவை வெளியிட்டுள்ளார். அந்த பதிவில் அவர் கூறியிருப்பதாவது:-

ஒரு தேசியக் கட்சியின் மாநிலத் தலைவராக இருக்கும் ஒருவர், எத்தகைய அரசியல் கண்ணியத்தைக் கடைப்பிடிக்க வேண்டும் என்ற அடிப்படை அறிவைக்கூட நயினார் நாகேந்திரன் இழந்துவிட்டார். எங்கள் கிளைச் செயலாளர் கூட இவரை விடக் கண்ணியத்தோடு பேசுவார். அறிவாலயத்தைத் திட்டினால் கமலாலயத்தில் உள்ள ஒருவருக்குக் காய்ச்சல் வருகிறதா? அறிவாலயமும் கமலாலயமும் ஓராலயமாகி விட்டதா? 4 கோடி ரூபாய் சிக்கலில் சிக்கித் தவிக்கும் ஒரு நபர், அடுத்தவர்களுக்கு அறிவுரை கூறுவது இந்த ஆண்டின் மிகப்பெரிய நகைச்சுவை.

கடந்த தேர்தலில் கட்டைப்பையில் கட்டுக் கட்டாகப் பணம் தூக்கித் திரிந்த நாகம், இன்று ஊருக்கு உபதேசம் செய்வதா? முதலில், உங்கள் முதுகில் படிந்துள்ள கறைகளைக் கங்கை நீரால் கழுவுங்கள். எங்கள் தலைவர் மீது விழுகிற அங்கீகார வெளிச்சம் உங்கள் கண்களைக் கூசச் செய்கிறது; உங்கள் அறிவைக் குருடாக்கி விட்டது. பொறாமைத் தீயில் வெந்து கொண்டிருக்கும் நீங்கள், வரம்பு மீறி விமர்சனம் செய்தால், தமிழகப் பெண்கள் திருப்பித் தரப்போகும் பதிலடிகளுக்கு உங்களால் பதில் சொல்ல முடியாது. இவ்வாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.

## தலைவர்கள் சொல்வதை படிங்க....



திட்டவட்டமாக தமிழ்நாட்டில் கூட்டணி ஆட்சி என்பது கிடையாது. இதனை ஏற்கனவே முதலமைச்சர் தெளிவாக சொல்லிவிட்டார். ரூ. 5,000 மகளிர் உரிமைத் தொகை அறிவிப்பை தொடர்ந்து மக்களின் ஆதரவு தி.மு.க.விற்கு அதிகம் இருப்பதை உணர்ந்து இனி யாரும் ஆட்சியில் பங்கு என்பதை பேச மாட்டார்கள்.
**- ஆர்.எஸ்.பாரதி**



நாங்கள் கேட்பது தி.மு.க. தோல்வியடைந்த இடங்களைத்தான். கடந்த 2021-ம் ஆண்டு சட்டசபை தேர்தலில் 173-ல் போட்டியிட்டு 133 தொகுதிகளில் தி.மு.க. வெற்றி பெற்றது. நாங்கள் கேட்பது தி.மு.க. தோல்வி அடைந்த இடங்களை தான். அதிகார பகிர்வு அவசியம். ஆட்சி பங்கு எங்கள் உரிமை. மக்கள் தீர்மானிப்பார்கள்.
**- மாணிக்கம் தாகூர்**



பா.ம.க.-வின் கட்சி, சின்னம் தொடர்பாக டாக்டர் ராமதாஸ் தரப்பில் இருந்து பொய்யை பரப்புகிறார்கள். பா.ம.க. நிறுவனர் ராமதாஸை சுற்றியுள்ள தீய சக்திகள் அவரது மனதை மாற்றிவிட்டார்கள். பா.ம.க.-விற்குள் பதவி போட்டி சண்டை ஏற்படுத்தி குழப்பத்தை ஏற்படுத்தியது தி.மு.க.தான். காங்கிரஸ் கட்சியை தி.மு.க.வே தோற்கடித்து விடும்.
**- அன்புமணி**



தி.மு.க அரசு ரூ.5 ஆயிரம் அல்ல ரூ.50 ஆயிரம் கொடுத்தாலும் அ.தி.மு.க கூட்டணியே வெற்றி பெறும். எங்கள் கூட்டணியில் எந்த குழப்பமும் ஏற்படாது. தமிழ்நாட்டில் இதுவரை கூட்டணி ஆட்சிக்கு மக்கள் அனுமதி தந்ததில்லை, இந்த தேர்தலில் என்ன நடக்கும் என்பதை பார்ப்போம்.
**- டி.டி.வி. தினகரன்**

# புதுக்கோட்டை மாவட்டத்தில் நலம் காக்கும் ஸ்டாலின் உயர் மருத்துவ சேவை முகாம்

## அமைச்சர் எஸ்.ரகுபதி துவக்கி வைத்தார்



**புதுக்கோட்டை,பிப்.15-**

புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் வட்டாரம், குழிபிறை அரசு மேல்நிலைப் பள்ளியில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில் 'நலம் காக்கும் ஸ்டாலின்'' உயர் மருத்துவ சேவை முகாமினை, இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி (14.02.2026) துவக்கி வைத்து, கர்ப்பிணி பெண்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகங்களை வழங்கினார்.

பின்னர், இயற்கை வளங்கள் துறை அமைச்சர் தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் ஏழை, எளிய பொதுமக்கள் நோயில்லா நல்வாழ்வு வாழ்ந்திடும் வகையில் பல்வேறு மருத்துவம் சார்ந்த திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். அந்தவகையில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையின் சார்பில் மருத்துவ முகாம்கள் நடத்தப்படும் என்று அறிவித்து, தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் 'நலம் காக்கும் ஸ்டாலின்'' சிறப்பு மருத்துவ முகாமினை தொடங்கி வைத்தார்கள்.

அதன்படி, புதுக்கோட்டை மாவட்டத்தில் ஒரு வட்டாரத்திற்கு மூன்று மருத்துவ முகாம்கள் வீதம், 2025-2026 ஆம் நிதியாண்டில் 42 மருத்துவ முகாம்கள் நடத்தப்பட திட்டமிடப்பட்டுள்ளது. இதுவரை இம்முகாம்களையும் சேர்த்து 41 நலம் காக்கும் ஸ்டாலின் சிறப்பு மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு, சராசரியாக ஒவ்வொரு முகாமிற்கும் 1,400 க்கும் மேற்பட்ட மருத்துவ பயனாளிகள் சிறப்பு மருத்துவ முகாமில் கலந்து கொண்டு பயனடைந்து வருகின்றனர். அதனடிப்படையில் இன்றைய தினம் திருமயம் வட்டாரம், குழிபிறை அரசு மேல்நிலைப் பள்ளியிலும் மற்றும் அன்னவாசல் வட்டாரம், மலைக்குடிப்பட்டி அரசு மேல்நிலைப் பள்ளியிலும் 'நலம் காக்கும் ஸ்டாலின்''; சிறப்பு மருத்துவ முகாம்கள் நடைபெற்றது.

இம்முகாமில் 40 வயதிற்கு மேற்பட்டோர், நீரிழிவு மற்றும் உயர் இரத்த அழுத்த நோயால் பாதிக்கப்பட்டவர்கள், மன நல பாதிப்புடையோர், இதய நோயாளிகள், கர்ப்பிணித் தாய்மார்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்கள், வளர்ச்சிக் குன்றிய குழந்தைகள், மாற்றுத் திறனாளிகள், பழங்குடியினர் மற்றும் சமூக-பொருளாதார ரீதியில் பின்தங்கிய மக்களுக்கு இம்முகாம்களில் முன்னுரிமை வழங்கப்படுகிறது. மேலும் இரத்த அழுத்த பரிசோதனை, ரத்த சர்க்கரை அளவு, சிறுநீரக செயல்பாட்டு சோதனைகள் உள்ளிட்ட பல்வேறு உயர் மருத்துவ சேவைகள் இம்முகாமில் வழங்கப்படுகிறது.

மேலும், இம்முகாமில் பங்கு கொள்ளும் மருத்துவ பயனாளர்களுக்கு 17 சிறப்பு மருத்துவ நிபுணர்களை கொண்டு மருத்துவ சேவைகள் வழங்கப்படுகிறது. பொது மருத்துவம், பொது அறுவை சிகிச்சை மருத்துவம், இருதய மருத்துவம், எலும்பியல் மருத்துவம், நரம்பியல் மருத்துவம், தோல் மருத்துவம், காது, மூக்கு மற்றும் தொண்டை மருத்துவம், மகப்பேறு மருத்துவம், இயன்முறை மருத்துவம், பல் மருத்துவம், கண் மருத்துவம், மனநல மருத்துவம், குழந்தைகள் நலமருத்துவம், நுரையீரல் மருத்துவம், நீரிழிவுநோய் மருத்துவம், ஸ்கேன், எக்கோ பரிசோதனைகள் மற்றும் மருத்துவ சேவைகள் மட்டுமின்றி முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டு திட்டத்தின் கீழ்பதிவு செய்தல் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கான அரசு அங்கீகார சான்றிதழ்கள் இம்முகாமிலேயே வழங்கப்படுகிறது.

எனவே, தமிழக அரசால் ஏழை, எளிய பொதுமக்கள் நோயில்லா நல்வாழ்வு வாழ்ந்திடும் வகையில் செயல்படுத்தப்படும் இதுபோன்ற மருத்துவத் திட்டங்களை அனைவரும் உரிய முறையில் பயன்படுத்திக்கொண்டு, நோயில்லா நல்வாழ்வு வாழ்ந்திட வேண்டும் எனவும் இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி தெரிவித்தார்.

இந்நிகழ்வில், புதுக்கோட்டை மாவட்ட சுகாதார அலுவலர் மரு.ராம்கணேஷ், வட்டார மருத்துவ அலுவலர் தமிழ் செல்வன், மருத்துவ பணியாளர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர்; கலந்து கொண்டனர்.

# திருவாரூர் மாவட்டத்தில் நலம் காக்கும் ஸ்டாலின் உயர் மருத்துவ சேவை முகாமில் மாற்றுத்திறனாளிகளுக்கு தேசிய அடையாள அட்டைகள்

## அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா வழங்கினார்



**திருவாரூர்,பிப்.15-**

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி வட்டம் கருவாக்குறிச்சி அரசு மேல்நிலைப் பள்ளியில் ''நலம் காக்கும் ஸ்டாலின்'' உயர் மருத்துவ சேவை முகாம் நடைபெற்று வருவதை தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர். டி.ஆர்.பி.ராஜா , கலெக்டர் வ.மோகனச்சந்திரன், , ஆகி; யோர் நேரில் பார்வையிட்டு, மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் 5 மாற்றுத்திறனாளி நபர்களுக்கு தேசிய அடையாள அட்டையினை வழங்கினார்கள்.

தமிழ்நாடு அரசின் 2025-26 ஆம் ஆண்டின் சட்டமன்ற அறிவிப்பு எண்.33-ன்படி, தமிழகத்தில் மருத்துவ வசதி குறைந்த, சிறப்பு மருத்துவ வசதிகள் குறைந்த ஊரக பகுதிகள், பழங்குடியினர் அதிகம் வசிக்கும் பகுதிகள், மருத்துவ வசதி குறைவாக அமைந்துள்ள நகர்ப்புறப் பகுதிகள் ் குடிசைப்பகுதிகள் போன்ற பகுதிகளை முன்னுரிமை அடிப்படையில் தேர்ந்தெடுத்து முகாம் நடத்தப்பட்டுவருகிறது.

இம்முகாம்கள் நீரிழிவு மற்றும் உயர் இரத்த அழுத்த நோயால் பாதிக்கப்பட்டவர்கள், பொது மருத்துவம், பொது அறுவை சிகிச்சை, எலும்பியல் மருத்துவம், மகப்பேறு மற்றும் பெண்கள் நலன், குழந்தைகள் நலன், இருதய நோய்ப்பிரிவு, மூளை நோய் பிரிவு, தோல் மருத்துவம், பல் மருத்துவம், கண் மருத்துவம், காது, மூக்கு, தொண்டை, இரத்த பரிசோதனைகள், மனநல மருத்துவம், இயன்முறை மருத்துவம், நடமாடும் இலவச டிஜிட்டல் எக்ஸ்ரே வாகனம், கதிரிக்கவியல், சர்க்கரை நோய், ஆயுஸ் மற்றும் சமூக–பொருளாதார ரீதியில் பின்தங்கிய மக்கள். தமிழ்நாடு முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் 40 வயதிற்கு மேற்பட்டவர்களை இலக்காகக் கொண்டு நலம் காக்கும் ஸ்டாலின் உயர்மருத்துவ சேவை முகாம் செயல்பட்டுவருகிறது.

அதனடிப்படையில், திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி வட்டத்திற்குட்பட்ட தனியார் பள்ளியில் ''நலம் காக்கும் ஸ்டாலின்'' உயர்மருத்துவ சேவை முகாம் நடைபெற்றுவருவதை தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் முனைவர்.டி.ஆர்.பி.ராஜா , திருவாரூர் கலெக்டர் வ.மோகனச்சந்திரன், , நாகப்பட்டினம் நாடாளுமன்ற உறுப்பினர் வை.செல்வராஜ் ஆகியோர் நேரில் பார்வையிட்டு, மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் 15 மாற்றுத்திறனாளி நபர்களுக்கு தேசிய அடையாள அட்டையினை வழங்கினார்கள்.

இம்முகாம்கள் உள்ளாட்சி அமைப்புகள், பள்ளிக் கல்வித்துறை, உயர்கல்வித் துறை, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, சமூக நலம் மற்றும் மகளிர் உரிமைத் துறை, தொழிலாளர் நலன் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை உள்ளிட்ட பல்வேறு துறைகள் ஒருங்கிணைந்து செயல்படுத்தப்படுகிறது.

இம்முகாம்களில், அடிப்படை மற்றும் உயர்நிலை மருத்துவப் பரிசோதனைகளுடன் முழுமையான உடல் ஆரோக்கியப் பரிசோதனைகளும் (உயர் இரத்த அழுத்தம், நீரிழிவு நோய், மின் இதய வரைபடம், எக்கோ, அல்ட்ரா சவுண்ட் ஸ்கேன், எக்ஸ்-ரே முதலியவை) காசநோய் மற்றும் தொழுநோய் கண்டறியும் பரிசோதனைகளும், ஆரம்பகட்ட புற்றுநோய் கண்டறியும் பரிசோதனைகளும், மேலும் பதினைந்து துறைகளைச் சார்ந்த நிபுணர்களின் மருத்துவ ஆலோசனைகளும் (பொது மருத்துவம், அறுவை சிகிச்சை, இதயவியல் உள்ளிட்ட துறைகள்) வழங்கப்படுகிறது.

மேற்கண்ட பரிசோதனைகள் மட்டுமன்றி, தமிழ்நாடு முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் பதிவு செய்தல், மாற்றுத் திறனாளிகளுக்கான அரசு அங்கீகார சான்றிதழ் வழங்குதல் உள்ளிட்ட சேவைகளும் வழங்கப்படுகிறது.

இம்முகாமில், மன்னார்குடி வருவாய் கோட்டாட்சியர் யோகேஸ்வரன், மாவட்ட சுகாதார அலுவலர் மரு.சங்கீதா, திருவாரூர் மருத்துவக்கல்லூரி முதல்வர் மரு.அசோகன், வட்டார மருத்துவ அலுவலர் மரு.கார்த்திகேயன் உள்ளிட்ட அனைத்து துறை அலுவலர்கள், செவிலியர்கள், மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# பெரம்பலூர் மாவட்டத்தில் அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் தேர்வானவர்களுக்கு பணி நியமன ஆணைகள்

## கலெக்டர் ந.மிருணாளினி வழங்கினார்



**பெரம்பலூர்,பிப்.15-**

தமிழ்நாடு ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் 2023-24, 2024-25 ஆண்டுக்கான முதுகலை ஆசிரியர் காலிப்பணியிடங்களுக்காக தெரிவு செய்யப்பட்ட பணி நாடுநர்களுக்கு EMIS இணைய தளம் வாயிலாக பணி நியமன கலந்தாய்வு 07.02.2026 மற்றும் 09.02.2026 ஆகிய தினங்களில் நடைபெற்றது.

இதில், பெரம்பலூர் மாவட்டத்தில் மொத்தம் 26 பணி நாடுநர்கள் கலந்தாய்வில் கலந்து கொண்டு, 08 பேர் பெரம்பலூர் மாவட்டத்தையும், 18 பேர் வெளி மாவட்டங்களையும் தெரிவு செய்தனர்.

இந்நிலையில், தெரிவு செய்யப்பட்ட 26 பணி நாடுநர்கள் மற்றும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் தொகுதி-IV மூலம் தெரிவு செய்யப்பட்ட 3 இளநிலை உதவியாளர்கள் என ஆக மொத்தம் 29 நபர்களுக்கு பெரம்பலூர் கலெக்டர் ந.மிருணாளினி (14.02.2026) பணி நியமன ஆணைகளை வழங்கினார். பணி நியமன ஆணை பெற்ற அனைவரையும், 16.02.2026 அன்று முதல் பணியில் சேர்ந்து கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது. இந்நிகழ்வில் பெரம்பலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் சி.சு வா மி முத் த ழ கன், மாவட்ட கல்வி அலுவலர்கள் ம.செல்வக்குமார். கே.லதா ஆகியோர் உடனிருந்தனர்

# கந்தர்வகோட்டை பகுதியில் பல்வேறு திட்டப்பணிகள்: அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் அடிக்கல் நாட்டினார்



**கந்தர்வகோட்டை,பிப்.15-**

புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வகோட்டை ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை சார்பில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள பல்வேறு முடிவுற்ற திட்டப்பணிகளை, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ. வீ.மெய்யநாதன் திறந்து வைத்தார். பின்னர், அமைச்சர் தெரிவித்ததாவது; தமிழ்நாடு முதலமைச்சர் கிராமப்புறங்களில் வாழும் பொதுமக்களின் நலனை கருத்தில் கொண்டு பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளை சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள்.

அந்தவகையில் கிராமப்புறங்களின் அடிப்படைத் தேவைகளான, குடிநீர் வசதி, சுகாதார வசதி, சாலை வசதி, மின் வசதி உள்ளிட்டவைகளை நிறைவேற்றி வருகிறார்கள். அதனடிப்படையில் இன்றையதினம், கந்தர்வ கோட்டை ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் பல்வேறு முடிவுற்ற திட்டப்பணிகள் திறந்து வைக்கப்பட்டுள்ளது. அதன்படி, கந்தர்வகோட்டை ஊராட்சி ஒன்றியம், அரவம்பட்டி, புதுநகர், பெரியக் கோட்டை, வெள்ளாளவிடுதி ஆகிய ஊராட்சிகளில் புதிய அங்கன்வாடி மைய கட்டடங்களும் மற்றும் கோமாபுரம் அண்ணா நகர், அரியாணிப் பட்டி, துருசுப்பட்டி, பிசானந்தூர், பல்லவராயன்பட்டி, நடுப்பட்டி ஆகிய ஊராட்சிகளில் புதிய பயணியர் நிழற்குடைகளும் மற்றும் கோமாபுரம் சமுத்திரப்பட்டி, குரும்பூண்டி, மஞ்சப்பேட்டை, அக்கச்சிப்பட்டி, வீரடிப்பட்டி, சேவியர் குடிகாடு ஆகிய ஊராட்சிகளில் புதிய நியாய விலை

கடைகளும் மற்றும் சங்கம்விடுதி, கொல்லம்பட்டி ஆகிய ஊராட்சிகளில் பகுதி நேர அங்காடி கடைகளும் மற்றும் கந்தர்வகோட்டை ஊராட்சியில் புதிய நூலக கட்டடமும், குளத்தூர் நாயக்கர் பட்டி ஊராட்சியில் புதிய உணவுக்கூடம் கட்டடமும், இன்றையதினம் திறந்து வைக் கப் பட் டுள் ளது. மேலும், மருதன்கோன்விடுதி ஊராட்சி, கறம்பக்குடி அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில், உயர்கல்வித் துறை சார்பில், கல்லூரி மாணவர்களின் திறன் வளர்ச்சி மற்றும் டிஜிட்டல் முன்னேற்றத்திற்காக 'உலகம் உங்கள் கையில்'' என்னும்

மாபெரும் திட்டத்தின் கீழ், மாணாக்கர்களுக்கு மடிக்கணினிகள் கந்தர்வக் கோட்டை சட்டமன்ற உறுப்பினர் .எம்.சின்னத்துரை முன்னாள் அரசு வழக்கறிஞர் கே. கே.செல்லப்பாண்டியன் புதுக்கோட்டை வருவாய் கோட்டாட்சியர் .பா.ஐஸ்வர்யா, முன்னாள் மாவட்ட ஊராட்சி குழு துணைத் தலைவர்த.சந்திரசேகரன், தெற்கு ஒன்றிய கழக செயலாளர் பரமசிவம் வடக்கு ஒன்றிய செயலாளர் தமிழ் ஐயாமற்றும் மதியழகன் நகர கழக செயலாளர் ராஜா மாவட்ட மீனவர் அணி அமைப்பாளர் ஜானகிராமன் பழைய கந்தர்வகோட்டை ஊராட்சி மன்ற தலைவர் ராணி முருகேசன்ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் கலையரசன் ஒன்றிய விவசாய அணி செயலாளர் முருகேசன் ஒன்றிய செயலக அணி செயலாளர் ராமராஜ் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் மஞ்சம்பட்டி ஆனந்த் அரசு ஒப்பந்தக்காரர் பூபதி மற்றும் அரசு அலுவலர்கள் தோழமைக் கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்

# திருவாரூர் அருகே கொட்டாரக்குடி ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியின் நூற்றாண்டு விழா



**திருவாரூர்,பிப்.15-**

திருவாரூர் மாவட்டம் கொட்டாரக்குடியில் 1926ம் முதல் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி செயல்பட்டு வருகிறது. இந்த பள்ளியின் நுற்றாண்டு விழா நேற்று முன்தினம் பள்ளி வளாகத்தில் பள்ளிக்கல்வித் துறையினர்,தலைமை ஆசிரியை, ஆசிரியர்கள்,கிராம மக்கள்,பள்ளியின் முன்னாள் மாணவர்கள்,பெற்றோர்கள்,மாணவ,மாணவியர்கள் ஆகியோர் சேர்ந்து திருவிழா போல் கொண்டாடினர்.திருவாரூர் வட்டாரத்திலேயே நுற்றாண்டை கண்ட ஒரே பெயரை கொண்ட இப்பள்ளியில் 5 தலைமுறையினர் கண்டுள்ளது.சிறப்பு அழைப்பாளராக வருகைதந்த திருவாரூர் மாவட்டகல்வி அலுவலர் பழனி வேல்,வட்டார கல்வி அலுவலர்கள் அறிவழகன்,சுமதி ஆகியோரை கலந்து கொண்டு பள்ளியின்பெருமைகளை பற்றியும் இப்பள்ளியில் பணியாற்றி ஆசிரியர்கள் மற்றம் பள்ளியில் படித்து நல்ல நிலையில் உள்ள முன்னாள் மாணவர்களை பற்றி எடுத்துரைத்து சிறப்புரையாற்றினார்கள்.தலைமையாசிரியர் கவிதா,இடைநிலை ஆசிரியர் உமாமகேஸ்வரி ஆகியோர் நிகழ்ச்சியினை ஒருங்கிணைத்து சிறப்பாக நடத்தினர்.விழா வந்த சிறப்பு அழைப்பாளர்கள்,பொதுமக்கள்,கிராமவாசிகளுக்கு மேளதாளங்களுடன் வரவேற்பு அளிக்கப்பட்டது.தற்போது படித்து வரும் மாணவ,மாணவிகள் தங்கள் பள்ளியில் பயின்ற தனித்திறமைகளை வெளிப்படுத்தி கலைநயத்துடன் பேசினர்.இப்பள்ளியில் 1969,1976,1995,2008 ஆண்டில் கல்வி பயின்ற முன்னாள் மாணவர்கள் காவல்துறையிலும்,பள்ளிக் கல்வித்துறையிலும்,பேச்சாளராகவும் திறம்பட செயல்படுவதாகவும் பெருமையுடன் தெரிவித்தனர்.மேலும் தனியார் பள்ளிகளுக்கு இணையாக அரசு பள்ளிகளை தமிழக அரசு தரம் உயர்த்தி கல்வியில் முதன்மையான மாநிலமாக திகழ்கிறது.இதனால் பெற்றோர்கள் தங்களது பிள்ளைகளைஅரசு பள்ளியில் சேர்த்து அரசின் பலத்தினை உயர்த்துவது மட்டுமின்றி அவர்களின் திறமைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் இடமாக இருக்கும் என்று முன்னாள் மாணவர்கள் தெரிவித்தினர்.

# மயிலாடுதுறையில் 2-ஆம் நாள் மயூர நாட்டியாஞ்சலி ஏராளமான நாட்டிய கலைஞர்கள் பங்கேற்பு



**மயிலாடுதுறை,பிப்.15-**

மயிலாடுதுறை சப்தஸ்வரங்கள் அறக்கட்டளை சார்பில் மகாசிவராத்திரியை முன்னிட்டு 20-ஆம் ஆண்டு மயூர நாட்டியாஞ்சலி விழா அருள்மிகு மயூரநாதர் ஆலயத்தில் பிப்ரவரி 12 ஆம் தேதி தொடங்கி நடைபெற்று வருகிறது.

இரண்டாம் நாள் மயூர நாட்டியஞ்சலி விழாவிற்கு சப்தஸ்வரங்கள் அறக்கட்டளை அறங்காவலர் குழு தலைவர் ரவிச்சந்திரன் தலைமை வகித்தார். அறங்காவலர் குழு துணை தலைவர் சிவலிங்கம், சப்தஸ்வரங்கள் அறக்கட்டளை தலைவர் இசைக்கலைமணி பரணிதரன், அறக்கட்டளை செயலாளர் வாத்திய கலைமணி மாயவரம் விஸ்வநாதன், துணை செயலாளர் அகஸ்டின் விஜய், பொருளாளர் ராமன் மற்றும் அறங்காவலர்கள், அறக்கட்டளை நிர்வாகிகள் முன்னிலை வகித்தனர்.

இரண்டாம் நாள் மயூர நாட்டியாஞ்சலி விழாவில் கலை மற்றும் இசைத் துறையில் சிறந்து விளங்கி வரும் கலைர்கள் கங்காதரசங்கரனுக்கு மயூர முழவிசை இளவல் என்ற விருதும், காமேஸ்வரனுக்கு மயூர வேங்குழல் இளவல் என்ற விருதும், அனந்தராமனுக்கு மயூர யாழிசை இளவல் என்ற விருதும் வழங்கி பாராட்டப்பட்டனர். தொடர்ந்து நடைபெற்ற இரண்டாம் நாள் மயூர நாட்டியாஞ்சலி விழாவில் மயிலாடுதுறை ஸ்ரீ ஷண்முகா நாட்டியப்பள்ளி குழுவினர், சேலம் தஞ்சாவூர் த்ர்ஷ்யகாவ்ய கூடம் குழுவினர், சென்னை ந்ருத்ய சம்ஸ்ருதி ட்ரஸ்ட் குழுவினர், அமெரிக்கா நடேஷா ஸ்கூல் ஆஃப் பரத நாட்டிய குழுவினர் மற்றும் பெங்களூர் ந்ருத்ய கங்கா ப்ரதர்ஷிகா கலாகேந்த்ரா உள்ளிட்ட குழுவினரின் பரதநாட்டிய நிகழ்ச்சிகள் நடைபெற்றது.

மயூர நாட்டியாஞ்சலியில் சிவனின் அனைத்து முத்திரைகளையும் உள்ளடக்கிய நாட்டிய நிகழ்வுகள், தஞ்சை நால்வரால் இயற்றப்பட்ட பழமையான நாட்டிய நிகழ்வுகள் பார்வையாளர்களை பரவசப்படுத்தியது. இதில் ஏராளமான நாட்டியக் கலைஞர்கள், இசைக்கலைஞர்கள், கலை ஆர்வலர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட ஏராளமான கலந்து கொண்டனர்.

20-ஆம் ஆண்டு மயூர நாட்டியாஞ்சலி விழா பிப்ரவரி 14,15 சனி, ஞாயிறு ஆகிய நாட்களும் மாலை 5:30 மணி முதல் நள்ளிரவு வரை நடைபெற உள்ளது. இதில் தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் இருந்தும், இந்தியாவின் பல்வேறு மாநிலங்களில் இருந்தும், அமெரிக்கா, ஆஸ்திரேலியா, சுவிட்சர்லாந்து, சீனா, லண்டன் போன்ற வெளிநாடுகளில் இருந்தும் 500க்கும் மேற்பட்ட நாட்டிய கலைஞர்கள் பங்கேற்று பல்வேறு விதமான நாட்டிய நிகழ்ச்சிகளை நடத்த உள்ளனர். நாட்டியாஞ்சலி விழாவிற்கான ஏற்பாடுகளை சப்தஸ்வரங்கள் அறக்கட்டளை நிர்வாகிகள் செய்துள்ளனர்.

# தேர்தல் தேதி அறிவிக்கும் முன்னரே தனது பிரச்சார பயணத்தை நிறைவு செய்ய இருக்கும் முன்னாள் அமைச்சர் எம்.ஆர். விஜயபாஸ்கர்



**கரூர்,பிப்.15-**

தமிழகத்தில் 2026 சட்டமன்றத் தேர்தல் விரைவில் நடைபெற உள்ளது அதற்கான தேதியை அறிவிக்கும் முன்னரே முன்னாள் அமைச்சர் அதிமுக செயலாளர் எம் ஆர் விஜயபாஸ்கர் தனது தொகுதியான கரூர் சட்டமன்றத் தொகுதியில் தேர்தல் பிரச்சாரத்தை தொடங்கினார் அந்த பயணம் நிறைவுபெறும் நிலையில் உள்ளது அதன் தொடர்ச்சியாக திருமாநிலையூர் மேற்கு மற்றும் கிழக்கு கரூர் வடக்கு பகுதி வாங்கபாளையம் அம்பேத்கர் நகர் கிழக்கு பகுதி தமிழ்நாடு வீடு வசதி வாரிய குடியிருப்பு ராம் நகர் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் வீடு வீடாக சென்று அதிமுக ஆட்சியில் செய்த சாதனை விளக்க துண்டு பிரசுரங்களை வழங்கி இரட்டை இலைக்கு வாக்குகளை சேகரித்தார் முதியவர்களின் கால்களில் விழுந்து ஆசி பெற்றார் அவர் சென்ற இடமெல்லாம் பொதுமக்கள் மிகுந்த உற்சாகத்துடன் அவரை வரவேற்றனர் குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அவருக்கு திலகமிட்டு ஆரத்தி எடுத்து தங்களது ஆதரவை தெரிவித்தனர் கழக நிர்வாகிகள் தொண்டர்கள் உடன் இருந்தனர்

# திருவாரூரில் ரமலானை முன்னிட்டு தமிழ்நாடு தவ்ஹீத் ஜமாத் சார்பில் இஸ்லாமிய கருத்தரங்கம்



திருவாரூர் பிப் 15

தமிழ்நாடு தவ்ஹீத் ஜமாத் திருவாரூர் வடக்கு மாவட்டம் அடியக்கமங்கலம் ராஜா தெரு கிளை சார்பில் ரமலானை முன்னிட்டு இஸ்லாமிய கருத்தரங்கம் நடைப்பெற்றது.கிளை தலைவர் முஹம்மது ஹுசைன் தலைமையில் தவ்ஹீத் பள்ளி வளாகத்தில் இஸ்லாமிய கருத்தரங்கம் நடைபெற்றது.இதில் தமிழ்நாடு தவ்ஹீத் ஜமாத்தின் இஸ்லாமிய கல்லூரி பேராசிரியர் அர்ஷத் அலி கலந்து கொண்டு ஜகாத் (பொருளாதாரவியல் திட்டங்கள்) குறித்து இஸ்லாமிய மார்க்கம் கற்றுத் தந்த வகையில் எப்படி தானம் தர்மங்களை அமைத்துக் கொள்வது என்ற வழிமுறைகள் குறித்து எடுத்துரைத்தார். இந்த நிகழ்ச்சியில் கிளை செயலாளர் தன்வீர்,பொருளாளர் ஜாவித் மற்றும் துணை தலைவர் ஆபித் மற்றும் ஆண்கள், பெண்கள், குழந்தைகள் என சுமார் இருநூறுக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

**கண், ரத்த தானம் செய்வீர்**

# அரியலூர் சட்டமன்றத் தொகுதி திமுக சார்பில் தேர்தல் பரப்புரை பொதுக்கூட்டம்




அரியலூர்,பிப்.15-
அரியலூர் மாவட்டம் திருமானூர் ஒன்றியம்,சாத்தமங்கலம் கலைஞர் திடலில் அரியலூர் சட்டமன்ற திமுக சார்பில் தமிழ்நாடு தலை குனியாது என்னும் தலைப்பில் சட்டமன்ற தொகுதி பரப்புரை கூட்டம்நேற்றுநடைபெற்றது. திருமானூர் மத்திய ஒன்றிய திமுக செயலாளர் இரா.கென்னடி கூட்டத்திற்குதலைமைவகித்தார்.கூட்டத்திற்கு வருகை தந்த அனைவரையும் அரியலூர் வடக்கு ஒன்றிய திமுக செயலாளர் கோ அறிவழகன் வரவேற்றார்.அரியலூர் நகர செயலாளர்இரா.முருகேசன், ஒன்றிய செயலாளர்கள் இரா அண்ணாதுரை, மா .அன்பழகன், ரெ.அசோக சக்கரவர்த்தி, தெய்வ இளையராஜன், கே ஜி எஸ் முருகன் மாவட்ட துணை செயலாளர்கள் சி சந்திரசேகரன்,லதாபாலு,பொதுக்குழு உறுப்பினர்கள் இரா . பாலு ,வி எம் ஷாஜகான் உள்ளிட்டோர் முன்னிலை வகித்தனர்.கூட்டத்தில் சிறப்பு அழைப்பாளராக கொள்கை பரப்புச் செயலாளர் இரா.தி.சபாபதி மோகன், மாவட்ட திமுக செயலாளர், போக்குவரத்து மற்றும் மின்சார துறை அமைச்சர் சா சி சிவசங்கர்,சட்டதிட்ட திருத்த குழு இணை செயலாளர் சுபா சந்திரசேகர்,ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க. சொ . க.கண்ணன்,செயற்குழு உறுப் பினர் எம்பி பாலசுப்பிரமணி யம்,அரியலூர் சட்டமன்றத் தொகுதி மேலிடப் பார்வையாளர் ப.அன்பரசு உள்ளிட்டோர் கலந்து கொண்டு, 5 ஆண்டுகளில் திமுக அரசு நிறைவேற்றியுள்ள பல்வேறு மக்கள் நலத்திட்டங்கள் குறித்து சிறப்புரையாற்றினர். கூட்டத்தில் மாவட்ட துணைச் செயலாளர் மு . கணேசன், மாவட்ட பொருளாளர் கு.இராஜேந்திரன்,ஒன்றிய திமுக செயலாளர்கள்தேசகர்,ஜெயங்கொண்டம் நகர செயலாளர் வெ.கொ.கருணாநிதி, அரியலூர் நகர் மன்ற தலைவர் சாந்தி கலைவாணன் மற்றும் கட்சி நிர்வாகிகள்பலர் கலந்துகொண்டனர்

தின பூமி நாளிதழில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

**வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், திருச்சிராப்பள்ளி.**
**எண்.ஒ.மு.அ.4/2428**
**நாள். 19.06.2025**

திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருச்சிராப்பள்ளி மேற்கு வட்டம், தில்லை நகர், 7–வது கிராஸ், கதவு எண்.D–5 என்ற முகவரியில் வசிக்கும் T.K.கோபி, த/பெ. T.S.கிருஷ்ணசாமி ஆகிய நான் எனது தந்தை "T.S.கிருஷ்ணசாமி" அவர்கள் கடந்த 26.01.2011–ந் தேதி அன்று மேற்கண்ட முகவரியில் இறந்துவிட்டார். எனது அறியாமையின் காரணமாக எனது தந்தையின் இறப்பை பதிவு செய்ய தவறிவிட்டேன். எனவே எனது தந்தையின் இறப்பை பதிவு செய்து இறப்பு சான்று வழங்க வேண்டி திருச்சி வருவாய் கோட்டாட்சியரிடம் மனு செய்துள்ளேன். எனவே எனது தந்தை T.S.கிருஷ்ணசாமி அவர்களின் இறப்பை பதிவு செய்து சான்று வழங்குவதில் யாருக்கேனும் ஆட்சேபணை இருப்பின் மேற்படி வருவாய் கோட்டாட்சியர் திருச்சிராப்பள்ளி அவர்களிடம் நேரில் ஆஜராகி தெரிவித்துக் கொள்ளலாம். தவறும்பட்சத்தில் மனுமீது ஒருதலைப்பட்சமாக தீர்மானிக்கப்படும் என்பதை அறியவும்.

மனுதாரர்
T.K. கோபி,
த/பெ.T.S.கிருஷ்ணசாமி
கதவு எண்.D-5, 7–வது கிராஸ்,
தில்லைநகர்,
திருச்சிராப்பள்ளி,
மேற்கு வட்டம், திருச்சி–620018

**குளித்தலை அடிஷனல் டிஸ்ரிக்ட் முன்சீப் கோர்ட்டார் அவர்கள் சமூகம்**
**அசல் வழக்கு.எண்.86/2017**
**இ.ம.எண்.09/2025**

அருள்மிகு சக்கலாம்மன் திருக்கோயில் நிர்வாகி மற்றும் ஜமீன்தார் அச்சுதராமன்.
– மனுதாரர்/ வாதி
– எதிர் –
தங்கவேல் செட்டியார் வகையறா
– எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள்
சுசீலா, 36/2025, த/பெ.ஏழுமலை, இந்து வசிப்பிடம் நெ.69/2, 8–வது கிராஸ் (கிழக்கு), தில்லை நகர், திருச்சி– 620 018.
– 16 ஆம் எதிர்மனுதாரர்

மனுதாரர்/ வாதி தரப்பில் கொடுத்த அறிவிப்பு

அசல் வழக்கில் இறந்து போன 8–ஆம் பிரதிவாதியின் வாரிசு சேர்ப்பு மனு அனுமதிக்கப்பட்டு அதன் பேரில் அவசிய திருத்தல் மனு மேற்படி நம்பரில் தாக்கல் செய்யப்பட்டு வருகிற 17.02.2026 அன்று வாய்தா போடப்பட்டுள்ளது. மேற்படி நம்பரில் 16–ஆம் எதிர்மனுதாரராகிய தாங்கள் அன்றைய தினம் நேரிலோ வழக்கறிஞர் மூலமோ காலை 10.00 மணிக்கு சமூகம் கோர்ட்டில் ஆஜராகி தங்களது ஆட்சேபனையை தெரிவித்துக் கொள்ளலாம் என சமூகம் கோர்ட் உத்தரவின்படி இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

A.ஜாபர்சேட், B.A.,B.L.,
மனுதாரர்/வாதி வழக்கறிஞர்,
குளித்தலை.

**கனம் உட்கோட்ட நிர்வாக நடுவர் மற்றும் வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்றம், மன்னார்குடி**
**த.ப.எண்.203/2025**

வடிவேல், த/பெ.தங்கவேல்.
– மனுதாரர்
– எதிர் –
வட்டாட்சியர், முத்துப்பேட்டை
சார்பதிவாளர், முத்துப்பேட்டை.
– எதிர்மனுதாரர்கள்

மனுதாரர் கொடுக்கும் அறிவிப்பு:
திருவாரூர் மாவட்டம், முத்துப்பேட்டை தாலுக்கா, ஆலங்காடு, 3/101, அயிரக்கன்னித் தெரு என்ற முகவரியை சேர்ந்த மனுதாரர் தனது தந்தை "தங்கவேல்" கடந்த 22.01.1998 அன்று இறந்த விபரத்தை எதிர்மனுதாரர்கள் பதிந்துவரும் இறப்பு பதிவேட்டில் பதிய வேண்டி மனுதாக்கல் செய்துள்ளேன். மேற்படி இறப்பை பதிவு செய்ய தவறிவிட்டதாகவும், பதிவுசெய்ய உத்தரவிட வேண்டி மனுக் கொடுத்து அதன் பேரில் விசாரணைக்கு உள்ளது. அது சம்மந்தமாக யாருக்கேனும் ஆட்சேபணை இருப்பின் நேரில் ஆஜராகி தெரிவித்துக் கொள்ள வேண்டியது.

வடிவேல், த/பெ.தங்கவேல்,
ஆலங்காடு,
முத்துப்பேட்டை தாலுக்கா,
திருவாரூர் மாவட்டம்.

**உயர்திரு உட்கோட்ட நடுவர் நீதிமன்றம், சார்ஆட்சியர் அலுவலகம், வேதாரண்யம்,**
**ஒ.மு.COLRV. 6224/2025/ஆ2**
**ந.க.0036/2025/அ6**

தமிழ்வேந்தன், த/பெ.அருண்குமார்,
3-22, சந்தனதேவன்காடு,
பஞ்சநதிக்குளம் மேற்கு கிராமம்,
வேதாரண்யம் வட்டம்,
நாகப்பட்டினம் மாவட்டம்.
...மனுதாரர்
உயர்திரு. வட்டாட்சியர், அவர்கள்,
வேதாரண்யம் ....எதிர்மனுதாரர்

## அறிவிப்பு

மேற்படி முகவரியில் வசித்து வரும் மனுதாரர் தமிழ்வேந்தன் தனது தந்தை அருண்குமார் த/பெ. இராமநாதன் என்பவர் கடந்த 18.03.1998-ஆம் தேதி அன்று இறந்த விபரத்தை பதிவு செய்திடக் கோரி வேதாரண்யம் சார் ஆட்சியர் அவர்களிடம் மனு அளித்துள்ளார் இந்த மனுவின் மீது யாருக்கேனும் ஆட்சேபணை ஏதாவது இருப்பின் பதினைந்து நாட்களுக்குள் தங்களது ஆட்சேபணைகளை வேதாரண்யம் வட்டாட்சியரிடம் தெரிவிக்கும்படி கேட்டு கொள்ளப்படுகிறது.

மனுதாரர்: தமிழ்வேந்தன்,
த/பெ.அருண்குமார்,
3-22, சந்தனதேவன்காடு,
பஞ்சநதிக்குளம் மேற்கு கிராமம்,
வேதாரண்யம் வட்டம்,

**வேடசந்தூர் சப் கோர்ட்டு, வேடசந்தூர்**
**O.S.No. 334/2017**

கனரா பேங்க்,
வேடசந்தூர்
அதன் கிளை மேலாளர் மூலம்
..... வாதி
திரு.முரளிதரன்
ஸ்ரீ குமரன் பிளாக்
S1, தாதா நாட்சியார் கார்டன்.
மாம்பல சாலை,
திருவானைக்கோவில்,
திருச்சி மாவட்டம்.
.... 2ம் பிரதிவாதி

பொது அறிவிப்பு

மேற்படி நிர் வழக்கில், மேற்படி 2ம் பிரதிவாதி ஆகிய தாங்கள் மேற்படி நீதிமன்றத்தில் ஆஜர் ஆவதற்காக 18.03.2026 ம் தேதி வாய்தா ஏற்பட்டுள்ளது. மேற்படி தேதியில் மேற்படி 2ம் பிரதிவாதி ஆகிய தாங்கள் நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமோ மேற்படி தேதியில் காலை 10.30 மணிக்கு ஆஜராக வேண்டியது. தவறும்பட்சத்தில் மேற்படி வழக்கு ஒருதலைப்பட்சமாக திர்மானிக்கப்படும் என்பதை இதன்மூலம் அறிவிக்கப்படுகிறது.

G.ILAMPOORANAN,
B.A.,B.L.,
Advocate,Dindigul.

**சார் ஆட்சியர் மற்றும் உட்கோட்ட நிர்வாக நடுவர் அவர்கள், குளித்தலை.**
**மனு எண்.ஒ.மு.அ2/6375/2025**

மூ.மருதை கவுண்டர்,
த/பெ.மூக்க கவுண்டர்,
பூவாயிப்பட்டி, கல்லை கிராமம்,
குளித்தலை வட்டம்,
கரூர் மாவட்டம்.
– மனுதாரர்
– எதிர் –
வட்டாட்சியர், குளித்தலை.
– எதிர்மனுதாரர்

அறிவிப்பு

மேற்படி முகவரியில் வசித்து வரும் மனுதாரர் மருதை கவுண்டர் என்பவர் தனது தாயார் "மல்லிகா" என்பவர் மேற்படி விலாசத்தில் உள்ள வீட்டில் 10.05.1984 அன்று இறந்தார் என்று கூறி இறப்பு சான்றிதழ் வேண்டி மனுதாக்கல் செய்துள்ளார். இதில் யாருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் குளித்தலை சார் ஆட்சியர் அலுவலகத்தில் 7 தினங்களுக்குள் தெரிவித்து கொள்ளலாம். தவறும்பட்சத்தில் ஒருதலைப்பட்சமாக உத்தரவாகிவிடும் என்பதை தெரிவித்துக்கொள்கிறோம்.

மூ.மருதை கவுண்டர்,
மனுதாரர், கல்லை கிராமம்.

**உயர்திரு உட்கோட்ட நடுவர் நீதிமன்றம் மற்றும் வருவாய் கோட்டாட்சியர், மன்னார்குடி**
**த.ப.எண் .48/2025**

S.வீரசேகரன்,
த/பெ. சோமசுந்தரம்,
1/5,வடக்குத்தெரு,
மேட்டுப்பாளையம்,
திருத்துறைப்பூண்டி TK
மனுதாரர்
–எதிர்–
1.வட்டாட்சியர், திருத்துறைப்பூண்டி
2.சார்பதிவாளர், திருத்துறைப்பூண்டி
எதிர்மனுதாரர்கள்

அறிவிப்பு

மேற்கண்ட வழக்கில் மனுதாரரின் தாயார் திருமதி. மீனாட்சி என்பவர் கடந்த 10.10.2003 ஆம் தேதி அன்று மேற்படி முகவரியில் இறந்ததை எதிர் மனுதாரர் பதிந்துவரும் இறப்பு பதிவேட்டில் பதியவேண்டி மனு தாக்கல் செய்துள்ளார். அந்த மனுவை பொறுத்து யாருக்கேனும் ஆட்சேபணை இருப்பின் மேற்படி அலுவலகத்தில் தெரிவித்துக் கொள்ளலாம் என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

S.வீரசேகரன், த/பெ. சோமசுந்தரம்,
1/5,வடக்குத்தெரு, மேட்டுப்பாளையம்,
திருத்துறைப்பூண்டி TK

**உயர்திரு உட்கோட்ட நடுவர் நீதிமன்றம் மற்றும் வருவாய் கோட்டாட்சியர், மன்னார்குடி**
**த.ப.எண் .43/2025**

G.மனோகரன்,
த/பெ. கோவிந்தராஜ்
1/5,வடக்குத்தெரு,
மேட்டுப்பாளையம்,
திருத்துறைப்பூண்டி TK
மனுதாரர்
–எதிர்–
1.வட்டாட்சியர், திருத்துறைப்பூண்டி
2.சார்பதிவாளர், திருத்துறைப்பூண்டி
எதிர்மனுதாரர்கள்

அறிவிப்பு

மேற்கண்ட வழக்கில் மனுதாரரின் தந்தை கோவிந்தராஜ் என்பவர் கடந்த 28.12.2017 ஆம் தேதி அன்று மேற்படி முகவரியில் இறந்ததை எதிர் மனுதாரர் பதிந்துவரும் இறப்பு பதிவேட்டில் பதியவேண்டி மனு தாக்கல் செய்துள்ளார். அந்த மனுவை பொறுத்து யாருக்கேனும் ஆட்சேபணை இருப்பின் மேற்படி அலுவலகத்தில் தெரிவித்துக் கொள்ளலாம் என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

G.மனோகரன், த/பெ. கோவிந்தராஜ்
1/5,வடக்குத்தெரு, மேட்டுப்பாளையம்,
திருத்துறைப்பூண்டி TK

**உயர்திரு உட்கோட்ட நடுவர் நீதிமன்றம் மற்றும் வருவாய் கோட்டாட்சியர், மன்னார்குடி**
**த.ப.எண் .118/2025**

பிரேமா, த/பெ. பொன்னுசாமி,
2, பிள்ளையார் கோவில் கீழவீதி,
முதல் சேத்தி அக்ரஹாரம்,
தலைஞாயிறு, நாகை மாவட்டம்.
மனுதாரர்
–எதிர்–
நகராட்சி ஆணையர்,
திருத்துறைப்பூண்டி
எதிர்மனுதாரர்

அறிவிப்பு

மேற்கண்ட வழக்கில் மனுதாரரின் மகன் ரபிநேசன் என்பவர் கடந்த 23.02.2022 ஆம் தேதி அன்று வெங்கடேஸ்வரா நர்ஸிங் ஹோம், 87, ஆஸ்பத்திரி தெரு, திருத்துறைப்பூண்டி என்ற முகவரியில் பிறந்ததை எதிர் மனுதாரர் பதிந்துவரும் பிறப்பு பதிவேட்டில் பதியவேண்டி மனு தாக்கல் செய்துள்ளார். அந்த மனுவை பொறுத்து யாருக்கேனும் ஆட்சேபணை இருப்பின் மேற்படி அலுவலகத்தில் தெரிவித்துக் கொள்ளலாம் என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

பிரேமா, த/பெ. பொன்னுசாமி,
2,பிள்ளையார் கோவில் கீழவீதி,
முதல் சேத்தி அக்ரஹாரம்,
தலைஞாயிறு, நாகை மாவட்டம்

# திருச்சிராப்பள்ளி புனித ஜான்ஸ் வெஸ்டிரி மேல்நிலைப் பள்ளி மைதானத்தில் அமைக்கப்பட்டுள்ள திருச்சி புத்தக திருவிழா கண்காட்சி

## அமைச்சர்கள் கே.என்.நேரு, அன்பில் மகேஸ் பொய்யாமொழி ஆகியோர் தொடங்கி வைத்தனர்



திருச்சி,பிப்.15-
திருச்சி மத்திய பேருந்து நிலையம் அருகில் உள்ள செயின்ட் ஜான்ஸ் வெஸ்டிரி மேல்நிலைப் பள்ளி மைதானத்தில், திருச்சிராப்பள்ளி மாவட்ட நிர்வாகமும், பபாசி இணைந்து 4-ஆவது வருடமாக பிப்ரவரி 14 முதல் பிப்ரவரி 22 வரை நடத்தும் திருச்சி புத்தகத் திருவிழாவினை நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு , பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி ஆகியோர் (14.02.2026) தொடங்கி வைத்து புத்தக அரங்கினை பார்வையிட்டு விழாப் பேருரையாற்றினார்கள்.

இவ்விழாவில், நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என். நேரு தெரிவித்ததாவது:

இந்த புத்தக கண்காட்சி நடத்துவது பள்ளிக்கல்வித்துறைதான். முத்தமிழறிஞர் கலைஞர் முதலமைச்சராக இருந்த போதுதான் புத்தகத் திருவிழா தொடங்கி வைக்கப்பட்டு தொடர்ந்து நடைபெற்று வருகிறது. அதுமட்டுமல்லாமல் புத்தகம் அச்சிடுவோர்கள் புத்தக கண்காட்சி நடத்திட பொருளாதார நெருக்கடி இருப்பதாக கலைஞர் அவர்களிடம் தெரிவித்ததைத் தொடர்ந்து கலைஞர் தனது சொந்த நிதியிலிருந்து ரூபாய் 1 கோடி வைப்பு நிதியாக வழங்கி புத்தகக் கண்காட்சி தொடர்ந்து நடத்திட உதவினார். தற்போது நம்முடைய முதலமைச்சர் சென்னை மட்டுமல்லாது அனைத்து மாவட்டங்களில் புத்தகக் கண்காட்சி நடத்திட உத்தரவிட்டுள்ளதை தொடர்ந்து ஒவ்வொரு மாவட்டமும் இப்புத்தகக் கண்காட்சியை சிறப்பாக நடத்திட வேண்டும் என முனைப்புடன் செயல்பட்டு வருகிறது. ஆகவே இப்புத்தகக் கண்காட்சியை மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் தெரிவித்தார். பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் தெரிவித்ததாவது:

மாணவச் செல்வங்கள், நமது பெற்றோர்கள், நமது பெருமதிப்பிற்குரிய ஆசிரியர்கள் நீங்கள் அனைவரும்; முதல் பிப்ரவரி 22ஆம் தேதி வரை நடைபெற்றுக்கொண்டிருக்கும் இந்த திருச்சி புத்தகத் திருவிழாவில் தவறாமல் கலந்து கொள்ளவேண்டும். புத்தக திருவிழா என்பது ஒரு காலத்தில் சென்னையில் மட்டும்தான் நடைபெற்று கொண்டிருந்தது. அதை மாற்றியமைத்தவர் நம்முடைய தமிழ்நாடு முதலமைச்சர் தான். தமிழ்நாட்டில் உள்ள ஒவ்வொரு மாவட்டத்திலும் நடைபெற வேண்டும் என அவரின் விருப்பத்தின் அடிப்படையில் தொடர்ந்து 2021க்கு பிறகு தமிழ்நாட்டில் இருக்கின்ற ஒவ்வொரு மாவட்டத்திலும் இது போன்ற புத்தக திருவிழாவை தொடர்ந்து நடத்தி கொண்டிருக்கின்றோம்.

ஆகவேதான் நாங்கள் அனைவரும் இவ்விழாவிற்கு வருகை தந்துள்ளோம். இந்த புத்தக திருவிழாவை தமிழ்நாடு அரசே நடத்தி வருகிறது. இதனை அந்தந்த பகுதி மக்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு பயன்பெற வேண்டும். மேலும் உங்களுக்கு பிடித்த புத்தகங்களை வாங்கி உங்கள் வாசிப்பு திறனை வளர்த்து கொள்ள வேண்டும்.

தற்போதுள்ள தலைமுறையினர் செல்போன்உபயோகத்தினை தவிர்த்து புத்தகம் வாசிக்கும் திறனை மேம்படுத்தி கொள்ள வேண்டும் என பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் தெரிவித்தார்.

இப்புத்தகக் கண்காட்சி செயின்ட் ஜான்ஸ் வெஸ்டிரி மேல்நிலைப் பள்ளி மைதானத்தில், சுமார் 5 ஏக்கர் பரப்பளவில் அமைக்கப்பட்டு 130 புத்தக அரங்குகளும், 100-க்கும் மேற்பட்ட பதிப்பாளர்களின் புத்தகங்களும் அனைத்து வகையான வாசகர்களையும் கவரும் வகையில் வரப்பெற்று விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளது. தொடங்கி பிப்ரவரி 22 வரை தினசரி காலை 10 மணி முதல் இரவு 9 மணி வரை நடைபெறும். மேலும், இவ்வளாகத்தில் உணவு அரங்குகள் மற்றும் குடிநீர், கழிவறை வசதி, வாகனங்கள் நிறுத்துமிடம் என தேவையான அனைத்து அடிப்படை வசதிகளும் சிறப்பான முறையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

நாள்தோறும் மாலை 5 மணி முதல் 6 மணி வரை பள்ளி மாணவ மாணவியர்களின் மனதை கவர்ந்திடும் வகையில் பல்வேறு கலை நிகழ்ச்சிகளும், மாலை 6 மணிக்கு மேல் தமிழகத்தின் தலை சிறந்த சிந்தனையாளர்களின் உரைவீச்சும், குதூகலம் தரும் கோமாளி, கதை சொல்லும் விளையாட்டு, பொம்மை கதை, விளையாட்டே கொண்டாட்டம், பலூன் சிற்பங்கள், அறிவியல் மாயங்கள், நல்ல சினிமா பார்ப்போம், பாடி மகிழ்வோம், பறவைகளும் நம் நண்பர்கள், கதை கதையாம் காரணமாம் உள்ளிட்ட தலைப்புகளில் தினந்தோறும் இளையவர் அரங்கமும் மற்றும் மாணவ, மாணவிகளுக்கு அறிவியல் பூர்வமான விசயங்களை அறிந்து கொள்ளும் வகையில் அறிவியல் அரங்கம் மற்றும் அறிஞர்கள் மற்றும் எழுத்தாளர்களை பாராட்டி சிறப்பிக்கும் நிகழ்வுகளும் நடைபெறவுள்ளது. அனைவருக்கும் அனுமதி இலவசமாகக்கப்பட்டுள்ளது. இப்புத்தகத் திருவிழாவை கண்டு களிக்க பொதுமக்கள் மற்றும் மாணவ, மாணவிகள் அனைவரும் பெருந்திரளாக கலந்து கொள்ள மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில், கலெக்டர் வே.சரவணன், மாநகராட்சி மேயர் அன்பழகன் , மாநகராட்சி ஆணையர் லி.மதுபாலன், சட்டமன்ற உறுப்பினர்கள் சௌந்திரபாண்டியன், ஸ்டாலின்குமார், தியாகராஜன், மாவட்ட வருவாய் அலுவலர் அர்.பாலாஜி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் சுங்கதாரிணி, மாவட்ட நூலக அலுவலர் இரா.சரவணக்குமார், மண்டல தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள், அரசு அலுவலர்கள் பள்ளி மாணவ, மாணவிகள், பொது மக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# திருவாரூர் மாவட்டத்தில் நிலவும் பனிப்பொழிவால் நெல்லில் ஏற்படும் நிறமாற்ற நோயை கட்டுப்படுத்தும் வழிமுறைகள்

## வேளாண்மை இணை இயக்குனர் விளக்கம்

திருவாரூர்,பிப்.15-
திருவாரூர் மாவட்டத்தில் நிலவும் பனிப்பொழிவால் நெல்லில் ஏற்படும் நிறமாற்ற நோயை கட்டுப்படுத்தும் வழிமுறைகள் குறித்து வேளாண்மை இணை இயக்குனர் பாலசரஸ்வதி வெளியிட்டுள்ள செய்திகுறிப்பில் தெரிவித்திருப்பதாவது,திருவாரூர் மாவட்டத்தில் தற்போது நிலவிவரும் நீடித்த பனிப்பொழிவின் காரணமாக ஆங்காங்கே நெல் தானிய நிறமாற்ற நோய் பரவி வருகிறது. இந்நோயினால் பாதிப்படைந்த நெல் கதிரில் உள்ள நெல்மணிகள் பச்சை நிறத்தில் இல்லாமல் நிறம் மாறி வெவ்வேறு நிறங்களில் காணப்படுகிறது.அதாவது நெல்மணிகள் பழுப்பு,கருமை,சாம்பல் போன்ற நிறங்களில் காணப்படுகின்றன.பூஞ்சான வளர்ச்சியும் காணப்படுகிறது.இத்துடன் சேர்ந்து பழுப்பு புள்ளி நோயும் இலைகளில் தென்படுகின்றது.இதற்கு நெற்பயிரில் 50 சதவீத பூக்கள் வெளிவந்த நிலையில் முன்னெச்சரிக்கையாக கீழ்க்கண்ட வழிமுறைகளைப் பின்பற்றி நோயை கட்டுப்படுத்தலாம்.வேப்ப எண்ணெய் (60இசி) 3 சதவீதம் அல்லது வேப்பங்கொட்டைச் சாறு ஐந்து சதவீதம் என்ற அளவில் தெளித்து நோயை கட்டுப்படுத்தலாம் அல்லது கார்பெண்டாசியம் மற்றும் மேங்கோசப் கலவையை 2 கிராம் ஒரு லிட்டர் தண்ணீருக்கு என்ற அளவில் தெளிக்கும் நோயை கட்டுப்படுத்தலாம் அல்லது டேபுகோனசோல் 50 சதவீதம் மற்றும் ட்ரைபிளாக்சிஸ் ஸ்ட்ரோபின் 25 சதவீதம் எனும் கலவையை மருந்தினை நான்கு கிராம் பத்து லிட்டர் தண்ணீர் என்ற அளவில் தெளித்து நோயை கட்டுப்படுத்தலாம்.வயலிலும் வரப்புகளிலும் களைகள் இன்றி தூய்மையாக பராமரித்தல் வேண்டும்.தலை சக்தினை தேவைக்கு அதிகமாக பயன்படுத்துவதை தவிர்த்தல் நல்லது.இந்த நோயின் ஆரம்ப நிலையிலேயே கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.இவ்வாறு வேளாண்மை இணை இயக்குனர் பாலசரஸ்வதி தெரிவித்துள்ளார்.

# செம்பியம் பகுதியில் 2 பூட்டிய வீடுகளில் திருடிய பெண் கைது

சென்னை பிப் 15-
சென்னை, பெரம்பூர், வெங்கட்ராமன் தெருவில் வசித்து வரும் சுகுமாறன், என்பவர் டூல்ஸ் கடை வைத்து நடத்தி வருவதாகவும், இவர் கடந்த 10.ந் தேதி அன்று காலை, வழக்கமாக மேற்படி அவரது வீட்டை பூட்டிவிட்டு, சாவியை வீட்டிற்கு வெளியே காலணியில் மறைத்து வைத்துவிட்டு, கடைக்கு சென்றதாகவும், பின்னர் மதியம் வீட்டிற்கு வந்து பார்த்தபோது, யாரோ கதவை திறந்து, வீட்டிற்குள் வைத்திருந்த சுமார் பணம் 4, ஆயிரம் மற்றும் வெள்ளிப் பொருட்களை திருடிச் சென்றுள்ளதாகவும் சுகுமாறன் என்பவர் செம்பியம் காவல் நிலைய குற்றப்பிரிவில் கொடுத்த புகாரின்பேரில், போலீசார் வழக்குப் பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர்.செம்பியம் காவல் நிலைய குற்றப்பிரிவு ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் சம்பவ இடத்தில் தீவிர விசாரணை செய்து, மேற்படி திருட்டு சம்பவத்தில் ஈடுபட்ட எதிரி இந்துமதி, என்பவரை கைது செய்தனர். விசாரணையில் எதிரி இந்துமதி என்பவர் இராணிப்பேட்டையிலிருந்து இரயில் மூலம் சென்னைக்கு வந்து, பூட்டிய மற்றும் திறந்திருக்கும் வீடுகளை நோட்டமிட்டு, செம்பியம் பகுதியில் புகார்தாரரின் வீடு மற்றும் ராமசந்திரன் தெருவில் உள்ள ஒரு வீட்டில் புகுந்து பணத்தை திருடிச் சென்றதும் தெரியவந்ததின்பேரில், எதிரியிடமிருந்து மொத்தம் பணம் ரூ.7, ஆயிரம் மற்றும் வெள்ளி அரைஞாண் கயிறு, 3 சிறிய வெள்ளி காசுகள் உட்பட வெள்ளிப் பொருட்கள் மீட்கப்பட்டது. மேலும் விசாரணையில் எதிரி இந்துமதி மீது ஏற்கனவே, இராணிப்பேட்டை, அரக்கோணம், பெரும்பாக்கம், போளூர், மதுரவாயல் ஆகிய காவல் நிலையங்களில் திருட்டு வழக்குகள் நிலுவையில் உள்ளதும் தெரியவந்தது.

கைது செய்யப்பட்ட எதிரி இந்துமதி, விசாரணைக்குப் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டார்.

தின பூமி நாளிதழ் படியுங்கள்

# தொட்டியத்தில் அதிமுக ஆர்ப்பாட்டம்

தொட்டியம்,பிப்.15-
தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதி திட்டத்தினை 100 நாளிலிருந்து மத்திய பாஜக அரசு 125 நாளாக உயர்த்தியும் அதை திமுக அரசு கண்டிப்பதை, கண்டித்து அதிமுக சார்பில் தொட்டியம் யூனியன் ஆபீஸ் எதிரே கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்திற்கு தொட்டியம் அதிமுக ஒன்றிய கழக செயலாளர் செல்வராஜ் தலைமை வகித்தார். முன்னாள் அமைச்சர் அண்ணாவி, அதிமுக நகர செயலாளர்கள் திருஞானம் ராமச்சந்திரன், மணமேடு நெடுமாறன், பிஜேபி ஒன்றிய செயலாளர் சுகந்தி பெரியசாமி, அதிமுக ஒன்றிய இணை செயலாளர் சுபத்ரா, தமாகா வட்டாரத் தலைவர் மனோகரன், அமமுக ஒன்றிய செயலாளர் தெய்வமணி, நகர செயலாளர் மெஸ் சரவணன், பாட்டாளி மக்கள் கட்சி ஒன்றிய செயலாளர் வெங்கடேசன், ஐஜேகே மாவட்டத் தலைவர் கருணாகரன், மாவட்ட செயலாளர் தண்டபாணி உள்ளிட்ட பலர் முன்னிலை வகித்தனர். ஆர்ப்பாட்டத்தில் அதிமுக கூட்டணி கட்சிகள் பாஜக, தமாகா, அமமுக, பாமக, ஐ.ஜே.கே. உள்ளிட்ட கூட்டணி கட்சிகளின் மாவட்ட, ஒன்றிய, நகர, ஊராட்சி நிர்வாகிகள் சார்பணி நிர்வாகிகள், முன்னாள் இந்நாள் உள்ளாட்சி பிரதிநிதிகள் திரளாக கலந்து கொண்டனர். கூட்டத்தில் தேசிய ஊரக வேலை வாய்ப்பு திட்டத்தினை 125 நாளாக உயர்த்தியும், அப்பணியினை சீரமைத்தும் இருக்கும் மத்திய அரசை திமுக கண்டிப்பது ஏன் உள்ளிட்ட கண்டன கோஷங்கள் எழுப்பப்பட்டது.

Printed, Published and Owned by S.Manimaran and Printed at
Manimaran Printers
No. 1 Santhanapuram, Madurai-Trichy 4 Way Main Road, Nagamangalam, Trichy-620 012
Ph: 0431-2680969
E-Mail: trichyedi@thinaboomi.com
RNI.Regn No.61511/94
Editor:S.MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only

# சிடி சர்வதேச பள்ளியில் தாய்- மகளுக்கு நெருப்பில்லா சமையல் போட்டி



பொன்னமராவதி,பிப்.15-
பொன்னமராவதி அடுத்த கேசராபட்டி சிடி சர்வதேச பள்ளியில் தாய்க்கும் குழந்தைக்கும் இடையேயான அன்பை வெளிப்படுத்தும் வகையிலான தாயும் குழந்தையும் சேர்ந்து நெருப்பு இல்லாமல் சமைக்கும் போட்டி நடைபெற்றது. இதில் பச்சை காய்கறிகள் பழங்கள், பால் தயிர் இளநீர், அவல், வெற்றிலை நவதானியங்கள் ஆகியவற்றை வைத்து பெற்றோர்களும் குழந்தைகளும் சேர்ந்து 20 நிமிடங்களில் உணவு தயாரித்து அசத்தினர். இதற்கு சாந்தி வெங்கட்ராமன் அவர்களும் கவிதா பழனியப்பன் அவர்களும் தேனு அவர்களும் நடுவர்களாக பணியாற்றி சிறந்த உணவு தயாரித்த தாயாரை தேர்வு செய்து அவர்களுக்கு பரிசுகள் வழங்கினார்கள். மேலும் மாணவர்கள் பயனடையும் வகையில் பள்ளி வளாகத்தில் மாணவர்களுக்கான புத்தகங்கள் கண்காட்சி வைக்கப்பட்டது.ஏராளமான மாணவர்கள் புத்தகங்களை வாங்கி பயன் பெற்றனர். நிகழ்வுகளுக்கான ஏற்பாடுகளை பள்ளியின் நிறுவனர் மற்றும் தலைவர் பழ. சிதம்பரம் மற்றும் பள்ளி தாளாளர் செயல் அலுவலர் ஆசிரியர்கள் செய்திருந்தனர்.

தமிழ்நாடு அரசு
**திருப்பூர் மாவட்டம், குன்னத்தூர் (தேர்வுநிலை) பேரூராட்சி**
ந.க.எண். 30/ 2026 **ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கை** நாள். 13.02.2026

திருப்பூர் மாவட்டம், குன்னத்தூர் (தேர்வுநிலை) பேரூராட்சி கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் **(KNMT)** 2025-2026ம் ஆண்டிற்கு கீழ்கண்ட வேலையினை செய்து முடிப்பதற்கு தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து இணையதளம் வாயிலாக ஒப்பந்தப்புள்ளி கோரப்படுகிறது.

இணையதளம் வாயிலாக ஒப்பந்தப்புள்ளி படிவங்களை 13.02.2026ம் தேதி வெள்ளிக்கிழமை முதல் **https://tntenders.gov.in** என்ற இணையதளத்திலிருந்து ஆன்லைன் மூலம் பதிவேற்றம் செய்யலாம். பதிவேற்றம் செய்பவர்கள் அட்டவணை கலம் எண்.4 ல் கண்டுள்ள முன்வைப்புத் தொகையை ஆன்லைனில் செலுத்தி **20.02.2026ம் தேதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 03.00 மணிக்குள்** இணையதளம் வாயிலாக சமர்ப்பிக்கப்பட வேண்டும். மேலும் பதிவேற்றம் செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் **20.02.2026 அன்று வெள்ளிக்கிழமை மாலை 03.30 மணிக்கு** பேரூராட்சியின் செயல் அலுவலர் அல்லது அவரது அதிகாரம் பெற்றவரால், நேரில் ஆஜராகி உள்ள ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் தொழில்நுட்ப ஒப்பந்தப்புள்ளி உறை **(Technail Bid)** திறக்கப்படும்.

**கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம். (KNMT) 2025-2026**

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. | செலுத்த வேண்டிய முன் வைப்பு தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1. | கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம். (KNMT) 2025-2026 குன்னத்தூர் பேரூராட்சியில் வார்டு எண்.4 பொன்காளியம்மன் நகர் தார்சாலை அமைத்தல் பணி. | 53,00,000/- | 1,06,000/- |

நிபந்தனைகள் : 1. தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டம் 1998 மற்றும் விதிகள் 2000ல் தெரிவிக்கப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் விதிமுறைகளை கடைபிடிக்கப்பட வேண்டும்.
2. ஒப்பந்தப்புள்ளி சம்பந்தப்பட்ட நிபந்தனைகள் மற்றும் இதர விவரங்கள் அலுவலக நாட்களில் அலுவலக நேரத்தில் நேரில் கேட்டு தெரிந்து கொள்ளலாம்.
3. ஒப்பந்தப்புள்ளியினை ஒத்தி வைக்கவோ, ரத்து செய்யவோ செயல் அலுவலருக்கு முழு அதிகாரம் உண்டு.
4.ஒப்பந்தப்புள்ளிகள் பேரூராட்சி மன்றத்தின் அங்கீகாரத்திற்கு உட்பட்டது.

தலைவர்,
குன்னத்தூர் பேரூராட்சி, திருப்பூர் மாவட்டம்.
செ.ம.தொ.இ./ 1102/ ஒப்பந்தப்புள்ளி / 2026
செயல் அலுவலர்,
குன்னத்தூர் பேரூராட்சி, திருப்பூர் மாவட்டம்.

## பொது அறிவிப்பு

**திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஸ்ரீரங்கம் வட்டம், சீராதோப்பு, மருதாண்டாகுறிச்சி கதவு எண் : 5/9–ல் வசித்து வரும் அப்பாவு மகன் எஸ்.ஏ. மணிவேல் அவர்களின்சார்பாகவும் தகவலின் பேரிலும் கொடுக்கும் அறிவிப்பு என்னவென்றால்,**

**என் கட்சிக்காரர் 08.12.2025–ம் தேதி மாலை 7.5 மணி அளவில் கீழ்கண்ட பத்திரங்களை ஒரு மஞ்சள் நிற பையில் போட்டு குழுமணி மெயின் ரோட்டில், கடைவீதியில் உள்ள பஸ் நிறுத்தம் அருகில் உள்ள கடையில் ஜெராக்ஸ் எடுத்து தன் டூவிலர் முன்பகுதியில் மாட்டி இருந்தார். குழுமணி வாரசந்தை திங்கள்கிழமை கூட்டம் அதிகமாக இருந்தது. சீராத்தோப்பு வீட்டிற்கு சென்று பார்த்த போது அசல் பத்திரங்களை வைத்த மஞ்சள் பையை காணவில்லை. உடனே வந்த வழிகளில் கட்சிகாரர் மற்றும் நண்பர்கள் குழுமனி ஜெராக்ஸ் கடை வரை சென்று பார்த்ததும் பையை காணவில்லை. இது சம்பந்தமாக ஜீயபுரம் காவல் நிலையத்தில் புகாரின் நேரில் தெரிவித்தும், SP காவல் அலுவலத்தில் புகார் மனுவினை கொடுத்துள்ளார். மேற்படி பையை யாராவது எடுத்திருந்தால் அதை என் கட்சிக்காரரிடமோ, ஜீயபுரம் காவல் நிலையத்திலோ ஒப்படைக்கவும். மேற்படி பையில் உள்ள பத்திரங்களை வைத்து யாராவது ஏதேனும் வில்லங்கம் செய்ய நினைத்தால் அது என் கட்சிக்காரரை கட்டுப்படுத்தாது. இந்த சொத்து குறித்து யாருக்கேனும் ஆட்சேபனைகள் இருந்தால் எனது கட்சிக்காரரின் வழக்கறிஞரின் முகவரிக்கு தெரியப்படுத்தவும்.**

**காணாமல் போன பத்திர விவரம்.**

**1.ஆவண எண் மற்றும் ஆண்டு: 1589/1988 சர்வே எண்: 156/5**

**R. Kowsalya, B.A.,B.L.,**
**G.Mamallan, B.A.,B.L.,**
**29 A Kudistreet, perur, Kulumani main road,**
**Kulumani (po), Srirengam Tk,**
**Trichy District.**
**Cell No: 95142 02212, 93606 6425.**

## டி-20 உலகக்கோப்பை லீக்:
# இந்தியா-பாகிஸ்தான் இன்று கொழும்புவில் பலப்பரீட்சை

கொழும்பு, பிப். 15-

டி-20 உலகக்கோப்பை தொடரில் முக்கிய ஆட்டமாகப் பார்க்கப்படும் இந்தியா - பாக்., ஆட்டம், ஞாயிற்றுக்கிழமை (பிப்ரவரி 15) இலங்கையில் நடக்கவுள்ளது. பல்வேறு அரசியல் நெருக்கடிகளுக்குப் பிறகு பேச்சு வார்த்தை மூலம் இந்தியா-பாகிஸ்தான் ஆட்டம் திட்டமிட்டபடி நடக்கவுள்ளது.



**இன்று இரவு போட்டி...**

டி20 உலகக் கோப்பையில் ரசிகர்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் இந்தியா-பாகிஸ்தான் இடையிலான போட்டி கொழும்பில் இன்று இரவு நடக்கிறது. இந்த போட்டிக்காக இரு அணிகளும் கொழும்பில் தீவிர பயிற்சி மேற்கொண்டு வருகிறார்கள். இந்திய அணியின் தொடக்க வீரரான அபிஷேக் சர்மா, உடல்நிலை சரியில்லாத காரணத்தில் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில், டிஸ்சார்ஜ் ஆகி அணியில் இணைந்துள்ளார்.

**பகல்காம் தாக்குதல்...**

கிரிக்கெட் போட்டியின் போது டாஸ் நிகழ்வில் இரு அணிகளின் கேப்டன்கள் கை குலுக்கி கொள்வது வழக்கமானது. இதே போல போட்டி முடிந்த பிறகும் வீரர்கள் கைகுலுக்கி கொள்வார்கள். பகல்காம் தாக்குதல் சம்பவம் எதிரொலியாக பாகிஸ்தான் வீரர்களிடம் சூர்யகுமார் யாதவ் தலைமையிலான இந்திய வீரர்கள் ஆசிய கோப்பை போட்டியின் போது கைகுலுக்க மறுத்து விட்டனர். மேலும் ஆசிய கிரிக்கெட் கவுன்சில் தலைவரும், அந்நாட்டு அமைச்சரும், பாகிஸ்தான் கிரிக்கெட் வாரிய தலைவருமான மோஷின் நக்வியிடம் இருந்து ஆசிய கோப்பையையும் வாங்க சூர்யகுமார் யாதவ் மறுத்துவிட்டார்.

**கைகுலுக்குவார்களா?**

இந்த சர்ச்சை முடிந்த பிறகு இரு அணிகளும் 20 ஓவர் உலக கோப்பைக்காக நாளை மோதுகிறார்கள். இந்தியாவுடன் விளையாட முதலில் மறுத்து பின்னர் பாகிஸ்தான் ஒப்புக்கொண்டது. இன்றைய ஆட்டத்தின் போது பாகிஸ்தான் வீரர்களிடம் இந்திய வீரர்கள் கைகுலுக்குவார்களா? என்ற கேள்வி எழுந்துள்ளது. பேச்சு வார்த்தையின்போது ஐ.சி.சி.யிடம் இந்த நிபந்தனையும் பாகிஸ்தான் முன்வைத்ததாக தகவல் வெளியானது. இதை ஐ.சி.சி. நிராகரித்துவிட்டதாகவும் கூறப்படுகிறது.

**சஞ்சு சாம்சனுக்கு...**

அணியின் தொடக்க வீரரான அபிஷேக் சர்மா, உடல்நிலை சரியில்லாத காரணத்தில் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில், டிஸ்சார்ஜ் ஆகி அணியில் இணைந்துள்ளார். ஆனால், இன்றைய போட்டியில் அவர் விளையாடலாம் எனத் தெரிகிறது. ஆனால், அணி நிர்வாகம் இதுவரை அதிகாரப்பூர்வமாக இது தொடர்பாக எதுவும் தெரிவிக்கவில்லை. அபிஷேக் சர்மா இடம் பெறவில்லை என்றால் சஞ்சு சாம்சன் தொடர்ந்து அணியில் இடம் பிடிப்பார். இவர் நமீபியாவுக்கு எதிராக விளையாடினார்.

பாக். கேப்டன் விருப்பம்...

இந்த நிலையில் அபிஷேக் சர்மா குறித்து பாகிஸ்தான் கேப்டன் சல்மான் ஆகா கூறுகையில் "அபிஷேக் சர்மா பெஸ்ட் (Best). மிகவும் எதிர்பார்க்கக் கூடிய இந்தியா- பாகிஸ்தான் போட்டியில் அவர் இடம் பெறுவார் என்ற நம்பிக்கை உள்ளது. நாங்கள் சிறந்த வீரருக்கு எதிராக விளையாட விரும்புகிறோம்" என்றார்.

### கனத்த மழைக்கு வாய்ப்பு

இன்றைய ஆட்டம் நடக்கும் மாலை நேரத்தில் கொழும்பு வட்டாரத்தில் மழை பெய்யும் வாய்ப்பு 70 விழுக்காடு இருப்பதாக இலங்கையின் வானிலை ஆய்வகம் கூறுகிறது. ஆட்டம் நடக்கும் பிரேமதாசா விளையாட்டரங்கு சிறப்பான வசதிகளைக் கொண்ட விளையாட்டரங்கு. மழை ஓய்ந்த 20 நிமிடங்களில் ஆட்டத்தை நடத்தும் திறன் கொண்டது அது. இந்த ஆட்டத்தைக் காண ஆயிரக்கணக்கான இந்தியா, பாகிஸ்தான் நாட்டு ரசிகர்கள் இலங்கை சென்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

## டி-20 உலகக்கோப்பை லீக்:
# அயர்லாந்து - அமெரிக்கா வெற்றி

சென்னை, பிப். 15-

டி20 உலகக்கோப்பை லீக் ஆட்டங்களில் அயர்லாந்து, அமெரிக்கா அணிகள் வெற்றி பெற்றுள்ளன.

**235 ரன்கள் குவிப்பு...**

டி20 உலகக் கோப்பை தொடரின் லீக் ஆட்டத்தில் அயர்லாந்து - ஓமன் அணிகள் மோதின. இப்போட்டியில் டாஸ் வென்ற ஓமன் அணி பந்துவீச்சை தேர்வு செய்தது. முதல்படி முதலில் களமிறங்கிய அயர்லாந்து அணி 20 ஓவர்கள் முடிவில் 5 விக்கெட் இழப்பிற்கு 235 ரன்கள் குவித்தது. அதிகபட்சமாக கேப்டன் லோர்கன் டுக்கெர் 94 ரன்கள் அடித்தார். இதையடுத்து 236 ரன்கள் என்ற இலக்குடன் களமிறங்கிய ஓமன் அணி 18 ஓவர்கள் முடிவில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 139 ரன்கள் மட்டுமே எடுத்து 96 ரன்கள் வித்தியாசத்தில் தோல்வி அடைந்தது. இதன்



மூலம் இந்த உலகக்கோப்பையில் அயர்லாந்து அணி தனது முதல் வெற்றியை பதிவு செய்துள்ளது.

**சென்னையில்.....**

டி20 உலகக் கோப்பையில் 'ஏ' பிரிவில் இடம் பிடித்துள்ள அமெரிக்கா-நெதர்லாந்து அணிகள் மோதிய போட்டி சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் நடைபெற்றது. இதில் முதலில் களம் இறங்கிய அமெரிக்கா 6 விக்கெட் இழப்பிற்கு 196 ரன்கள் குவித்தது. அந்த அணியின் சைதேஜா முக்காமல்லா 51 பந்தில் 79 ரன்கள் விளாசினார். சுபம் ரஞ்சனே அதிரடியாக விளையாடி 24 பந்தில் 48 ரன்கள் குவித்தார். நெதர்லாந்து அணி சார்பில் பாஸ் டி லீட் 3 விக்கெட் வீழ்த்தினார்.

**197 ரன்கள் இலக்கு...**

பின்னர் 197 ரன்கள் அடித்தால் வெற்றி என்ற கடின இலக்குடன் நெதர்லாந்து களம் இறங்கியது. அமெரிக்காவின் பந்து வீச்சை தாக்குப் பிடிக்க முடியாமல் நெதர்லாந்து 103 ரன்னில் சுருண்டது. இதனால் அமெரிக்கா 93 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

நெதர்லாந்து அணியில் பாஸ் டி லீட் அதிகபட்சமாக 23 ரன்கள் சேர்த்தார். கேப்டன் ஸ்காட் எட்வர்ட்ஸ் 20 ரன்கள் அடித்தார். அமெரிக்க அணி சார்பில் சர்மித் சிங் 4 விக்கெட்டும், வான் ஸ்கால்வைக் 3 விக்கெட்டும் வீழ்த்தினர்.

## பாரா உலக சாம்பியன்ஷிப்:
# 6-வது முறையாக இந்தியாவின் பிரமோத் பகத்தங்கம் வென்றார்

பஹ்ரைன், பிப். 15-

பஹ்ரைனில் நடைபெற்று வந்த பிடபிள்யூஎஃப் பாரா உலக சாம்பியன்ஷிப்பில் ஆறாவது முறையாக தங்கம் வென்ற இந்தியாவின் பிரமோத் பகத் தனது உலக சாதனையை நீட்டித்துள்ளார். இதற்கு முன்பாக, இவர் டோக்கியோ பாராலிம்பிக்கில் தங்கம் வென்றிருந்தது குறிப்பிடத்தக்கது.

**8-வது தங்கம்....**

பீகாரைச் சேர்ந்த பாரா பாட்மின்டன் வீரர் பிரமோத் பகத் (37 வயது) பஹ்ரைனில் நடந்த பிடபிள்யூஎஃப் பாரா



உலக சாம்பியன்ஷிப் எஸ்எல்3 இறுதிப் போட்டியில் இந்தோனேசிய வீரர் முகமது அலி இம்ரான் உடன் மோதினார். இந்தப் போட்டியில் பிரமோத் பகத் 21-12, 21-18 என்ற கேம்களில் வென்றார். உலக சாம்பியன்ஷிப்பில் 6-ஆவது தங்கம் வென்ற பிரமோத் பகத்துக்கு மொத்தமாக இது 8-ஆவது தங்கம் என்பதும் குறிப்பிடத்தக்கது. ஒற்றையர் பிரிவில் 6 தங்கம், இரட்டையர் பிரிவில் 2 தங்கம் என மொத்தமாக 8 வென்று வரலாறு படைத்துள்ளார்.

**18 மாதங்கள் தடை.....**

இந்திய பாரா பாட்மின்டன் வீரர் பிரமோத் பகத், ஊக்கமருந்து பரிசோதனையில் பங்கேற்காததாகக் கூறி, விளையாட்டுக்கான சர்வதேச நடுவர் மன்றம் அவருக்கு 18 மாதங்கள் தடை விதித்தது. அதன்படி பாரீஸ் பாராலிம்பிக் போட்டியில் பங்கேற்க முடியாமல் போனது. 2025 செப்டம்பர் 1-ஆம் தேதி வரை பிரமோத் பகத் மீதான தடை நீடித்தது. தொழில்நுட்ப கோளாறு காரணமாக நிகழ்ந்த இந்தப் பிரச்னைக்குப் பிறகு அவர் மீண்டு வந்து தங்கம் வென்றுள்ளது மிகுந்த உத்வேகத்தை அளித்துள்ளது. கடந்த ஜனவரியில் தடைக்குப் பிறகு பங்கேற்ற பிரமோத் பகத், எகிப்து பாரா பாட்மின்டனில் இரட்டைத் தங்கம் வென்றிருந்தார்.

### கும்ப்ளே, டிராவிட் பெயர் சூடல்

இந்தியாவில் உள்ள புகழ்பெற்ற சர்வதேச கிரிக்கெட் மைதானங்களில் ஒன்று பெங்களூருவில் உள்ள சின்னசாமி மைதானம். இந்த மைதானத்தில் உள்ள கேலரிக்கு அனில் கும்ப்ளே, ராகுல் டிராவிட் பெயர்களை சூட்டி கர்நாடக மாநில கிரிக்கெட் சங்கம் கவுரவித்துள்ளது. கர்நாடக மாநிலத்தைச் சேர்ந்த இருவரும் இந்தியா அணிக்காக தங்களது சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்தியுள்ளனர். ராகுல் டிராவிட் டெஸ்ட் அணியின் தடுப்புச் சுவர் என்று அழைக்கப்பட்டவர். அனில் கும்ப்ளே பாகிஸ்தானுக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் ஒரு இன்னிங்சில் 10 விக்கெட்டுகளை வீழ்த்தி சாதனைப் படைத்தவர். அனில் கும்ப்ளே 132 டெஸ்ட போட்டிகளில் விளையாடி 619 விக்கெட்டுகள் வீழ்த்தியுள்ளார். 271 ஒருநாள் போட்டிகளில் 337 விக்கெட்டுகள் வீழ்த்தியுள்ளார்.

# மகளிருக்கு சிறப்பு உரிமைத்தொகை: குறுஞ்செய்தி அனுப்பிய முதல்வர்

சென்னை, பிப். 15-

ரூ.5000 உரிமைத்தொகை அளித்தபின் மகளிருக்கு முதல்வர் குறுஞ்செய்தி ஒன்றை அனுப்பியுள்ளார்.

1.31 கோடி கலைஞர் மகளிர் உரிமைத் திட்டப் பயனாளிகளுக்கும் நேற்று முன்தினம் காலை 5 ஆயிரம் ரூபாய் வரவு வைக்கப்பட்டிருக்கிறது. இதுகுறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில், "தமிழ்நாட்டு மகளிருக்கு இந்த ஸ்டாலின் தந்த உறுதிமொழிதான் உரிமைத் தொகை. யார் தடை ஏற்படுத்தினாலும் அதிலிருந்து பின்வாங்க மாட்டேன். தேர்தலைக் காரணம் காட்டி, மூன்று மாதங்களுக்கு உரிமைத்தொகையை முடக்கப் பார்க்கிறார்கள். முந்திக்கொண்டது நமது திராவிட மாடல் அரசு.

பிப்ரவரி, மார்ச், ஏப்ரல் மாதங்களுக்கான முன்பண மாக ரூ.3 ஆயிரம் மற்றும் கோடைக்காலச் சிறப்புத் தொகுப்பாக ரூ.2 ஆயிரம். வெல்லும் தமிழ்ப் பெண்கள் ஆதரவோடு அடுத்தும் நாங்கள்தான் வெல்வோம். திராவிட மாடல் 2.0-ல் ஆயிரம் ரூபாய் உரிமைத் தொகையை 2 ஆயிரமாக உயர்த்தி வழங்குவோம்! இது, என் சகோதரிகளுக்கு இந்த முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் கொடுக்கும் வாக்குறுதி! வெல்வோம் ஒன்றாக" என்று தெரிவித்தார்.

இந்நிலையில், ரூ.5000 உரிமைத்தொகை அளித்தபின் மகளிருக்கு முதல்வர் குறுஞ்செய்தி ஒன்றை அனுப்பியுள்ளார். அந்த குறுஞ்செய்தியில், "அன்பு சகோதரிக்கு வணக்கம்! மகளிரின் உழைப்புக்கு அங்கீகாரம் அளிக்கும் "கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தில்", உங்கள் வங்கிக் கணக்கிற்கு நேற்று ரூ.5000 அனுப்பி வைத்துள்ளோம்.

இதனை உங்கள் அத்தியாவசிய தேவைக்கும், சேமிப்புக்கும் பயன்படுத்திக்கொள்ளுங்கள் என அன்புடன் கேட்டுக்கொள்கிறேன் என்று தெரிவித்துள்ளார்.



தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமைச் செயலகத்தில், இந்து சமய அறநிலையத்துறை சார்பில் ஒருகால பூஜை திட்ட அர்ச்சகர்களுக்கு வழங்கப்பட்டு வரும் மாதாந்திர ஊக்கத்தொகையினை 1,500/- ரூபாயாக உயர்த்தி வழங்கிடும் அடையாளமாக 10 அர்ச்சகர்களுக்கு அதற்கான காசோலைகளையும், 19,000 ஒருகால பூஜை திட்டத் திருக்கோயில்களுக்கு 8.58 கோடி ரூபாய் செலவில் கொள்முதல் செய்யப்பட்ட பூஜை உபகரணங்களை வழங்கிடும் அடையாளமாக 50 ஒருகால பூஜை திட்ட திருக்கோவில்களின் அர்ச்சகர்களிடம் பூஜை உபகரணங்களையும் வழங்கினார்.

## வங்கதேசத்தில் புதிய அரசு பதவியேற்பு விழா:
# சிறப்பு விருந்தினராக பங்கேற்கிறார் மோடி?

டாக்கா, பிப். 15-

வங்கதேசத்தில் புதிய அரசு பதவியேற்பு விழாவில் சிறப்பு விருந்தினராகப் பிரதமர் நரேந்திர மோடி வருகையை வங்கதேச தலைவர்கள் எதிர்பார்க்கின்றனர்.

வங்கதேச தேர்தலில் அமோக வெற்றி பெற்று ஆட்சிப்பீடத்தில் அரியணையேற உள்ள வங்கதேச தேசியவாத கட்சி (பிஎன்பி) மூத்த தலைவர்களுள் ஒருவரான ஏஎன்எம் எசானுல் ஹோக் மிலன் பேசுகையில், மோடிக்கு அழைப்பு விடுக்கப்படும் என்ற தகவலை தெரிவித்தார். தலைநகர் தாக்காவில் சனிக்கிழமை (பிப். 14) செய்தியாளர்களுடன் பேசிய அவரிடம், பதவியேற்பு விழாவுக்கு ஆசிய தலைவர்கள் அழைக்கப்படுவரா என்பது குறித்து கேட்கப்பட்டது.

அதற்குப் பதிலளித்துப் பேசிய அவர், "பிரதமர் மோடி கட்டாயம் அழைக்கப்பட்ட வேண்டும். தலைவர்கள் ஒவ்வொருவருக்கும் கட்சித் தலைமை அழைப்பு விடுக்கும் என்ற நம்பிக்கை உள்ளது. அதுவே பொது மரபு. நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர்கள் அதைச் செய்வார்கள். ஒட்டுமொத்த உலகமும் எங்களுடன் இருக்கும் என்று நம்புகிறேன். நாங்கள் அனைவருக்கும் நண்பர்கள்; எவருக்கும் பகைவர் அல்ல!" என்றார். வங்கதேசத்தில் புதிய அரசு பதவியேற்பு விழா அடுத்த 4 நாள்களில் நடைபெறும் என்று அக்கட்சியின் தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

# கொல்கத்தா - ஷில்லாங் இண்டிகோ விமானத்துக்கு வெடிகுண்டு மிரட்டல்

கொல்கத்தா, பிப். 15-

ஷில்லாங் புறப்பட தயாராகவிருந்த இண்டிகோ விமானத்துக்கு வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

மேற்கு வங்க மாநிலம், கொல்கத்தா விமான நிலையத்திலிருந்து இண்டிகோ விமானம் சனிக்கிழமை காலை 9:15 மணிக்கு ஷில்லாங் புறப்படத் தயாராகவிருந்தது. அப்போது விமானத்தின் கழிப்பறையில் ஒரு காகிதத் துண்டு இருப்பதை விமானக் குழுவினர் கண்டுபிடித்தனர்.

அதில் விமானத்திற்குள் வெடிகுண்டு இருப்பதாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. உடனடியாக, பயணிகள் அனைவரும் விமானத்திலிருந்து வெளியேற்றப்பட்டனர். பின்னர் விமானம் தனிமைப்படுத்தப்பட்டு முழுமையான சோதனைக்கு உட்படுத்தப்பட்டது. சோதனையில் சந்தேகப்படியான பொருள்கள் எதுவும் கண்டுபிடிக்கப்படவில்லை. இதைத்தொடர்ந்து வெடிகுண்டு மிரட்டல் வெறும் புரளி என தெரியவந்தது. இந்த சம்பவத்தால் கொல்கத்தா விமான நிலையத்தில் சிறிது பரபரப்பு நிலவியது.

## 235 ரன்கள் குவித்து
# டி-20 உலகக் கோப்பையில் அயர்லாந்து புதிய வரலாறு

சென்னை, பிப். 15-

டி-20 உலகக் கோப்பை 2026-ல் அதிக ரன்களை குவித்து அயர்லாந்து அணி புதிய வரலாறு படைத்துள்ளது.

**ஹாட்ரிக் சிக்ஸர்....**

கொழும்பில் நடைபெற்ற இந்தப் போட்டியில் டாஸ் வென்ற ஓமன் அணியின் கேப்டன் ஜதீங்கர் சிங் பந்துவீச்சைத் தேர்வு செய்தார். முதலில் பேட்டிங் செய்த அயர்லாந்து அணியின் கேப்டன் லார்கன் டக்கெர் 51 பந்துகளில் 94 ரன்கள் எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தார்.

கரேத் டெலானி 30 பந்துகளில் அரைசதம் அடித்து ஆட்டமிழக்க, கடைசியில் வந்த ஜார்ஜ் டாக்ரெல் 9 பந்துகளில் 35 ரன்கள் எடுத்து அணியின் ஸ்கோரை உயர்த்தினார். குறிப்பாக, கடைசி ஓவரின் மூன்று பந்துகளிலும் ஹாட்ரிக் சிக்ஸர் அடித்து ஜார்ஜ் டாக்ரெல் அசத்தினார்.

**புதிய சாதனை....**

டி20 உலகக் கோப்பை 2026-ல் அதிக ரன்களை (235) குவித்த அணியாக அயர்லாந்து அணி புதிய சாதனை படைத்துள்ளது. இதற்கு முன்பாக இலங்கை இந்தத் தொடரில் 225 ரன்கள் எடுத்திருந்தது. ஒட்டுமொத்த உலகக் கோப்பையின் வரலாற்றில் இது இரண்டாவது அதிக பட்ச இலக்கு என்பதும் குறிப்பிடத்தக்கது.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

### டி-20 உலகக்கோப்பையில் அதிக ரன்கள்:

1. இலங்கை - 260/6 ரன்கள் (கென்யாவுக்கு எதிராக, 2007).
2. அயர்லாந்து - 235/5 (ஓமனுக்கு எதிராக, 2026).
3. இங்கிலாந்து - 230/8 (தெ.ஆ. எதிராக, 2016).
4. தென்னாப்பிரிக்கா - 229/4 (இங்கிலாந்துக்கு எதிராக, 2016).
5. இலங்கை - 225 (ஓமனுக்கு எதிராக, 2026).
6. இந்தியா - 218/5 (இங்கிலாந்துக்கு எதிராக, 2007) .

# விஜய் பேச்சு குறித்த கேள்விக்கு துணை முதல்வர் உதயநிதி பதில்

மதுரை, பிப். 15-

த.வெ.க. தலைவர் விஜய் குறித்த கேள்விக்கு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பதிலளித்துள்ளார்.

மதுரையில் செய்தியாளர்கள் சந்திப்பின்போது தமிழக அரசு ரூ. 5,000 மகளிர் உரிமைத்தொகை கொடுத்தது குறித்த கேள்விக்கு அவர் அளித்த பதிலில், தமிழக முதல்வருக்கும் எங்கள் அண்ணனுக்கும் நன்றி சொல்லுங்கள் என நான் மதுரை வந்த போது அதிகமான பெண்கள் என்னிடம் கூறினார்கள். இது மகிழ்ச்சியாக இருக்கிறது. கடும் நிதி நெருக்கடிக்கு மத்தியில் ஆட்சிக்கு வந்தவுடனே 4 ஆயிரம் கொடுத்தோம். பிறகு கொரோனா நிவாரணம் நிதியும் முதல்வர் கொடுத்தார். அதை மக்களிடமே கேளுங்கள் அவர்களே கருத்து சொல்வார்கள். உரிமைத்தொகை குறித்து எதிர்க்கட்சிகள் விமர்சனம் செய்வது வழக்கம்தான். மீண்டும் தி.மு.க. ஆட்சி அமைந்தவுடன் மகளிர் உரிமைத் தொகை உயர்த்தி வழங்கப்படும் என்று இப்போது தலைவர் சொல்லியிருக்கிறார்.



யார் என்ன சொன்னாலும் நமது முதல்வர் சொன்னபடி செய்து வருகிறார். விஜய் கூட்டங்களில் உயிரிழப்பு நடப்பது குறித்த கேள்விக்கு? இதையார்கிட்ட கேட்கனும், என்னிடமா கேட்கனும். உண்மையாக இதுக்கு யார் பொறுப்பேற்று யார் பதில் சொல்லனும். விஜய்யை வந்ததற்கு பின்பு தான் திட்டங்கள் உள்ளது என கூறுவது குறித்த கேள்விக்கு? அண்ணாவே இவர (விஜய்) பார்த்து தான் தி.மு.க.வையே ஆரம்பித்தார் என்று கூட சொல்வார் என்று கூறினார்.

## அசாம் மாநிலத்தில் பிரம்மபுத்திரா ஆற்றில்
# ரூ. 3 ஆயிரம் கோடியில் கட்டப்பட்ட பாலத்தை திறந்து வைத்தார் பிரதமர்

குவாகாத்தி, பிப். 15-

அசாம் மாநிலத்தில் ரூ. 3,030 கோடியில் கட்டப்பட்ட 'குமார் பாஸ்கர் வர்மா சேது' பாலத்தை பிரதமர் நரேந்திர மோடி நேற்று (பிப். 14) திறந்துவைத்தார்.



குவாகாத்தி மற்றும் வடக்கு குவாகாத்தியைப் பிரிக்கும் பிரம்மபுத்திரா ஆற்றின் மேல் மிகப் பிரமாண்டமாக கட்டப்பட்ட இந்தப் பாலம் ஒரே நேரத்தில் 6 வழித்தடங்களில் வாகனங்கள் செல்லும் வசதியுடன் வடிவமைக்கப்பட்டுள்ளது. பாலத்தை திறந்து வைத்த பின், அதில் நடைப்பயணம் மேற்கொண்ட பிரதமர் மோடி பாலத்திலிருந்தபடியே இயற்கை அழகைக் கண்டு ரசித்தார்.

திறப்புவிழாவில் அசாம் ஆளுநர் லக்ஷ்மண் பிரசாத் ஆச்சார்யா, அம்மாநில முதல்வர் ஹிமந்த பிஸ்வ சர்மா ஆகியோரும் உடனிருந்தனர்.

## மகா சிவராத்திரியை முன்னிட்டு
# திருவண்ணாமலைக்கு சிறப்பு ரயில்கள் இயக்கம்

சென்னை, பிப். 15-

மகா சிவராத்திரியையொட்டி, விழுப்புரத்திலிருந்து திருவண்ணாமலை, வேலூர், காட்பாடிக்கு ஞாயிறு, திங்கள்கிழமைகளில் (பிப்.15,16) தெற்கு ரயில்வே சிறப்பு ரயில்களை இயக்குகிறது.

இதுகுறித்து தெற்கு ரயில்வேயின் திருச்சி கோட்ட மக்கள் தொடர்பு அலுவலர் ஆர்.வினோத் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்திருப்பது:- மகா சிவராத்திரியையொட்டி பக்தர்களின் வசதிக்காகவும், கூட்ட நெரிசலைத் தவிர்க்கும் வகையிலும் விழுப்புரத்திலிருந்து திருவண்ணாமலை, வேலூர் , காட்பாடிக்கு சிறப்பு ரயில்கள் பிப்ரவரி 15, 16 தேதிகளில் இயக்கப்படவுள்ளன. விழுப்புரம் ரயில் நிலையத்திலிருந்து பிப்ரவரி 15,16 தேதிகளில் காலை 10.10 மணிக்குப் புறப்படும் விழுப்புரம் - திருவண்ணாமலை முன்பதிவில்லா சிறப்பு ரயில் (வண்டிஎண் 06130), அதே நாளில் முற்பகல் 11.45 மணிக்கு திருவண்ணாமலை ரயில் நிலையத்தை சென்றடையும்.

எதிர்வழித்தடத்தில் திருவண்ணாமலை ரயில் நிலையத்திலிருந்து அதே நாள்களில் பிற்பகல் 12.40 மணிக்குப் புறப்படும் திருவண்ணாமலை -விழுப்புரம் முன்பதிவில்லா சிறப்பு ரயில் (வண்டி எண் 06129), பிற்பகல் 2.15 மணிக்கு விழுப்புரம் ரயில் நிலையம் வந்தடையும். இந்த ரயில்கள் வெங்கடேசபுரம், மாம்பழப்பட்டு, ஆயந்தூர், திருக்கோவிலூர், ஆதிச்சனூர், அண்டம்பள்ளம், தண்டரை ஆகிய ரயில் நிலையங்களில் நின்று செல்லும்.

வேலூருக்கு சிறப்பு ரயில்: விழுப்புரம் ரயில் நிலையத்திலிருந்து சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் (பிப்.14,15) இரவு 10.40 மணிக்கு புறப்படும் விழுப்புரம் --வேலூர் கண்டோன்மென்ட் முன்பதிவில்லா சிறப்பு ரயில் (வண்டி எண் 06167), மறுநாள் அதிகாலை 1.45 மணிக்கு வேலூர் கண்டோன்மென்ட் ரயில் நிலையம் சென்றடையும்.

எதிர்வழித்தடத்தில் வேலூர் கண்டோன்மென்ட் ரயில் நிலையத்திலிருந்து ஞாயிறு, திங்கள்கிழமைகளில் (பிப்.15,16) அதிகாலை 2.05 மணிக்குப் புறப்படும் வேலூர் கண்டோன்மென்ட் - விழுப்புரம் முன்பதிவில்லா சிறப்பு ரயில் (வண்டி எண் 06168), அதிகாலை 5 மணிக்கு விழுப்புரம் ரயில் நிலையம் வந்தடையும்.

இந்த ரயில்கள்வெங்கடேசபுரம், மாம்பழப்பட்டு, ஆயந்தூர், திருக்கோவிலூர், ஆதிச்சனூர், அண்டம்பள்ளம், தண்டரை, திருவண்ணாமலை, போளூர், ஆரணி சாலை, சேதராம்பட்டு, ஒன்னுபுரம், கண்ணமங்கலம் ரயில் நிலையங்களில் நின்று செல்லும்.

காட்பாடி சிறப்பு ரயில்: விழுப்புரம் ரயில் நிலையத்திலிருந்து ஞாயிறு, திங்கள்கிழமைகளில் (பிப்.15,16) காலை 9.15 மணிக்குப் புறப்படும் விழுப்புரம் - காட்பாடி பயணிகள் ரயில் (வண்டி எண் 06049), அதே நாள்களில் பிற்பகல் 1.05 மணிக்கு காட்பாடி ரயில் நிலையம் சென்றடையும்.

எதிர்வழித்தடத்தில் அதே நாள்களில் காட்பாடி ரயில் நிலையத்திலிருந்து பிற்பகல் 1.20 மணிக்குப் புறப்படும் காட்பாடி -விழுப்புரம் முன்பதிவில்லா பயணிகள் ரயில் (வண்டி எண் 06050), விழுப்புரம் ரயில் நிலையத்துக்கு மாலை 5.10 மணிக்கு வந்தடையும். இந்த ரயில்கள் வெங்கடேசபுரம், மாம்பழப்பட்டு, ஆயந்தூர், திருக்கோவிலூர், ஆதிச்சனூர், அண்டம்பள்ளம், தண்டரை, துரிஞ்சாபுரம், அகரம்சிப்பந்தி, போளூர், மதிமங்கலம், ஆரணிசாலை, சேதராம்பட்டு, ஒன்னுபுரம், கண்ணமங்கலம், கனியம்பாடி, பெண்ணாத்தூர் ஹால்ட், வேலூர் கண்டோன்மென்ட், வேலூர் டவுன் ஆகிய ரயில் நிலையங்களில் நின்று செல்லும் என்று தெரிவித்துள்ளார்.

### அருப்புக்கோட்டையில்

# புதிய நவீன பேருந்து நிலையத்தை அமைச்சர்கள் திறந்து வைத்தனர்



**அருப்புக்கோட்டை, பிப். 15-**

விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டையில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பில் நடைபெற்ற விழா, மாவட்ட வருவாய் அலுவலர் ஆனந்தி தலைமையில், நகராட்சி நிர்வாக இயக்குநர் மதுசூதன் ரெட்டி, சட்டமன்ற உறுப்பினர்கள் சீனிவாசன், தங்கப்பாண்டியன், அசோகன், ரகுராமன் மற்றும் சிவகாசி மாநகராட்சி மேயர் சங்கீதா இன்பம் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு மற்றும் வருவாய்த்துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் ஆகியோர் அருப்புக்கோட்டை நகராட்சி கலைஞர் நூற்றாண்டு விழா பேருந்து நிலையம், செவல் கண்மாய் புனரமைப்பு பணி மற்றும் கட்டங்குடி குடிநீர் சுத்திகரிப்பு மற்றும் நீருந்து நிலையம் உள்ளிட்ட ரூ.20.59 கோடி மதிப்பிலான முடிவுற்ற திட்டப்பணிகளை பொதுமக்களின் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தனர்.

அருப்புக்கோட்டை, விருதுநகர், இராஜபாளையம், திருவில்லிபுத்தூர் மற்றும் சாத்தூர் நகராட்சிகளில் ரூ.24.33 கோடி மதிப்பில் 25.914 கி.மீ நீளத்திலான 154 புதிய சாலை பணிகளுக்கு அடிக்கல் நாட்டி பணிகளை துவக்கி வைத்தனர்.

இந்நிகழ்ச்சியில் அமைச்சர் கே.என். நேரு பேசியதாவது:-

நகர்ப்புற வளர்ச்சிகளில் நமது முதல்வர் தனி கவனம் செலுத்தி வருகிறார்கள். அனைவருக்கும் குடிநீர் தர வேண்டும். சாலைகள் நன்றாக இருக்க வேண்டும். அனைவருக்கும் நல்ல மின்சார வசதிகளை தர வேண்டும்.இந்த பணிகளை செய்வதற்காகத்தான் முதல்வர் கடந்த 5 ஆண்டுகளில் அதிகளவு நிதிகளை தந்து திட்டங்களை செயல்படுத்தியுள்ளார். விருதுநகர் மாவட்டத்தில் சிவகாசி மாநகராட்சியில் ரூ.341.92 கோடி மதிப்பிலும், நகராட்சிகளில் அருப்புக்கோட்டை நகராட்சியில் ரூ.165.75 கோடி யிலும், இராஜபாளையம் நகராட்சியில் ரூ.134.55 கோடி யிலும், சாத்தூர் நகராட்சியில் ரூ.47. 17 கோடி யிலும், திருவில்லிபுத்தூர் நகராட்சியில் ரூ.108.83 கோடியிலும், விருதுநகர் நகராட்சியில் ரூ.109.13 கோடியிலும் என மொத்தம் மாவட்டத்தில் உள்ள 5 நகராட்சிகளுக்கு ரூ.943.63 கோடி மதிப்பிலான சாலைகள், வடிகால் வசதி, தெரு விளக்குகள், குடிநீர் வசதி, குளம் அபிவிருத்தி, பூங்கா, மின் மயானம், பேருந்து நிலையம், சந்தை, அலுவலக கட்டடங்கள், அறிவுசார் மையம், பள்ளி கட்டிடம் மற்றும் பராமரிப்பு, திடக்கழிவு மேலாண்மை, பாதாள சாக்கடை உள்ளிட்ட பல்வேறு பணிகளுக்கு மொத்தம் ரூ.1285.55 கோடி மதிப்பிலான பணிகள் நிறைவேற்றப் பட்டுள்ளன.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் ராஜபாளையம் சிவகாசி, திருத்தங்கல் நகராட்சிகளுக்கான கூட்டுக்குடிநீர்த்திட்டம் ரூ.396 கோடி மதிப்பீட்டில் நிறைவேற்றப்பட்டு 3 இலட்சம் மக்களுக்கு கூடுதலாக 43 எம்.எல்.டி. குடிநீர் வழங்கப்பட்டுள்ளது. அருப்புக்கோட்டை, சாத்தூர், மற்றும் விருதுநகர் நகராட்சிகளுக்கான கூட்டுக்குடிநீர் திட்டம், இராஜபாளையம், திருவில்லிபுத்தூர், வத்திராயிருப்பு, விருதுநகர், சிவகாசி, சாத்தூர், வெம்பக்கோட்டை, அருப்புக்கோட்டை, திருச்சுழி, காரியாபட்டி மற்றும் நரிக்குடி ஒன்றியங்களைச் சார்ந்த 1286 ஊரக குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம், காரியாபட்டி மற்றும் மல்லாங்கிணறு பேரூராட்சிகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம் ஆகிய 3 குடிநீர் திட்டங்கள் ரூ.1708 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது.

மேலும், மாவட்டத்தில் 2 கூட்டு குடிநீர் திட்டம் ரூ.60 கோடி மதிப்பில் மறுசீரமைப்பு பணிகள் நடைபெற்று வருகிறது.

இது முடிவடையும் போது 11 எம்.எல்.டி. குடிநீர் கூடுதலாக வழங்கப்படும். திருவில்லிபுத்தூர் நகராட்சி குடிநீர் மேம்பாட்டு பணி ரூ.9 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது.

அதுபோல பாதாள சாக்கடை திட்டங்களில் கடந்த ஐந்து ஆண்டுகளில் மட்டும் சுமார் ரூ.330 கோடி மதிப்பில் சாத்தூர் நகராட்சி மற்றும் இராஜபாளையம் நகராட்சிகளில் இரண்டு பாதாள சாக்கடை பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

தற்போது நடைபெற்று வரும் திட்டங்களில் ரூ.297 கோடி மதிப்பீட்டில் அருப்புக்கோட்டை நகராட்சி பாதாள சாக்கடை திட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

இத்திட்டம் முடியும் போது ஒரு லட்சம் மக்கள் பயன்பெறுவார்கள். அது எல்லாவற்றை காட்டிலும் இன்றைக்கு காலை கலைஞர் மகளிர் உரிமை பெறும் மொத்தம் 1.31 கோடி பெண்களுக்கு 3 மாத உரிமைத்தொகையுடன், கூடுதலாக ரூ2000 என மொத்தம் ரூ.5000 ஒரே தவணையில் சிறப்பு உரிமைத் தொகை வழங்கப்பட்டுள்ளது. முதல்வர் தலைமையிலான தமிழக அரசுக்கு அனைவரும் என்றும் உறுதுணையாக இருக்க வேண்டும் என பேசினார்.

பின்னர், வருவாய் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் பேசியதாவது:-

இந்த புதிய பேருந்து நிலையம் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத்திட்டம் மற்றும் நகராட்சி வருவாய் நிதி மூலம் ரூ.11.22 கோடி மதிப்பில் தரைத்தளத்தில், 51 கடைகள், ஏ.டி.எம் மையம், காத்திருப்புக் கூடம், பயணச்சீட்டு வழங்கும் அறை, பாதுகாவலர் அறை, பாலூட்டும் அறை, உணவகம், கழிப்பறை, சிசிடிவி கேமரா, உள்ளிட்ட வசதிகளுடனும், முதல் தளத்தில் 13 கடைகள், தங்கும் அறை, பொருள் வைப்பறை உள்ளிட்ட வசதிகளுடனும் 2170 சதுர மீட்டர் பரப்பளவிலான கட்டிடங்களுடன் மொத்தம் 10,757 சதுர மீட்டர் பரப்பளவில் அமைக்கப்பட்டுள்ளது. அதுபோல, வைகையிலிருந்து கிடைக்கக் கூடிய தண்ணீர் உப்புத் தன்மை இருப்பதாக தாய்மார்கள் தெரிவித்த நிலையில், அதனை நிவர்த்தி செய்வதற்கும் மூலதன நிதி 2023-24 இன் கீழ் ரூ.4.95 கோடி மதிப்பில் வைகையிலிருந்து பெறக்கூடிய தண்ணீரை சுத்திகரிப்பு செய்து வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அவ்வாறு, சுத்திகரிப்பு செய்து பெறப்படும் தண்ணீரானது தாமிரபரணி தண்ணீர் போல் சுவையாக இருக்கக் கூடிய அளவில் கிடைப்பதற்கு இன்றைய தினம் வழிவகை செய்துள்ளோம்.

அதுபோல, செவல் கண்மாயில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் ரூ.4.45 கோடி மதிப்பில் நிரம்பியிருந்த ஆகாயத்தாமரையினை நீக்கி, நடைபயணம் மேற்கொள்வோருக்கு எளிதாகவும், சுற்றுலாத் தளம் போலவும் ஏற்படுத்திக் கொடுத்துள்ளோம்.

அருப்புக்கோட்டை தொகுதிக்கு ஒரே ஒரு குடிநீர் ஆதாரம் தான் இருந்தது. தற்போது, முதல்வர் மூலம் இன்றைய தினம் மூன்றாவது குடிநீர் திட்டம் வழங்கவிருக்கிறோம். அருப்புக்கோட்டை பாதாள சாக்கடைத் திட்டப்பணிகள் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இத்தகைய திட்டங்களை நமக்கு அளித்துள்ள முதலமைச்சருக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன் என்றார். இந்நிகழ்ச்சியில், நகராட்சி நிர்வாக திருநெல்வேலி மண்டல இயக்குநர் விஜயலெட்சுமி, அருப்புக்கோட்டை வருவாய் கோட்டாட்சியர் மாரிமுத்து, அருப்புக்கோட்டை நகர்மன்றத் தலைவர் சுந்தரலட்சுமி சிவப்பிரகாசம், மற்றும் நகர மன்ற தலைவர்கள் மாதவன். குருசாமி, பவித்ரா ஷ்யாம் ரவிக்கண்ணன், முன்னாள் அருப்புக்கோட்டை நகர மன்ற தலைவர் சிவப்பிரகாசம், துணைத் தலைவர் பழனிச்சாமி, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் பாபுஜி, அருப்புக்கோட்டை ஒன்றிய செயலாளர்கள் பாலகணேஷ் பொன்ராஜ், மற்றும் நகர மன்ற உறுப்பினர்கள் உட்பட அரசு அலுவலர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# நத்தம் பகுதி சிவாலயங்களில் சனி மஹா பிரதோஷ விழா



**நத்தம், பிப். 15-**

திண்டுக்கல் மாவட்டம், நத்தம் கோவில்பட்டி கைலாசநாதர் கோவிலில் சனி மஹா பிரதோஷ விழா நடந்தது.இதையொட்டி நந்தி சிலைக்கு பால்,பழம்,பன்னீர், விபூதி,சந்தனம், இளநீர்,தீர்த்தம் உள்ளிட்ட 16 வகையான அபிஷேகங்களும், தீபாராதனைகளும் நடந்தது.தொடர்ந்து மேளதாளம் முழங்க சுவாமி புறப்பாடும் நடந்தது.பின்னர் மூலவர் செண்பகவல்லி சமேத கைலாசநாதருக்கு சிறப்பு அபிஷேகமும், அலங்காரமும், தீபாராதனைகளும் நடந்தது. இதில் சுற்றுவட்டாரங்களிலிருந்து ஏராளமான பக்தர்கள் கோவிலுக்கு வந்திருந்து சுவாமி தரிசனம் செய்தனர். அவர்களுக்கு பிரசாதம் வழங்கப்பட்டது. இதைப்போலவே நத்தம் அருகே குட்டூரில் உள்ள அண்ணாமலையார் கோவிலிலும் சனி மஹா பிரதோஷ விழா நடந்தது.இதில் மூலவருக்கும், நந்திக்கும் சிறப்பு அலங்காரமும், அபிஷேகமும், தீபாராதனைகளும் நடந்தது.இங்கும் பக்தர்கள் கலந்து கொண்டு தரிசனம் செய்தனர். தொடர்ந்து அவர்களுக்கு பிரசாதம் வழங்கப்பட்டது.

# அருப்புக்கோட்டை எஸ்.பி.கே. ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் முப்பெரும் விழா



**அருப்புக்கோட்டை, பிப். 15-**

அருப்புக்கோட்டை எஸ்.பி.கே. ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் விளையாட்டு விழா, பள்ளி ஆண்டு விழா, புதிய தோரண நுழைவு வாயில் திறப்பு விழா ஆகிய முப்பெரும் விழா பள்ளி வளாகத்தில் நடைபெற்றது.

விழாவிற்கு எஸ்.பி.கே. ஆண்கள் மேல்நிலைப்பள்ளி செயலர் காசிமுருகன் தலைமை வகித்து சிறப்புரையாற்றினார். பள்ளி தலைவர் ஜெயகணேஷ் வரவேற்று பேசினார். உறவின்முறை அம்பலம் பிரேம்குமார், துணை தலைவர் சுரேஷ்குமார், கோவில் டிரஸ்டி கணேசன், கல்லூரி செயலர் ஆசைத்தம்பி, முன்னாள் டி.எம்.பி. வங்கி மேனேஜர் சௌந்தரபாண்டியன் ஆகியோர் முன்னிலை வைத்தனர். விழாவில் தேசியக்கொடியை முன்னாள் மாணவர் தங்க குமார், ஒலிம்பிக் கொடியை முன்னாள் மாணவர் வெங்கடேஷ், பள்ளிக் கொடியை முன்னாள் மாணவர் சிவகுமார் ஏற்றினார்கள். பள்ளியில் புதிய தோரண நுழைவு வாயிலை திறந்து வைத்தும், விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகளை அருப்புக்கோட்டை நாடார்கள் உறவின் முறை தலைவர் சுதாகர் வழங்கி சிறப்புரையாற்றினார்.

நிகழ்ச்சியில் அருப்புக்கோட்டை நாடார்கள் உறவின் முறை செயலர் சரவணன், பொருளாளர் கனகராஜ், உதவிச் செயலர் பாலசுப்பிரமணியம் மற்றும் பெண்கள் பள்ளி செயலர் ராம்குமார், எஸ் பி கே துவக்கபள்ளி செயலாளர் சௌந்தரபாண்டியன், கல்லூரி செயலர் ஆசைதம்பி, மற்றும் பள்ளி நிர்வாகிகள், உறவின்முறை நிர்வாகிகள், எஸ்.பி.கே. கல்விக் குழும நிர்வாகிகள், ஆசிரியர்கள், மாணவர்கள் பெற்றோர்கள் கலந்து கொண்டனர்.

### தங்கக்கட்டியே கொடுத்தாலும் மீண்டும் தி.மு.க.வை தமிழக மக்கள் ஆட்சியில் அமர வைக்க மாட்டார்கள்:

# எடப்பாடியாரின் தேர்தல் அறிக்கையால் தி.மு.க. கூட்டணி ஆட்டம் கண்டுள்ளது

### முன்னாள் அமைச்சர் செல்லூர் கே.ராஜூ பேட்டி



**மதுரை, பிப். 15-**

தங்க கட்டியே கொடுத்தாலும் மீண்டும் தி.மு.க.வை தமிழக மக்கள் ஆட்சியில் அமர வைக்க மாட்டார்கள் என்றும், எடப்பாடியாரின் தேர்தல் அறிக்கையால் தி.மு.க. கூட்டணி ஆட்டம் கண்டுள்ளது என்றும் அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் செல்லூர் கே.ராஜூ தெரிவித்துள்ளார்.

மதுரை மேற்கு சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட கொடிமங்கலம் புதூரில் கட்டப்பட்ட புதிய கிராம சாவடியை முன்னாள் அமைச்சர் செல்லூர் கே.ராஜூ எம்.எல்.ஏ. திறந்து வைத்து குத்து விளக்கேற்றி பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கினார். இதில் ஜெயந்தி ராஜூ மற்றும் வில்லாபுரம் ராஜா, எம்.எஸ்.பாண்டியன், ஆர்.அண்ணாத்துரை, பா.குமார், பேராசிரியர் ஜெயபால், கே.ஜெயவேல், நீதிகாந்த், வி.பி.ஆர். செல்வகுமார், அஜய், மார்க்கெட் மார்நாடு உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

பின்னர் மதுரை மாநகர மாவட்ட அ.தி.மு.க.செயலாளரும், முன்னாள் அமைச்சருமான செல்லூர் கே.ராஜூ எம்.எல்.ஏ. நிருபர்களிடம் கூறியதாவது-

புதூர் பகுதியில் 80 வீடுகள் தான் இருக்கு, ஆனால் சாலை, குடிநீர் ஆகிய நீண்ட நாள் கோரிக்கைகளை நிறைவேற்றியுள்ளோம். கிராம பகுதி வளர்ச்சிக்காக தொகுதி மேம்பாடு நிதி ஒதுக்கியுள்ளோம். இங்கு ரேசன்கடை இல்லை, நடமாடும் ரேசன்கடையை முடக்கிவிட்டது. இந்த அரசு அதனால் 2 மாதத்தில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு நகரும் ரேசன்கடை திட்டம் வரும். மகிளர் உரிமைத்தொகை குறித்த கேள்விக்கு?,5 ஆயிரம் மகளிர் உரிமைத்தொகை வழங்கியது. தி.மு.க.வுக்குதான் இன்ப அதிர்ச்சி மக்களுக்கு அல்ல. இது வழக்கமான ஒன்றுதான்

ஆனால் அரசு பணியாளர்கள் ரொம்ப வேதனையில் உள்ளனர்.தூய்மை பணியாளருக்கு, பகுதி நேர ஆசிரியர்கள், சம வேலைக்கு சம ஊதியம் ,செவிலியர் பணீ நிரந்தம் ஆகியோருக்கு காசு இல்ல , கல்விகடன் ரத்துக்கு காசு இல்ல என சொன்னார் முதலமைச்சர் இதுக்கு எப்படி காசு இருக்கிறது. தேர்தல் பயத்தாலும், அ.தி.மு.க.வின் 10 தேர்தல் அறிக்கையால் மக்களிடம் வரவேற்பு இருப்பதை பார்த்து முதலமைச்சருக்கு தூக்கம் இல்லாமல் போய்விட்டது. எடப்பாடியாரின் 10 தேர்தல் அறிக்கையால் தி.மு.க. கூட்டணி ஆட்டம் கண்டுள்ளது. தி.மு.க. தங்க கட்டி கொடுத்தாலும் மக்கள் ஆதரவு தர மாட்டார்கள். அவ்வளவு கொதிப்பில் உள்ளனர்.

மகளிர் உரிமைத்தொகை 5 ஆயிரம் குறித்து முதலமைச்சருக்கு யாரோ தவறாக சொல்லிகொடுத்திருக்கிறார்கள்.ஆந்திராவில் சந்திரபாபு நாயுடு 7 ஆயிரம் கொடுத்த போது தோற்றுபோனார். ஜெகன்மோகன் ரெட்டி 5 ஆயிரம் அறிவித்தார். ஆனால் எதிர்கட்சியாக கூட வில்லை.திடிரென இந்த ஆண்டு மட்டும் கோடை கால சிறப்பு நிதி என சொல்வது சிரிப்பு சிரிப்பா இருக்கு. மாணவர்களுக்கு தான் கோடைகால சிறப்பு பயிற்சி தருவாங்க, முதலமைச்சர் யாரோ சொல்லியதை கேட்டு செய்றாரு அது காமெடியாக போய்விட்டது. ஏன் மற்ற ஆண்டுகளில் கோடை இல்லையா வெயில் இல்லையா மக்கள் கஷ்டபடவில்லையா? ஏன் மற்ற ஆண்டுகளில் மக்களுக்கு பொங்கல் பணம்தர வில்லை .தங்க கட்டியாக கொடுத்தாலும் மீண்டும் தி.மு.கவை ஆட்சியில் மக்கள் அமரவிடமாட்டர்கள் மறந்தும் கூட அமர விடமாட்டார்கள். கோடைகால தொகை என்பது எது மாதிரியும் இல்லாம இது புதுமாதிரியாக இருக்கு.

எங்களால் தான் 5 ஆயிரம் கொடுத்துள்ளார்கள் என விஜய் சொல்லியுள்ளார் என்ற கேள்விக்கு?, விஜய பத்தி பேசுனா அத தான் ப்ரேக்கிங் போடுவங்க அதனால் நாங்க நேருக்கு நேரா தி.மு.க.வை பேசிக்கிறோம்.அ.தி.மு.க.வின் தேர்தல் அறிக்கை மூலமாக தி.மு.க.வின் திட்டத்தை அனைத்தையும் எடப்பாடியார் காலி பண்ணிட்டாரு. இது மக்கள் காசு.தி.மு.க. அதை தான் கொடுக்குறாங்க அவங்க கொள்ளை அடித்து வைத்த காசை கொடுக்கலாமே?. இவ்வாறு அவர் கூறினார்.

### எடப்பாடியாரின் ரூ.2,000 கொடுப்போம் என்ற

# அ.இ.அ.தி.மு.க.வின் தேர்தல் வாக்குறுதியை பின்பற்றும் வகையில்தான் தி.மு.க. உள்ளது

### மதுரையில் வி.வி.ராஜன்செல்லப்பா எம்.எல்.ஏ. பேச்சு



**மதுரை, பிப் 15-**

எடப்பாடியார் 2000 கொடுப்போம் என வாக்குறுதி கொடுத்தவுடன் உடனே அறிவித்து விட்டீர்கள் அ.தி.மு.க.வை பின்பற்றும் வகையில் தான் தி.மு.க. உள்ளது என்று மதுரையில் வி.வி.ராஜன்செல்லப்பா எம்.எல்.ஏ. தெரிவித்தார்.

மதுரை திருப்பரங்குன்றம் 16ஆம் கால் மண்டபம் அருகே மதுரை புறநகர் கிழக்கு மாவட்டம் சார்பில் திருப்பரங்குன்றம் பகுதி பொது மக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா அமைப்பு செயலாளரும், திருப்பரங்குன்ற சட்டமன்ற உறுப்பினருமான வி.வி.ராஜன் செல்லப்பா தலைமையில் நடைபெற்றது. இதில் மாவட்ட எம்.ஜி.ஆர். இளைஞர் அணி செயலாளர் வழக்கறிஞர் ரமேஷ், முருகன் ஒன்றிய செயலாளர்கள் நிலையூர் முருகன், செல்வகுமார், ஜெயச்சந்திரன், பார்த்திபன் மற்றும் கழக நிர்வாகிகள் ஏராளமான கலந்து கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில் அ.தி.மு.க.அமைப்புச் செயலாளரும், சட்டமன்ற உறுப்பினருமான வி.வி.ராஜன் செல்லப்பா பேசியதாவது-

தென் மாவட்டங்களிலே திருப்பரங்குன்றம் மேலூரில் நீங்கள் அதிக வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற செய்து எங்களை சட்டமன்றத்திற்கு அனுப்பினீர்கள். இந்த பகுதியில் பாதாள சாக்கடை வசதி தொடர்ந்து ஏற்பட காரணமாக இருந்தது அ.தி.மு.க. அரசு. ஒரு பாலத்தை கட்டி முடிக்க நான்கு வருடம் ஆகி உள்ளது. இன்னும் கோரிப்பாளையம் பாலம் கட்டி முடிக்கவில்லை. எல்லா திட்டங்களையும் தவறு தவறாக யோசித்து நிறைவேற்ற வேண்டியது. இன்றைக்கு ஏமாற்று வேலையை செய்கிறார்கள் ஐந்து வருடமாக உரிமைத்தொகை கொடுக்கவில்லை எடப்பாடியார் 2000 கொடுப்போம் என வாக்குறுதி கொடுத்தவுடன் உடனே அறிவித்து விட்டீர்கள்.அ.தி.மு.க.வை பின்பற்றும் வகையில் தான் தி.மு.க. உள்ளது.

திருப்பரங்குன்றம் தொகுதி முன்னணி தொகுதியாக உள்ளது. தி.மு.க. தொடர்ந்து ஐந்து வருடத்தில் ஆட்சியில் இருந்ததில்லை கருணாநிதி காலம் முதல், திருப்பரங்குன்றம் காசி விஸ்வநாதர் கோவில் ரோப் கார வாசதிக்காக இதுவரை 20 முறை பேசியுள்ளேன். தமிழகம் முழுவதும் எங்கு பார்த்தாலும் போராட்டம் அ.தி.மு.க. ஆட்சியில் கொடுத்த உதவிகளை நிறுத்தி விட்டீர்கள். அதனை திருப்பிக் கொடுங்கள் என்று போராட்டத்தில் ஈடுபடுகிறார்கள்.

இன்றைக்கு காவல்துறை அடிமையாக வேலை பார்க்கிறார்கள். பொய் வழக்கு போடுகிறார்கள். கரூரில் முன்னாள் அமைச்சர் விஜயபாஸ்கர் மணல் திருட்டை தடுக்க போகிறார் தடுத்தவர் மீது வழக்கு பதிவு போடுகிறார்கள். பொய் வழக்கு போடுவதில் மோசமான அரசு தி.மு.க. அரசு இவர்களை வெளியேற்றுவது நம்முடைய கடமை. அரசு அதிகாரிகள் ஆசிரியர்கள் முற்றிலும் மாறிவிட்டார்கள் போன முறை ஆசிரியர்கள் தி.மு.க.வுக்கு ஓட்டு கேட்டார்கள்.

கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்ற வில்லை.அதனால் தி.மு.க. எப்போது வீட்டுக்கு போவோம் என்று எண்ணுகிறார்கள். நம்முடைய ஆட்சியில் உங்களுடைய அத்தனை உறுதிமொழிகளையும் நிறைவேற்றுவோம். இவ்வாறு அவர் பேசினார்.

பின்னர் எடப்பாடியார் அறிவித்த வாக்குறுதிகளை பொதுக்கூட்டத்தில் பெண்கள் பொது மக்களுக்கு எடுத்துக் கூறினார்.

# ராமநாதபுரத்தில் தி.மு.க.வை கண்டித்து அ.இ.அ.தி.மு.க. சார்பில் ஆர்ப்பாட்டம்



**ராமநாதபுரம், பிப். 15-**

ராமநாதபுரம் அரசு பேருந்து பணிமனை முன்பு கிராம மக்களின் 125 நாள் வேலை உறுதி திட்டத்தை சீர்குலைக்க முயலும் தி.மு.க. அரசை கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி கே.பழனிசாமி ஆணைக்கிணங்க ராமநாதபுரம் மாவட்ட செயலாளர் எம்.ஏ.முனியசாமி ஆலோசனையின் படி ராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள அனைத்து ஊராட்சி ஒன்றிய அலுவலகங்கள் முன்பும் கிராம மக்களின் 125 நாள் வேலை உறுதித் திட்டத்தை சீர்குலைக்க முயலும் தி.மு.க. அரசை கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதன்படி ராமநாதபுரம் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் முன்பு நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு அ.தி.மு.க. எம்.ஜி.ஆர் மன்ற துணைச் செயலாளரும், மாவட்ட அவைத்தலைவருமான எம்.சாமிநாதன் இளைஞர் மற்றும் இளம் பெண்கள் பாசறை இணைச் செயலாளர் கே.பி.எம் நாகேந்திர சேதுபதி ஆகியோர் தலைமை வகித்தனர். மாவட்ட எம்ஜிஆர் மன்ற செயலாளர் வேலுச்சாமி, மாவட்ட தகவல் தொழில் நுட்ப பிரிவு செயலாளர் நாகராஜன், மாவட்ட கலைப்பிரிவு செயலாளர் கவிஞர் கே.ராமநாதன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் தேசிய ஜனநாயக கூட்டணி கட்சிகளை சேர்ந்த ஆண்கள்,பெண்கள் மற்றும் குழந்தைகள் என 500க்கும் மேற்பட்ட பக்கேற்று தி.மு.க. அரசிற்கு எதிராக கண்டன கோஷங்களை எழுப்பினர்.

இந்த ஆர்ப்பாட்டத்திற்கான ஏற்பாடுகளை அ.தி.மு.க. ராமநாதபுரம் நகர செயலாளர் பொறியாளர் என்.ஆர்.பால் பாண்டியன், ராமநாதபுரம் தெற்கு ஒன்றிய செயலாளர் எம்.அசோக்குமார், வடக்கு ஒன்றிய செயலாளர் பா.கோட்டைச்சாமி ஆகியோர் செய்திருந்தனர். முன்னதாக வழக்கறிஞர் முத்து முருகன் வரவேற்றார். ஆர்ப்பாட்டத்தில் ஏராளமானோர் கலந்து கொண்டு தி.மு.க. அரசிற்கு எதிரான கோஷங்களை எழுப்பினர்.

### நத்தம் அருகே

# வீட்டில் பதுக்கி வைக்கப்பட்ட 5 கிலோ புகையிலை பறிமுதல்

**நத்தம், பிப். 15-**

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் மற்றும் சுற்றுவட்டார கிராம பகுதிகளில் தடை செய்யப்பட்ட புகையிலை பொருட்கள் விற்பனை செய்யப்படுவதாக திண்டுக்கல் மாவட்ட உணவு பாதுகாப்பு நியமன அலுவலருக்கு புகார்கள் சென்றது.இதையடுத்து அவரது உத்தரவின் பேரில் நத்தம் வட்டார உணவு பாதுகாப்பு அலுவலர்கள் ஜாபர் சாதிக், செல்வம் உள்ளிட்ட உணவு பாதுகாப்பு துறையினர் நத்தம் சுற்று வட்டார கிராம பகுதிகளில் சோதனையில் ஈடுபட்டனர்.

அப்போது நத்தம் அருகே அய்யனார்புரம் பகுதியில் அழகர்சாமி(40) என்பவரது வீட்டில் சோதனை செய்த போது அங்கு விற்பனைக்காக புகையிலை பொருட்கள் வைத்திருந்தது தெரியவந்தது. இதையடுத்து வீட்டில் இருந்து 5 புகையிலை பொருட்களை உணவு பாதுகாப்பு அதிகாரிகள் பறிமுதல் செய்தனர். தொடர்ந்து அவருக்கு ரூ.25 ஆயிரம் அபாராதம் விதிக்கப்பட்டது



தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் திருப்பத்தூரில் 15 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அனைத்து வசதிகளுடன் அமைக்கப்பட்டு வரும் திறந்தவெளி மற்றும் உள்விளையாட்டரங்கம் உள்ளடக்கிய மாவட்ட விளையாட்டு வளாகத்தின் கட்டுமானப் பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின் அமைச்சர்கள் எ.வ.வேலு, ஆர். காந்தி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமைச்செயலகத்தில், தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையின் பேராசிரியர் கா. ராஜன் மற்றும் முனைவர் ரா.சிவானந்தம் ஆகியோர் எழுதிய தமிழ்நாட்டின் பாறை ஓவியங்கள் என்ற நூலினை வெளியிட்டார். இந்த நிகழ்ச்சியில், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், தொல்லியல் துறை அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.




தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமைச் செயலகத்தில், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை சார்பில் அருங்காட்சியகத் துறையால் தஞ்சாவூர் - தமிழ்ப் பல்கலைக்கழக வளாகத்தில் 56 கோடியே 41 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படவுள்ள மாபெரும் சோழர் அருங்காட்சியகத்திற்கு அடிக்கல் நாட்டினார். இந்த நிகழ்ச்சியில் அமைச்சர்கள் மு.பெ.சாமிநாதன், டி.ஆர்.பி. ராஜா ஆகியோர் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமைச் செயலகத்தில், இந்து சமய அறநிலையத்துறை மூலம் செயல்படுத்தப்படும் ஒருகால பூசைத் திட்டத்தில் நிதி வசதியற்ற 1,000 திருக்கோயில்களை இணைத்து விரிவாக்கம் செய்திட அரசு நிதி 25 கோடி ரூபாய்க்கான காசோலையினை தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தில் வைப்பு நிதியாக முதலீடு செய்யும் விதமாக அதன் மேலாண்மை இயக்குநர் பூஜா குல்கர்னி வழங்கினார். இந்நிகழ்ச்சியில், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர் பி.கே.சேகர்பாபு, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




மறைந்த முன்னாள் முதல்வர் எம்.ஜி.ஆரின் 109-வது பிறந்த நாளை முன்னிட்டு மதுரை மாநகர் மாவட்ட மத்திய 6-ம் பகுதி அ.தி.மு.க. சார்பில் பகுதி செயலாளர் எம்.ஜி.ராமச்சந்திரன் தலைமையில் ஜான்சிராணி பூங்கா பகுதியில் பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கி அ.தி.மு.க. தேர்தல் வாக்குறுதி துண்டு பிரசுரங்களை முன்னாள் அமைச்சர் செல்லூர் கே. ராஜூ எம்.எல்.ஏ. வழங்கினார். இதில் நிர்வாகிகள் வில்லாபுரம் ராஜா, ஆர்.அண்ணாதுரை, பா.குமார், சக்திமோகன், வி.பிஆர்.செல்வகுமார், சுகந்திஅசோக், கே.வி.கே.கண்ணன், ஜோசப்தனிஸ்லாஸ், மார்க்கெட் மார்நாடு, மற்றும் பி.குமரவேல், பி.ஜெயராமன், பி.பி.ஜெயக்குமார், யமுனா, சவுந்தரராஜன், மீனவரணி செல்வபாண்டி, ஜெயபாரதி, ஷோபியாபிச்சைமணி, எம்.முருகேசன், ஐ.டி.விங்க் கார்த்திக், அருண் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

# எச்.ராஜாவை நேரில் சந்தித்து நலம் விசாரித்த முதல்வர் மு.க.ஸ்டாலின்

**சென்னை, பிப். 15-**

முதல்வர் மு.க.ஸ்டாலின் எச்.ராஜாவை நேரில் சந்தித்து நலம் விசாரித்தார்.

சென்னையில் சமீபத்தில் நடைபெற்ற தனியார் செய்தி நிறுவனத்தின் நிகழ்ச்சியில் பங்கேற்ற பா.ஜ.க. தலைவர் எச்.ராஜாவுக்கு திடீரென உடல்நலக்குறைவு ஏற்பட்டது. மேடையிலேயே அவர் மயங்கியதால் பரபரப்பு ஏற்பட்டது. இதையடுத்து அவரை அங்கிருந்தவர்கள் பாலாஜி மருத்துவமனையில் அனுமதித்தனர். அங்கிருந்து மேல் சிகிச்சைக்காக கிரீம்ஸ் சாலையில் உள்ள அப்பல்லோ மருத்துவமனையில் எச்.ராஜா அனுமதிக்கப்பட்டார்.



அங்கு எச்.ராஜாவுக்கு மருத்துவர்கள் சிகிச்சை அளித்து வருகின்றனர். இந்நிலையில் அப்பல்லோ மருத்துவமனை சார்பில் எச்.ராஜா உடல்நிலை குறித்து அறிக்கை வெளியிடப்பட்டது. அதில், எச்.ராஜாவுக்கு பக்கவாதம் ஏற்பட்டுள்ளதாக மருத்துவமனை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொடர்ந்து, அப்போலோ மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் எச்.ராஜாவை சந்தித்து அரசியல் தலைவர்கள் நேரில் சந்தித்து நலம் விசாரித்து வருகின்றனர். அந்த வகையில், மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் எச்.ராஜாவை முதல்வர் மு.க.ஸ்டாலின் நேரில் சந்தித்து நலம் விசாரித்தார்.

தொடர்ந்து, நேரில் வந்து நலம் விசாரித்த முதல்வருக்கு நன்றி தெரிவித்து எச்.ராஜா தனது எக்ஸ் தள பக்கத்தில் நன்றி தெரிவித்து பதிவு வெளியிட்டுள்ளார்.

அந்த பதிவில் அவர் கூறியிருப்பதாவது:- தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களும், முன்னாள் மத்திய அமைச்சர் டி.ஆர்.பாலு அவர்களும் சென்னை அப்பல்லோ மருத்துவமனையில் சிகிச்சை பெற்று என்னை நேரில் சந்தித்து உடல்நலம் குறித்து விசாரித்தனர். தான் விரைவில் பூரண குணமடைந்து நலமோடு மக்கள் பணியாற்ற தங்களுடைய வாழ்த்துக்களை தெரிவித்தனர். தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கும், முன்னாள் மத்திய அமைச்சர் டி.ஆர். பாலு அவர்களுக்கும் எங்களது மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறோம். இவ்வாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.

# மகளிர் உரிமை தொகையை முன்னரே வழங்கியது ஏன்?

## அமைச்சர் சிவசங்கர் விளக்கம்

**சென்னை, பிப். 15-**

கடந்த 28 மாதங்களாக வழங்கப்பட்ட உரிமைத் தொகை, இப்பொழுது தொடர்ந்து வழங்கப்பட வேண்டும் என்ற நோக்கில் முன்கூட்டியே வழங்கப்பட்டுள்ளது என்று அமைச்சர் சிவசங்கர் தெரிவித்துள்ளார்.

அரியலூர் மாவட்டம், கீழப்பழூரில் அமைச்சர் சிவசங்கர் நிருபர்களிடம் கூறியதாவது:- தி.மு.க., த.வெ.க.வை போட்டியாக கருதுகிறது என்ற விஜய் தெரிவித்துள்ளார். யாரையும் நாங்கள் போட்டியாக கருதவில்லை. அனைவரையும் நண்பர்களாக தான் கருதுகிறோம். எல்லோரையும் தாண்டி தான் திராவிட மாடல் அரசின் செயல்பாடுகள், மக்களிடம் சென்று சேர்ந்துள்ளது. மக்கள் மனதில் இடம் பிடித்துள்ளது. மக்களுக்கான முதல்வராக, மக்களுக்கான தலைவராக ஸ்டாலின் திகழ்கிறார்.

யார் எதைச் சொன்னாலும், மக்கள் தமிழ்நாடு முதல்வர் பின்னால் அணி திரண்டு நிற்கின்றனர். மகளிர் உரிமைத்தொகை ரூ.5,000 வழங்கியிருப்பது குறித்து முதல்வர் ஏற்கனவே தெளிவாக சொல்லியுள்ளார். சில குறுக்கு மதியாளர்கள் இந்த திட்டத்தை நீதிமன்றம் சென்று தடை வாங்கும் முயற்சியில் ஈடுபட்டதால், அதற்கு இடம் கொடுக்காமல் தேர்தலுக்கு முன்பாகவே உரிமைத் தொகை வழங்கப்பட்டு உள்ளது.

கடந்த 28 மாதங்களாக வழங்கப்பட்ட உரிமைத் தொகை, இப்பொழுது தொடர்ந்து வழங்கப்பட வேண்டும் என்ற நோக்கில் முன்கூட்டியே வழங்கப்பட்டுள்ளது. நீங்கள் கேள்வி கேட்க வேண்டுமெனில் பா.ஜ.க., பீகாரில் என்ன செய்தது என கேள்வி கேட்க வேண்டும். பீகாரில் மகளிர் உரிமைத்தொகை திட்டத்தை தொடங்காமலேயே, தேர்தலின் பொழுது திடீரென 10 மாத தொகையை சேர்த்து வழங்கினார்கள். அதையும் பிரதமரே நேரடியாக சென்று வழங்கினார்.

தமிழ்நாட்டில் 3 மாதத்துக்கான தொகை முடக்கப்படலாம் என்ற தகவலின் அடிப்படையில், முன்கூட்டியே அவர்களுக்கு உரிமைத் துறை வழங்கப்பட்டு உள்ளது. மோடியை தன் மீது சவாரி செய்ய அ.தி.மு.க. அனுமதி அளித்ததன் காரணமாகவே நீட், உதய் மின் திட்டம் உள்ளிட்ட திட்டங்கள் தமிழகத்துக்குள் திணிக்கப்பட்டது.

தமிழ்நாட்டில் அ.தி.மு.க. அரசு அமைந்ததும், பிரதமர் மோடி ஆட்சி செய்வார் என்று கூறியதன் மூலம் மத்திய அரசிடம் தமிழ் நாட்டின் கதவை திறந்து விட்டு, அதிகாரத்தை அடகு வைத்ததை முன்னாள் அமைச்சர் திண்டுக்கல் சீனிவாசனே ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்துள்ளார். இவ்வாறு அவர் கூறினார்.

# அவசர கால தரையிறங்கும்... (1-ம் பக்க தொடர்ச்சி)

திப்ருகர் மாவட்டத்தில் உள்ள மோரன் புறவழிச் சாலையில் ரூ.100 கோடி மதிப்பிலான 4.2 கி.மீ கொண்ட அவசரக்கால தரையிறங்கும் சாலையைப் பிரதமர் தொடங்கி வைத்தார். அவசரக் காலத்தில் விமானங்கள், ஹெலிகாப்டர் உள்ளிட்டவை தரையிறங்கும் வகையில் சாலை அமைக்கப்பட்டுள்ளது. வடகிழக்குப் பிராந்தியத்தில் முதலாவது அவசர கால தரையிறங்கும் சாலை இதுவாகும்.

நெடுஞ்சாலையின் குறிப்பிட்ட பகுதியில் அமைக்கப்பட்டுள்ள இந்தப் பிரிவு இக்கட்டான சூழலின்போது போர் வீரர்கள் செல்வதற்கும், விமானங்கள் மற்றும் ஹெலிகாப்டர்களை இயக்குவதற்கும் மாற்று ஓடுபாதையாக செயல்படும். தொலைதூரப் பகுதிகளில் மனிதநேய உதவி மற்றும் பேரிடர் நிவாரண நடவடிக்கைகளின் போது இது முக்கிய பங்காற்றும்.

போர் விமானங்கள், போக்குவரத்து விமானங்கள் மற்றும் ஹெலிகாப்டர்கள் இடம்பெறும் இந்திய விமானப்படை நடத்தும் 40 நிமிட வான்வழி காட்சியையும் பிரதமர் மோடி கண்டு களித்தார். அதன்பின்னர், அவர் சி-130 விமானத்தில் அவர் குவாஹாட்டிக்கு புறப்பட்டுச் செல்கிறார்.

# 200 தொகுதிகளில் தி.மு.க.... (1-ம் பக்க தொடர்ச்சி)

முறையும் தி.மு.க. ஆட்சி அமைக்கும். 200 தொகுதிகளில் தி.மு.க. வெல்வது நிச்சயம். 2026 தேர்தல் இனி பல ஆண்டுகளுக்கு அரசியல் ஆய்வாளர்கள் பேசும் வரலாற்று வெற்றியாக இருக்க வேண்டும். இதுவரை இல்லாத அளவுக்கு ஒவ்வொரு தொகுதியும் தி.மு.க.வின் கோட்டை என்று நிரூபித்து காட்ட வேண்டும். உங்களைப் போன்ற நிர்வாகிகள், தொண்டர்கள் இருக்கும்போது வெற்றியை தவிர வேறு எதுவும் யோசிக்க தேவையில்லை. இதை ஆணவத்துடன் சொலவில்லை. அடக்கத்துடன், மிகுந்த பணிவுடன் சொல்கிறேன்.

**ஒருபோதும் தலைகுனியாது....**

பா.ஜ.க.வின் டப்பா எஞ்சின் முன்பு திராவிட மாடல் சூப்பர் பாஸ்ட் எஞ்சின் ஒருபோதும் தலைகுனியாது. நாம் போராடுவது தமிழ்நாட்டின் வெற்றிக்காகத்தான். மக்களுக்கு சர்ப்ரைஸ் கொடுத்து துரோகிகளுக்கு ஷாக் கொடுத்துள்ளோம். இதுதான் என ஸ்டைல். தமிழ்நாடு என்ற பெயரையே மாற்ற வேண்டும் என நினைப்பவர்கள் வந்தால் சதித்திட்டம் எப்படி இருக்கும். எல்லோரும் ஒரிஜினல் ஓனரான பா.ஜ.க.விடம் சரண்டர் ஆகின்றனர். பா.ஜ.க.வின் கிளை அமைப்பாக அதி.மு.க. மாறிவிட்டது. கூட்டணி தர்மத்திற்காக தமிழ்நாட்டு உரிமைகளை அடகு வைத்ததாக கூச்சமின்றி சொல்கிறார் எடப்பாடி பழனிசாமி.

**பா.ஜ.க.வை தடுத்து நிறுத்த...**

மத்திய பட்ஜெட் குறித்து தட்டிக்கேட்கும் துணிச்சல், தைரியம் எடப்பாடி பழனிசாமிக்கு இருக்கிறதா? கொத்தடிமைகள் மூலம் புறவாசல் வழி தமிழகத்திற்குள் வர நினைக்கும் பா.ஜ.க.வை தடுத்து நிறுத்த வேண்டும். தமிழ்நாட்டு அணியா? டெல்லி அணியா? எனும் போரில் விருப்பு வெறுபின்றி கூட்டணியை ஆதரிக்க வேண்டும். நம் இலக்கு 200 தொகுதிகள், அதற்கு தேவை ஓய்வில்லாத உழைப்பு. வேட்பாளர்களை வெற்றிபெற வைக்க வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

# முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் தி.மு.க.வில் இணைந்தார் நிலோபர் கபில்

**திருப்பத்தூர், பிப். 15-**

திருப்பத்தூர் மாநாட்டில் முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் நிலோஃபர் கபில் தி.மு.க.வில் இணைந்தார்.

அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் அன்வர் ராஜாவை தொடர்ந்து நிலோஃபர் கபிலும் தி.மு.க.வில் இணைந்துள்ளார். முன்னதாக அ.தி.மு.க.வில் இருந்து விலகுவதாக எடப்பாடி பழனிசாமிக்கு நிலோபர் கபில் கடிதம் எழுதியிருந்தார். கடந்த அ.தி.மு.க. ஆட்சிக்காலத்தில் தொழிலாளர் நலத்துறை அமைச்சராக நிலோபர் கபில் இருந்தார். இவர் திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி சட்டமன்ற தொகுதி உறுப்பினராக இருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.



# அரசு மருத்துவமனையில் அமைச்சர் திடீர் ஆய்வு

**உடுமலை, பிப். 15-**

உடுமலை அரசு மருத்துவமனையில் அமைச்சர் மா.சுப்பிரமணியன் திடீர் ஆய்வு மேற்கொண்டது அங்கு பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

திருப்பூர் மாவட்டம் உடுமலை அரசு மருத்துவமனைக்கு தினமும் உடுமலை மற்றும் சுற்றுவட்டார கிராம மக்கள் , மலைவாழ் மக்கள் வந்து சிகிச்சை பெற்று செல்கின்றனர். இந்தநிலையில் நேற்று திடீரென தமிழ்நாடு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் உடுமலை அரசு மருத்துவமனையில் திடீரென ஆய்வு பணியில் ஈடுபட்டார். மருத்துவமனைக்குட்பட்ட அவசர சிகிச்சை பிரிவு, மகப்பேறு பிரிவு, உணவு தயாரிக்கும் இடம் உள்பட பல்வேறு பகுதிகளில் ஆய்வு மேற்கொண்டார். அப்போது மருத்துவமனையில் அவசர சிகிச்சை பிரிவில் காயம் அடைந்தவருக்கு செவிலியர் சிகிச்சை அளிக்காமல் மருத்துவ பணியாளர் சிகிச்சை அளித்து கொண்டிருந்ததை பார்த்து அதிர்ச்சியடைந்தார். உடனே செவிலியரை அழைத்து அறிவுரைகள் கூறி சிகிச்சை அளிக்க உத்தரவிட்டார். மேலும் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் எந்திரம் பராமரிப்பு இல்லாமல் இருந்தது குறித்து மாவட்ட மருத்துவ இயக்குனரிடம் கேட்டறிந்தார். மாதந்தோறும் அரசு மருத்துவமனைக்கு வருகை புரிந்து அனைத்து பகுதிகளையும் ஆய்வு செய்ய வேண்டும் என அறிவுறுத்தினார்.